கல்கி

KALKI 12-5-1974 50 காசு



எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?




இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்



பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உமக்கே

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர் —

மேனியிலே அதி நுட்பமான பகுதி- உங்கள் முகத்தின் சருமம்: பச்சிளம் தளிர் போன்ற அதனைப் பாதுகாக்கத் தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனியைக் காப்பாற்றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மையோடு குளுமையாக வைத்திருப்பதற்கு — ஜான்ஸன்ஸ் பேபி பவுடர். எங்கெங்குமே, எழில்கொஞ்சும் இளம் செல்வியர் உபயோகிக்கும் பவுடர்.


பிறந்த நாளைய பிஞ்சு மென்மையோடு
உங்கள் மேனி மிளிரப் பேருதவி

*Johnson & Johnson**




லின்டாஸ்-J&J. 4-140 TM


சாலைப் பாதுகாப்புக்கு CD-TVS ஒரு சின்னமாக விளங்குவது எப்படி?











ஹெவி வண்டிகளில் CD-TVS தயாரிப்புகளான காற்றழுத்த பிரேக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் சாலைகளில் முன்னைவிடப் பத்திரமாகச் செல்லலாம்.

நிறுத்த வேண்டிய இடத்திலும், நினைத்த உடனேயும் வண்டிகளை நிறுத்த காற்றழுத்த பிரேக்குகள் உதவுவதால், பாதசாரிகள் பயமின்றிச் சாலைகளில் செல்ல முடிகிறது.

விபத்துக்கள் ஏதுமின்றி, குறித்த நேரத்தில் பஸ்கள் ஊர் விட்டு ஊர் போய்ச் சேருவதால், பிரயாணிகள் கவலையின்றிப் பயணம் செய்ய முடிகிறது.

ஸ்கூல் பஸ்களில் காற்றழுத்த பிரேக்குகள் பொருத்தப்பட்டுள்ளதால் பள்ளி செல்லும் குழந்தைகள் பத்திரமாகச் செல்ல முடிகிறது.

காற்றழுத்த பிரேக்குகள் விரைவிலும், எளிதாகவும் இயங்குவதால் வண்டி ஓட்டுபவர்கள் பத்திரமாகவும் கவலை இன்றியும் வண்டிகளை ஓட்டிச் செல்ல முடிகிறது.

வண்டி சொந்தக்காரர்களுக்கோ காற்றழுத்த பிரேக்குகளினால் கவலை குறைகிறது. விபத்துக்கள் குறைவதால் லாபமும் அதிகரிக்கிறது.

காற்றழுத்த பிரேக்குகள் இப்பொழுது உலகெங்கும் உபயோகிக்கப் படுகின்றன. அவை திறன் வாய்ந்தவை. சட்டென்று இயங்குபவை. இயக்கவும் எளிதானவை. எனவே காற்றழுத்த பிரேக்குகள் அதிக நம்பகமானவை, பூரணப் பாதுகாப்பானவை.

இந்தியாவில் தயாராகும் நவீன கமர்ஷியல் மற்றும் ஹெவி வண்டிகளில் — பஸ்கள், லாரிகள், டிரெய்லர்கள், டிராக்டர்கள், எர்த் மூவர்கள் ஆகியவற்றில் — காற்றழுத்த பிரேக்குகளே பொருத்தப்பட்டுள்ளன.

CD-TVS ஃபுல்-ஏர் மற்றும் ஏர்-அஸிஸ்ட் பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களையும், அவற்றுக்கான அசல் உதிரி உறுப்புகளையும் தயாரிக்கிறார்கள்.

CD TVS

சாலைப் பாதுகாப்புக்கு
ஒரு சின்னம்

சுந்தரம்-க்ளேட்டன் லிமிடெட்

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
பாடி, சென்னை 600 050

FDS SC 1965 TAM A

கல்கி பொருளடக்கம்

ஆனந்த, சித்திரை 29 — மே 12, 1974



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00


நினைவில் நிற்கும் நேரங்கள்
பின்னி அறிந்திடும், நீங்கள் எப்படித் தோற்றமளிக்க விரும்புவீர் என்பதை
Interpub/BB/47/74 tam

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 41

வீண் பிரயாசை!

நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த ஏதாவது வழி செய்ய வேண்டும் என்ற ஞானோதயம் ஏழு மாதங்களாகத் தூங்கிக்கொண்டிருந்த புதிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது! நாட்டின் பல பகுதிகளில் கலகங்களும், ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும், போலீஸ் தடியடிப் பிரயோகங்களும், சட்டசபை மறியல்களும் ஏற்பட்ட பிறகாவது, இவ்விஷயத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குச் சுரணை ஏற்பட்டதே என்று வேண்டுமானால் ஓரளவுக்குத் திருப்தி கொள்ளலாம்.

ஒரு விசேஷக் குழுவை அமைத்து, நிலைமையை ஆழ்ந்து பரிசீலித்து, ஒரு மாதத்துக்குள் நிலைமையைச் சீராக்க என்ன நடவடிக்கைகள் தேவை என்பதற்குச் சிபாரிசுகள் செய்ய வேண்டும் என்று இந்தக் குழுவுக்குக் கட்டளை இடப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் எட்டு அமைச்சர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். காங்கிரஸ் கட்சியின் இடதுசாரித் தீவிரக் கொள்கையுடைய சிலரும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய கொள்கைகளும், சிந்தனைப் போக்குகளும்தான் நாட்டின் பொருளாதாரத்தை இது வரையிலும் நடத்திச் சென்றிருக்கின்றன. இந்தக் கொள்கைகளின் பிரதான அம்சங்கள், சர்க்கார்த் துறை படிப்படியாக உற்பத்தியிலிருந்து விநியோகம் வரை விரிவடைவது; எதையும் அரசுடைமையாக்குவது; அதாவது, உற்பத்தி பெருக வகை செய்யாவிட்டாலும், அனுபவசாலிகளான தொழில் அதிபர்களை ஊக்கம் குன்றச் செய்வது; பெர்மிட் லைசென்ஸ் முறைகளும், கட்டுப்பாடுகளும் புகுத்துவது; திட்டங்கள் என்ற பெயரிலும் மக்கள் க்ஷேம நல வாழ்வு என்ற பெயரிலும் அளவின்றி வீண் செலவுகள் செய்யப்படுவது; செலவுகளைச் சரிக்கட்ட மேன் மேலும் வரி விதிப்புகள்; இப்படிப் பலப் பல.


இவற்றின் கூட்டு விளைவாகத் தோன்றியுள்ளவைதான் இப்போது நாட்டில் காணப்படும் விலைவாசி உயர்வும், வேலையின்மையும், லஞ்ச ஊழலும் ஒழுங்கீனங்களும் மற்றும் இதர பல குறைபாடுகளும். இவை எல்லாம் திடீரென்று தோன்றிவிடவில்லை என்பது உண்மையே. பல ஆண்டுகளாகச் சிறுகச் சிறுக வளர்ந்து, இப்போது பெரிய அளவில் மக்களுக்குக் கவலை தரும் அளவுக்குப் பரிணமித்துவிட்டன.

இதற்கெல்லாம் காரணம் இப்போது காரியக் கமிட்டி அமைத்துள்ள குழுவில் இடம் பெற்றுள்ள அமைச்சர்களும் அவர்களை ஊக்குவித்துக் கொறடா போல இயங்கும் இடதுசாரிக் கூட்டமும்தான்.

சீரழிவுக்குக் காரணமாகிய இவர்களையே கொண்டு நிலைமையைப் பரிசீலிக்கச் செய்தால் அவர்களிடமிருந்து உருப்படியான என்ன ஆலோசனைகளைப் பெற முடியும்? தங்கள் கொள்கைகள் பலனளிக்கவில்லை என்பதை ஒப்புக் கொண்டு, அவற்றை மாற்றிக் கொள்ள அவர்கள் முன்வருவார்களா? இதை அவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா? அவர்கள் எல்லோரும் அரசியல்வாதிகள். பதவியில் இருப்பவர்கள். கொள்கைகளில் தவறில்லை; நடவடிக்கைகளில்தான் வேகம் வேண்டும் என்றுதான் அவர்கள் நினைப்பர். சீர்கேட்டுக்கு எதிர்க்கட்சிகள் மீது பழி போடலாமா, உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களும் உற்பத்தி பெருகச் செய்வதில் போதிய உற்சாகம் காட்டவில்லை என்று அவர்களைக் குற்றம் கூறலாமா? என்று குற்றவாளியாக யாரை ஆக்கலாம் என்பதில்தான் கவனம் செல்லும்.

உண்மையிலேயே நாட்டில் பொருளாதார நிலைமைக்குப் புத்துயிரளித்துப் பலமடையச் செய்ய வேண்டுமானால், தொழில் அனுபவமும், பொருளாதாரத் துறையில் தேர்ந்த அறிவும், துடிப்பும் உள்ள நிபுணர்களைக் கலந்து ஆலோசித்தால்தான் உருப்படியான சிபாரிசுகள் உருவாகும்.

காங்கிரஸ் கமிட்டி இப்போது எடுத்துள்ள நடவடிக்கை வீண் பிரயாசையே!


ரயில்வே ஸ்டிரைக்
அரசு
மக்கள்
ஊழியர்


மாநில சுயாட்சி
தி.மு.க



செய்திகள் பல; சிந்தனைகள் சில....



கைத்தறிக் கண்காட்சி

ஆண்டுதோறும் நடைபெற்றுவந்த கைத்தறிக் கண்காட்சி சென்ற ஆண்டு மின்சார வெட்டு காரணமாக ரத்து செய்யப் பட்டிருந்தது. மின்சார நிலை திருப்திகரமாக இல்லாதிருந்தும் இந்த வருஷம் எழும்பூரில் ஏப்ரல் 28ந் தேதியிலிருந்து மே மாதம் 12ந் தேதிவரை கைத்தறிக் கண்காட்சியைச் சொற்பொழிவுகளோடு நாடகங்களும் நடத்திச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். தமிழக முதல்வர் இக் கண்காட்சியைத் தொடங்கி வைத்திருக்கிறார். கைத்தறித் துணிகளுக்குப் பத்துச் சதவிகித விற்பனைச் சலுகையும் வழங்கப்பட்டிருக்கிறது.

''பங்களா தேசம் 13.65 லட்சம் மதிப்புள்ள லுங்கிகளை அனுப்பி வைக்கக் கேட்டிருக்கிறது. லண்டனிலிருந்து கர்சீப், பாப்லின், பெட்ஷீட்கள், அலங்காரத் துணிகள் இவற்றுக்குப் பெரிய ஆர்டர் கிட்டியுள்ளது. கொரியாவிலிருந்து 80,000 டஜன் டவல்கள் அனுப்ப ஆர்டர் வந்திருக்கிறது'' என்று கைத்தறித் துணிகளுக்கு அயல்நாட்டுக் கிராக்கிகளை விளக்கினார் கைத்தறித் துறை டைரக்டர் திரு சுவாமிநாதன். சுற்றுலா வரும் அயல்நாட்டுப் பயணிகளுக்காக ஒரு நிரந்தரக் கண்காட்சி சாலையைக் கைத்தறி நிலயத்தில் நிறுவவிருக்கும் யோசனையையும் அவர் தெரியப்படுத்தினார். கைத்தறித் துணிகளை ஆதரிப்பதால் எத்தனையோ ஏழைக் குடும்பங்களை ஆதரித்த புண்ணியம் கிடைக்குமே!

சாடல்ல, உண்மை!

கயிறு ஏற்றுமதி சரித்திரத்திலேயே முதல் தடவையாக 15.5 கோடி ரூபாய் சம்பாதித்துத் தந்திருக்கிறது. 27,187 டன் கயிறு 1973–74ம் வருஷத்தில் ஏற்றுமதியாகியிருக்கிறது.

இலங்கையும் இந்தியாவோடு கயிறு ஏற்றுமதியில் போட்டியிடுகிறது. ''கன்யாகுமரி மாவட்டத்தில் இந்தக் கயிறு திரிக்கும் தொழில் அபிவிருத்தியடையச் சாதனங்கள் உள்ளன'' என்கிறார் கயிறு போர்டு தலைவர் திரு ஆர். மேனன். போட்டிக்கு நடுவில் கடுமையான உழைப்பும் முயற்சியும் இருந்தால் மேலும் பலன் அடைய வழியுண்டு.

திணிக்கலாமா?

தமிழ் நாட்டில் உள்ள கோயில்களில் தமிழில்தான் அர்ச்சனைகள் செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவு ரத்து செய்யப்பட மாட்டாது என்று முதல்வர் திரு கருணாநிதி தெளிவுபடுத்தியுள்ளார். தமிழுக்கும் தெய்விகத் தன்மை உண்டு என்பதை நிலைநாட்டவே இந்தச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்றும் விளக்கம் கூறியுள்ளார். இதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் பழைய சம்பிரதாயப்படி ஸம்ஸ்கிருத மொழியிலேயே அர்ச்சனைகள் வேண்டும் என்று விரும்புவோர்களின் உரிமை மறுக்கப்படுவதை ஆட்சேபிக்கத்தான் வேண்டும். ஒரு புதிய முறையை அதை விரும்பாத மற்றவர்கள் மீது திணிப்பதும் முறையாகாது. ஜனநாயகப் பண்பும் ஆகாது. தமிழில் அர்ச்சனை செய்யும்படி கோருபவர்களுக்குத் தமிழிலேயே அர்ச்சனைகள் செய்யவும், சம்பிரதாயப்படி சம்ஸ்கிருதத்தில் அர்ச்சனைகளைச் செய்ய வேண்டுபவர்களுக்கு அவ்விதமே செய்யவும் ஏற்பாடு அமைவது தான் அரசுக்கு நேர்மை. தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள் தமிழ் நாட்டு மக்கள் மட்டுமே வழிபடும் கோயில்கள் அல்ல. வடநாட்டவர்கள் பலர் இக்கோயில்களுக்கு வருகின்றனர். அவர்களில் பலர் சம்பிரதாயப் பண்டும் முறைகளும் இங்கே அனுஷ்டிக்கப்படுகின்றன என்பதற்காகவே வருகின்றனர். இதை மாற்றுவது அவர்களை எல்லாம் தமிழ் நாட்டுக் கோயில்களுக்கு வரவே வேண்டாம் என்று தடுப்பதற்கு ஒப்பாகும். அகில இந்தியாவிலும், வடமொழி அர்ச்சனைகளே உள்ளன. கன்னட, தெலுங்கு, மலையாள, குஜராத்தி, ஹிந்தி அர்ச்சனைகள் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இதனால் அம்மொழிக்

குழந்தைகள் சித்திரப் போட்டி



சோவியத் தூதரகக் கலாசாரப் பிரிவும், இந்திய - சோவியத் கலாசாரக் குழுவும் இணைந்து நடத்தும் குழந்தைகள் வண்ணம் தீட்டும் ஓவியப் போட்டி.

இந்த ஓவியப் போட்டியில் 8 முதல் 12 வயது வரையிலுள்ள குழந்தைகள் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

சென்னை கஸ்தூரிரங்க அய்யங்கார் ரோட்டிலுள்ள சோவியத் கலாசார இல்லத்தில், இந்தப் போட்டி 20-5-1974ல் காலை 9 மணிக்கு நடைபெறும்.

போட்டியில் வென்றவர்களுக்கு 1-6-1974ல் குழந்தைகள் தினத்தன்று இதே இல்லத்தில் மாலை 6-00 மணிக்குப் பரிசளிப்பு விழா நடைபெறும்.

காரர்களுக்குத் தங்கள் தாய்மொழியிடம் பற்றில்லை என்று அர்த்தமா? தேசம் முழுவதும் ஹிந்து மதம் பொதுவாயிருப்பதால், கோயில் வழிபாடும் ஒரு பொது மொழியில் நடக்கிறது. தமிழர்கள் தேசிய உணர்வைவிட அதிகமாகச் சொந்த மொழியுணர்வுள்ளவர் என்ற எண்ணத்தைப் பிற மாநிலத்தவர்களுக்கு நாம் தோற்றுவிப்பது ஐக்கியத்துக்கு உகந்ததல்ல. கோயில் என்பது மொழிச் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட இடமாகவே இருக்க வேண்டும்.

தமிழின்பால் தமக்குள்ள அன்பினால்தான் இந்த உத்தரவே தவிர, இதர மொழியின் மீது உள்ள வெறுப்பு காரணமல்ல என்று மேலும் ஒரு விளக்கம் கூறியுள்ளார் முதல்வர். எல்லாருமே இதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஒருவருடைய அன்பை மற்றவர்கள் மீது வலுக் கட்டாயமாக அதிகாரத்தை உபயோகப்படுத்தித் திணிப்பதற்கு முதல்வருக்கும்கூட உரிமை இல்லை என்றுதான் கருத வேண்டும்.

கோரிக்கைகளினால் எவ்வளவு செலவு ?

ரயில்வே தொழிலாளர்களின் கோரிக்கைகள் அனைத்தும் ஏற்கப்பட்டால் ஆண்டுக்கு ஐந்நூறு கோடி ரூபாய் அதிகப்படியாகக் கொடுபட வேண்டியிருக்கும். இவ்வளவையும் கொடுப்பதாக ஒப்புக் கொண்டால், ரயில்வே வருமானத்தை அதிகரிக்கப் பிரயாணிகள் கட்டணங்களையும், சரக்குகள்மீதுள்ள கட்டணங்களையும் உயர்த்தவேண்டும். இந்தச் சுமையை, இடையேயுள்ள அந்தந்தக் கட்டங்களில் யார் யார் தாங்கினாலும் கடைசியில் பொதுமக்கள் தலையில்தான் இறங்கும். இப்போதுள்ள நெருக்கடியான பொருளாதார நிலையில் இந்தப் பெரும் சுமையை மக்கள் தலையில் சுமத்துவது தகாது. இதை அமைச்சர் மிச்ரா தெளிவுபடுத்தியுள்ளார்.

எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்வது சாத்தியமில்லை என்பதனால் சிலவற்றை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஒப்புக் கொண்ட இனங்களினால் ஆண்டுக்கு ரூ. 70 அல்லது ரூ. 80 கோடி அதிக செலவாகும். சம்பளக் கமிஷன் சிபாரிசுகள் அமல் நடத்தப்படும்போது மேலும் 170 கோடி ரூபாய் அதிகப்படியாகச் சம்பள விகிதங்கள் கொடுக்கவேண்டி வரும். இவை மட்டுமே 1973–74 ஆண்டு விகிதங்களைக் காட்டிலும் நாற்பது சதவீதம் அதிகமாகக் கொடுபட வேண்டும். ரயில்வே பொருளாதாரத்தை நோக்கும்போது இவ்வளவுதான் அதிகப்படியாகக் கொடுக்க முடியும் என்று தெரிகிறது. சலுகைகள் என்ற வகையில், நியாய விலையில் உணவுப் பண்டங்கள் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் புள்ளி விவரங்களைத் தொழிலாள நண்பர்கள் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் இந்திய ரயில்வேயின் சொந்தக்காரர்களாகிய நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தொழிற் பேட்டைகள்

ஜனநாயக சோஷலிஸம் என்ற கற்பனையில் மிதந்து வரும் ஆட்சிபீடத்தினர் விவசாயத்தில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்த கிராமவாசிகளின் வாழ்வைக் குலைத்து விட்டனர். நில உச்சவரம்பு என்ற திட்டம் நிலத்தின் மீதுள்ள பற்றைக் குலைத்து விட்டது. கிராம மக்களின் வருவாயும் மிகவும் பாதிக்கப்பட்டதால் நகர்ப்புறத்துக்கு வந்தால் நல்லபடியாக வயிறு கழுவ முடியும் என்று நம்பிக் கிராமங்களை வெறிச்சோட விட்டு நகர்ப் புறங்களை நோக்கி வருகிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கிறது. இந்த நிலையில் நாட்டில் கொலை, களவு முதலிய செயல்கள் பெருகிவிட்டன.

ஓரிடத்தில் அதிகாரங்கள் குவிவது போல் ஓரிடத்தில் மக்கள் குவியக்கூடாது என்பதை உணர்ந்து செயல்பட்டால், இந்தக் குற்றங்கள் குறைய வழியுண்டு.

தமிழக முதலமைச்சர் பத்து கிராமங்களுக்கு ஒரு தொழிற்களம் ஏற்படுத்தி, நகர்ப்புறங்களை நோக்கி வரும் கிராம மக்களுக்கு அவர்கள் இருக்குமிடங்களுக்கு அருகிலேயே நல்வாழ்வு கிட்ட வழி செய்ய வேண்டும் என்று கூறியிருப்பது நம்பிக்கை ஊட்டுவதாயிருக்கிறது.

தமிழ் நாட்டில் பல இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை ஓர் அளவுக்கு உபயோகமாகும்படி இயங்க வகை செய்தாலே நல்ல பலன் கிடைக்கலாம்.

ராஜாஜி சிந்தனை

அதிகமாகச் சத்தம் போட்டுப் பேசியே நாம் பழகி விட்டோம். இருவர் பேசிக் கொண்டிருந்தால் அவர்களுக்குள் ஒருவர் பேசுவது மற்றவருக்குக் கேட்கக்கூடிய அளவு உரத்துப் பேசினால் போதுமே! அதைவிட உரத்துப் பேசுவானேன்? பேச்செல்லாம் ரகசியமாயிருக்க வேண்டுமென்பது கருத்தல்ல. மற்றவர்களும் கேட்க வேண்டுமானால் அருகிலே வந்து கேட்டுக் கொள்ள வேண்டியதுதான். அளவுக்கு மிஞ்சிய கூச்சல் கூடாது என்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன். வீட்டிலும் பிற இடங்களிலும் இரண்டு மூன்று பேர் சேர்ந்து கூச்சல் போட்டுப் பேசுவது கேட்க அருவருப்பைத் தருகிறது. இந்த விஷயமும் நமது சம்பிரதாயப் பண்பாட்டைச் சேர்ந்ததாகும். சிறிது சிறிதாக இவற்றையெல்லாம் திருத்திக் கொள்ள வேண்டும்.



இப்போது!
நீடித்த அழகு
நவீன நாகரீக வசதி
இரண்டையும் உங்கள்
சமையலறைக்குச் சேர்ப்பது
ஹரால்ட்வேர்
சமைத்தவுடன் பரிமாறும் பாத்திரங்கள் உபயோகிப்பதில்
நீங்கள் பெருமையடைவீர்கள்!
ஹரால்ட்வேர்-சமையலறையானாலும் சரி சாப்பாட்டு
மேசையானாலும் சரி...ஏற்றமிகு எழில் சேர்க்கும்.
ஹரால்ட்வேர்-கண்ணுக்கு-கட்டுறுதி வாய்ந்தது.
ஹரால்ட்வேர்-இதில் அதிகப்படி கனமுள்ள அடித்தளம் இருக்கிறது.
ஹரால்ட்வேர்-இதில் ஸ்டாண்டாகவும் பயன்படும்
மூடியிருக்கிறது. உங்கள் மேசையில் சூட்டுக்கறை
படியாமல் காக்கிறது.
தேவைப்பட்ட போது, மூடியை ஸ்டாண்டாகவும் பயன்படுத்தலாம்.
ஹரால்ட்வேர் ரகம் ஃப்ரையிங் பேன்ஸ், சாஸ்பேன்கள்,
காஸராஸ்கள், கெட்டில்கள் பல சைஸ்களில் கிடைக்கும்.
எல்லாத் தருணத்திற்கும் ஏற்றபரிசு.
IS:21
SIC
தயாரித்துவிற்பனை செய்வோர்
லாலுபாய்
அமிசந்த் பி லி.
225-27 ஜே தாதாஜி
ரோடு,
பம்பாய் 400 007
மேலும் விவரமறிய உங்கள் ஹரால்ட்வேர் வியாபாரியை அணுகுக அல்லது ஹரால்ட்வேர்
போல்டருக்கு எழுதுக.
தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு விநியோகஸ்தர்கள்
போபட் ஜமால் அண்ட் சன்ஸ் ஜமால் பில்டிங் 182,
Rattan Batra/LA/TM/64-AR

அம்பாளை உபாசிப்பதன் பலன் — 5

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசார்ய சுவாமிகள்

அம்பாளை உபாசிப்பதால் பதிபக்தி உண்டாகும். ஏனென்றால் அவளே மகா பதிவிரதையாக இருக்கிறாள். பிரியம் வைக்க முடியாதவரிடம் ஒரே பிரியமும், விசுவாசமுமாக இருப்பதுதான் விசேஷம். சகல ஐசுவரியமும் உள்ள வைகுண்டத்தில் அலங்காரப் பிரியராக ரூபலாவண்யத்தோடு இருக்கிற மகாவிஷ்ணுவிடத்தில் மகாலக்ஷ்மி பிரியமாக இருப்பதில் சுவாரஸ்யம் இல்லை. மயானவாசியாக, புலித் தோலைக் கட்டிக் கொண்டு, கபால மாலை போட்டுக் கொண்டிருக்கிற பரமேசுவரனிடத்தில் அம்பாள் மாறாத அன்போடு இருப்பதே விசேஷம். தாக்ஷாயணியாக அம்பாள் பிறந்தபோது, அவளது பிதாவான தக்ஷன் ஈசுவரனை மதிக்கவில்லை. இதைக் கண்டு பொறுக்க முடியாத தாக்ஷாயணி அவனுடைய யாகசாலையில் 'என் பர்த்தாவை மதிக்காத தக்ஷனுக்குப் பெண்ணாகப் பிறந்து, தாக்ஷாயணி என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிற இந்தச் சரீரமே எனக்கு வேண்டாம்' என்று பிராணனை விட்டாள். யாக குண்டத்திலேயே உயிரைத் தியாகம் செய்தாள் என்று கதை. தாக்ஷாயணிக்கு 'ஸதி' என்றே பெயர். இதனால்தான் வெள்ளைக்காரர்கள் பதிவிரதத்தின் உச்சியாக உடன்கட்டை ஏறுகிறதை 'Suttee' ஸதீ — என்றே சொன்னார்கள். 'ஸதி' என்றாலே 'கற்புக்கரசி' என்று அர்த்தமாகிவிட்டது. அதற்கப்புறம் பர்வதராஜ புத்திரியாக ஜனித்து, பார்வதி என்று பேர் பெற்றாள். சம்ஹாரமூர்த்தியும், கோர ச்மசானவாசியுமான பரமேசுவரனையே மறுபடியும் பதியாக அடைய வேண்டும் என்று சின்னஞ்சிறு வயசிலேயே உக்கிர தபஸ் செய்தாள் பார்வதி. கடைசியில் ஈசுவரனைக் கல்யாணம் செய்து கொண்டாள். இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட விசேஷத்தால், ''கோர கோர தரேப்ய :'' என்று வேதம் சொல்கிற கோர ருத்திரனும் பரம மங்கள ஸ்வரூபியாக, சிவமாக ஆனார். அவருக்கு 'சிவா' என்ற பேர் உண்டாயிற்று.

அம்பாளைவிட மங்கள வஸ்து இல்லை. 'ஸர்வ மங்கள மாங்கல்யே' என்பார்கள், அவளுடன் சேர்ந்திருப்பதாலே பரமேசுவரனும் மங்கள ஸ்வரூபியாகிறார். மங்களமே வடிவான அம்பிகை மகா சுமங்கலி. அவளுடைய ஸௌமங்கல்யத்துக்கு எப்படிப் பங்கம் உண்டாக முடியும்? இதனால்தான் ஆலஹால விஷம் சாப்பிட்டும்கூடப் பரமேசுவரன் சௌக்கியமாகவே இருக்கிறார் என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் கூறுகிறார். காதில் தோடு, நெற்றியில் குங்குமம், கழுத்தில் கருகுமணி இத்யாதி சுமங்கலி லக்ஷணம். அம்பாளும் காதில் தாடங்கம் அணிந்திருக்கிறாள். சாதாரண பனை ஓலையைத்தான் தாடங்கமாகப் போட்டுக் கொண்டிருக்கிறாள். 'தாலீ பலாச தாடங்கம்' என்று இதை ஸ்தோத்திரங்கள் சொல்கின்றன. பழைய காலத்தில் எல்லோருமே படாடோபம் இல்லாமல் எளிமையிலேயே சுபிட்சமாக இருந்தார்கள் என்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தமாகத் தோன்றுகிறது. அம்பாளைப் போலவே எல்லா ஸ்திரீகளும் பனை ஓலைதான் போட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். இதனால்தான் பிற்காலத்தில் வைரத் தோடு போட்டுக் கொள்கிற டாம்பீகம் வந்தபின் கூட, அதை 'வைர ஓலை' என்றே சொல்கிற வழக்கம் உண்டாயிருக்கிறது. (இந்த இடத்தில் இன்னொன்று தோன்றுகிறதையும் சொல்கிறேன். 'வைர ஓலை' என்கிற மாதிரியே 'வெண்கலப் பானை' என்றும் ஒரு வார்த்தை வழங்குகிறது. 'பானை' என்றால் களிமண்ணைச் சுட்டுச் செய்த பாண்டம்தான். ஆதியில் எல்லாரும் சட்டிப் பானைதான் வைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். பிற்பாடு வெண்கலப் பாத்திரம் வந்த பிற்பாடும் பழைய 'பானை' என்கிற பெயர் ஒட்டிக் கொண்டது!) அம்பாளுடைய தாடங்கத்துக்கு வருவோம். மங்களச் சின்னமான தாடங்கம் அவள் காதிலிருந்து இறங்கக் கூடாது. அப்படியானால் பரமேசுவரன் எக்காலத்திலும் ஜீவிக்கத்தான் வேண்டும். இதனால்தான் அவர் விஷம் உண்டும்கூட அது அவரைப் பாதிக்கவில்லை. 'இது உன் தாடங்க மகிமையம்மா!' என்கிறார் ஆசாரியாள்.

விஷத்தைச் சாப்பிட்டும் பரமேசுவரன் சௌஸ்தமாக இருப்பதற்குக் காரணம், எந்த விஷத்தையும் முறிக்கிற மருந்தாக, அமிருதமாக, அம்பிகை அவரோடு இருப்பதுதான். வேத வாக்கியமான 'ஸ்ரீருத்ர'த்தில் இப்படித்தான் சொல்லியிருக்கிறது. 'ருத்ரனுக கோரமாக இருக்கிற உனக்கு 'சிவா' என்று ஒரு மங்கள சரீரம் இருக்கிறது. இந்த 'சிவா'தான் லோகம் முழுவதற்கும் மருந்து. (சிவா விச்வா ஹபேஷஜீ) லோகத்துக்கு மட்டும்தான் அது மருந்தா? இல்லை, ருத்ரனை உனக்கும்கூட 'சிவா' தான் மருந்து (சிவா ருத்ரஸ்ய பேஷஜீ) என்று வேதம் சொல்கிறது. கோர ஸ்வரூபியையும் தன் பாதிவிரத்யத்தால் பரமமங்களமாக ஆக்கி, என்றும் ஜீவிக்கச் செய்கிறவளை ஸ்திரீகள் ஆராதித்தால் பதிபக்தியும், தீர்க்க ஸௌமங்கல்யமும் சித்திக்கும்.

சோழி கிளிஞ்சல்

கௌரி முருகு



மிகுந்த செல்வாக்கும் குறைந்த வயதுமுள்ள மத்திய மந்திரி ராய் சாஹப்பின் அரண்மனையை விட ஆடம்பரமான பங்களாவுக்குள் அவருடைய விலையுயர்ந்த வெளிநாட்டுக் கார் 'டயோட்டா' வேகமாக வந்து நின்றது.

கூர்க்கா வந்து காரின் கதவைத் திறந்து விட்டான். மந்திரி ராய் சாஹப்பின் இளம் மனைவி ரஜனியை கைத்தாங்கலாக இரண்டு, மூன்று பெண்கள் அழைத்து வந்தார்கள்.

வேலைக்காரர்கள் என்ன, என்ன என்று பரபரத்தார்கள். ரஜனியைப் பிடித்துக் கொண்டு வந்த பெண்களில் ஒருத்தி, ''ஒன்றும் இல்லை. மந்திரி இருக்கிறாரா?'' என்றாள்.

''அவர் அலுவலறையில் இருக்கிறார்'' என்றான் ஒரு வேலையாள். ''அவரை அழைத்து வாருங்கள்... ரஜனியை அவள் படுக்கை அறைக்குக் கொண்டு போகிறோம்'' என்று சொல்லிவிட்டு, அவள் அறைக்குக் கொண்டு போய் அவளைப் படுக்க வைத்தார்கள்.

ரஜனியின் எட்டு வயதுப் பையனும் ஆறு வயதுப் பெண்ணும் அறைக்குள் ஓடி வந்தார்கள். ''அம்மாவுக்கு என்ன?'' என்று அவளைக் கட்டிக் கொண்டார்கள். அந்தப் பெண்கள் ''ஒன்றுமில்லை; பயப்படாதீர்கள்'' என்று பிள்ளைகளைச் சமாதானப்படுத்திக் கொண்டிருக்கும்போதே ராய் சாஹப் தம் கனத்த உடலைச் சுமந்து கொண்டு 'ரஜனிக்கு என்ன?' என்று அலங்க மலங்க ஓடி வந்தார்.

''இட்'ஸ் நத்திங், மந்திரி சாஹப்... உட்காருங்கள், சொல்கிறேன்'' என்றாள் அந்தப் பெண்களில் ஒருத்தி. ''ரஜனி, ரஜனி'' என்று கலவரத்தோடு அவளைத் தொட்டுக் கூப்பிட்டார் ராய்.

''அவளை எழுப்பாதீர்கள், நன்றாக ஓய்வு எடுக்கட்டும்'' என்று அந்தப் பெண்கள் தடுத்தார்கள்.

''என்ன நடந்தது சொல்லுங்கள்'' என்றார் பொறுமை இழந்தவராக.

''எங்கள் சங்கத்தில் மதராஸிலிருந்து வந்திருந்த ஒரு பெரியவர் சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார். நாங்கள் அதைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே ரஜனி நாற்காலியிலிருந்து சாய்ந்து விட்டாள். நாங்கள் ஓடிப்போய்த் தூக்கி, முதல் சிகிச்சை செய்தோம். டாக்டரை வரவழைத்தோம். அவர் ஒன்றும் இல்லை, சாதாரண மயக்கம்தான், ஓய்வு எடுத்தால் சரியாகி விடும் என்றார். உடனே இங்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டோம்'' என்றாள் அந்தப் பெண்.

எல்லோருடைய கண்களும் ரஜனியின் மேலேயே மொய்த்துக் கொண்டிருந்தன.

ரஜனிக்கு இருபத்தேழு வயது இருக்கும். சுந்தரச் சிற்பமாய்ச்சோர்ந்துகிடந்த அந்தச் சொர்ண மேனி இலேசாக அசைந்தது. வைரத்தின் ஒளி வீசும் வாள் விழிகள் மெல்லத்திறந்தன. பவள இதழ்க்கிடையில் பனி முத்தின் புன்னகை படர்ந்து மலர்ந்தது. அந்தப் பிரைஸ்லெஸ் ஜுவெல்லின் பேரழகுக்குச் செல்வச் செழிப்பு பாலிஷ் போட்டிருந்தது.

''வாட் ஹேப்பண்ட் டு மீ?'' என்றாள்.

''நத்திங் ரஜனி, களைப்பில் மயங்கி விழுந்திருக்கிறாய். இவர்கள் அழைத்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது எப்படி இருக்கிறது?'' என்றார் ராய்.

''கொஞ்சம் தலை வலியாக இருக்கிறது. வேறொன்றுமில்லை'' என்றாள்.

அந்தப் பெண்கள் விடைபெற்றனர்.

ராய் டாக்டருக்குப் போன் செய்தார்.

''எங்கள் கூட்டத்தில் பேசிய தமிழ்ப் பெரியார் ஒரு திருக்குறள் சொன்னார். அந்த 'வெர்ஷன்' எனக்கு நினைவில்லை. கருத்து எனக்குப் பிடித்திருந்தது. அதைப் பற்றி நான் சீரியஸாக எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதுதான் மயக்கம் போட்டு விழுந்து விட்டிருக்கிறேன்'' என்றாள் ரஜனி அமைதியாக.

''அப்படி அவர் என்ன சொன்னார்?'' என்றார் ராய்.

'' அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்களாம்; அன்பு உடையவர்கள் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வார்களாம்.''

'' அதைப் பற்றி நீ ஏன் இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டும் ?''

''சென்ற வாரம் இல்லஸ்டிரேடட் வீக்லி பார்த்தீர்களா ?'' என்றாள் ரஜனி.



"இல்லை; சொல்!"

" மத்திய மந்திரிகளின் வருமானம், பங்களா, கார் எல்லாவற்றையும் பற்றி உள்ள படியே அது மக்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது" என்றாள் சிரித்துக் கொண்டே.

அவள் அப்படித்தான் அடிக்கடி விளையாட்டாகவோ, வினயமாகவோ அவரைக் கிண்டல் செய்வாள். ஆனால் அவர் எல்லாவற்றையும் வேடிக்கையாகவே எடுத்துக் கொண்டு பலமாகச் சிரிப்பார்.

" பத்திரிகைக்காரர்கள் எழுதுவதைப் பற்றி யெல்லாம் கவலைப்படக் கூடாது " என்றார் அவரும் சிரித்தபடியே.

" நீங்கள் மக்களின் வறுமை, வேலையின்மை, சுதந்திரம், ஜனநாயகம் எதைப் பற்றிக் கவலைப்பட்டீர்கள், இதைப் பற்றிக் கவலைப்பட? உங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவும், வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும், உங்கள் குடும்பத்தின் வசதியை வளர்த்துக் கொள்ளவும்தான் உங்களுக்குக் கவலைப்பட நேரம் இருக்கிறது " என்று வருத்தமாகவே பேசினாள் ரஜனி.

" மக்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்று சொல்கிறாய்?"

" எந்த சோஷலிஸம், முற்போக்கு என்று சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறீர்களோ, அந்த சோஷலிஸம், முற்போக்கு ஆகியவற்றின் பொய்ம்மையை அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்க வேண்டுமே என்றுதான் நீங்கள் எல்லாம் கவலைப்படுகிறீர்கள் ?" என்றாள் சூடாகவே.

விஷயத்தின் போக்கைத் திசை திருப்பினார் ராய். "சரி, ரஜனி! ஏதோ ஒருவர் அந்தக் கருத்தைச் சொன்னார் என்று சொல்ல வந்தாயே....."

" அதைத்தான் சொல்கிறேன், நீங்கள் ஏன் இப்படி எல்லாப் பொருளையும் உங்களுக்கே உரிமையாகக் கொண்டு சம்பாதிக்கிறீர்கள்? சேர்த்த சொத்து போதாதா? அவர் இரண்டாவதாகச் சொன்னது போல் என் உடலையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழவே நான் விரும்புகின்றேன்...."

மந்திரி ராய் ஸாஹப்புக்குத் தம் மனச்சாட்சியே மனைவியின் உருவத்தில் பேசுவதாகத் தோன்றியது. அதற்காக அவர் கவலைப்பட முடியுமா ?...

அதற்குள் ராயின் குடும்ப டாக்டர் வந்துவிட்டார்.

" டாக்டர், ரஜனி போன வாரம் மயங்கி விழுந்தது போலவே இன்றும் விழுந்துவிட்டாள்......"

நீண்ட பரிசோதனைக்குப் பிறகு அந்த இன்டர்னல் மெடிசனில் ஸ்பெஷலிஸ்ட் யோசனையோடு சொன்னார். " இந்த ஸிம்டம்ஸ் எல்லாம் போலியோ வியாதியாக இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.



''நல்லதா செகண்ட் ஹாண்ட் ஸ்கூட்டர் விலைக்குக் கேட்டிருக்கேன்னு சிரமத்தைப் பார்க்காமே தள்ளிண்டே வந்தேன். புது பிரேக் பொருத்தி இன்ஜின் புதுசா வாங்கி முடுக்கினால் போதும்...''

மருத்துவ மனைக்கு அழைத்துப் போங்கள். நானும் வருகின்றேன்.''

மருத்துவ மனையில் ரஜனியை இரண்டு டாக்டர்கள் அகர சோதனை செய்தார்கள். அது போலியோ வியாதி அல்ல. அது என்ன? யாருக்கும் தெரியவில்லை.

டாக்டர்கள் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லும்படி ஆலோசனை வழங்கினார்கள்.

ரஜனிக்கு வைத்தியம் செய்வதற்கு மந்திரி ராய் ஸாஹுப்பின் குடும்பம் அமெரிக்காவுக்கு வந்தது.

ரஜனி பாப்டிஸ்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.

அவளை பிரைன் டிரேசிங் செய்தார்கள். இரத்தக் குழாயில் புளுயிட் செலுத்தி டாக்டர்கள் கவனித்தார்கள். ஆர்ட்டெரீஸ் வழியாக புளுயிட் தோளுக்கு வந்தது. கழுத்தில் ஏறியது. மூளைக்குள் சென்றது. புளுயிட் ஒளிப் புள்ளி மூளையின் ரோட் மேப்பில் பயணம் செய்தது. இரத்தக் குழாய்கள் நன்கு தெரியும். டாக்டர்கள் பார்த்துக் கொண்டே வந்தார்கள். திடீரென்று எல்லா வெளிச்சமும் மூளையின் ஒரு பள்ளத்தில் விழுவது தெரிந்தது.

''அவளுக்கு அனியுரிஸம் வியாதி இருக்கிறது, ராய்!'' என்றார் ஒரு டாக்டர். ''நாங்கள் அதை ஆப்பரேட் செய்துவிடுவோம்.''

''அனியுரிஸம் என்றால் என்ன, டாக்டர்?'' ராய் கேட்டார்.

டாக்டர் ஒரு படீகரம் வரைந்து காட்டினார். ''நாங்கள் மூளையில் உள்ள அந்தப் பலவீனமான இரத்தக் குழாயைச் சேர்த்து இணைத்து உறுதிப்படுத்தப் போகிறோம்.''

அது பல டாக்டர்களுடைய திறமைக்கும் அவர்களுக்கு அப்பாற்பட்ட சக்திக்கும் ஒரு டெலிகேட்டான வேலை என்பது ராய்க்குத் தெரியாது.

ஆப்பரேஷன் நடக்கப் போவதைப் பற்றி ரஜனியிடம், ராய் சொல்ல வேண்டும்.

அவள் அறைக்குச் சென்றார். அவளுடைய நீண்டு அடர்ந்த அலைக்கேசம் வெள்ளைத் தலையணையில் விரிந்து கிடந்தது.

ராய் மெல்ல விஷயத்தைச் சொன்னார். ரஜனி அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''ராய் ஹனி... எனக்குத் தலை வலி அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. ஆப்பரேஷன் சீக்கிரம் நடக்கட்டும்'' என்றாள்.

குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்று அழைத்து வரச் சொன்னாள்.

அவளுடைய பிள்ளைகள் கலங்கிய கண்களுடன் வந்தார்கள். இருவரையும் தன் நெஞ்சில் அணைத்துக் கொண்டு, ''இட்மஸ் நத்திங். அழாதீர்கள். சமர்த்தா யிருங்கள். நான் சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிடுவேன்'' என்று அவள் அழுதாள்.

ஆப்பரேஷன் நாள் வந்தது.

ரஜனியின் டெம்பரேச்சரை 27 டிகிரிக்குக் கொண்டு வரும் பொருட்டுக் குளிர்ப் போர்வையினால் அவளைப் போர்த்தி யிருந்தார்கள்.

ஆப்பரேஷன் அறைக்குள் எடுத்துச் சென்றார்கள். அங்கே ஐந்து டாக்டர்கள் கொண்ட ஒரு குழு இருந்தது.

ரஜனியின் அலைக் கேசம் அகற்றப்பட்டது. முகம் மூடப்பட்டது. அவள் மண்டையோட்டுள் டிரில் செய்து துளையிட்டனர். ஒரு பெரிய 'ஸ்கல்'லைப் பெயர்த்து வைத்தார்கள்.

தலைக்கு மேலிருந்த டோம்லைட், மூளையின் மேலிருந்த 'அனியுரிஸம் பல்'லைத் தெளிவாகக் காட்டியது.

டாக்டர்கள் அமைதியாக, கவனமாக வேலையில் ஈடுபட்டனர் — ஒரு டைம் பாமை வெடித்துவிடாமல் அகற்றுவதுபோல்.

ஆனால் அனியுரிஸம் வெடித்தது. இரத்தம் கொட்டத் தொடங்கியது.

டிரான்ஸ்பூஷன்கள் தயார் செய்யப்பட்டன. இரண்டு டாக்டர்கள் ரப்ச்சரைக் கண்டு பிடிக்கப் பெருக்கெடுத்து வழியும் ரத்தத்தை ஸ்பாஞ்சால் துடைத்தனர்.

காலையிலிருந்து இரவு ஒன்பது மணி வரை ரஜனியின் ஆப்பரேஷனை டாக்டர்கள் நடத்தினார்கள். இரத்த இழப்பை ஈடு செய்ய 12 பைன்ட்ஸ் இரத்தம் செலுத்தப்பட்டது.

ரப்ச்சரைக் கண்டுபிடித்து மூடினார்கள். இரண்டு சர்ஜன்கள் அவளை 'இன்டென்சிவ் கேரு'க்கு அழைத்துச் சென்றார்கள்.

டாக்டர்களில் ஒருவர் ராய்ஸாஹுப்பைப் பார்த்துச் சொன்னார்; ''ராய், அவள் அவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்கவில்லை. எவ்ரி திங் வெண்ட் ராங்.''

ராய், ரஜனியைக் கொண்டு செல்லும் வண்டியின் பின்னாலேயே போனார்.

அவளைப் படுக்கையில் கிடத்தினார்கள்.

ராய் குரல் தழுதழுக்க, ''ரஜனி!'' என்று மெதுவாக நம்பிக்கையின்றி அழைத்தார்.

அவள் மெல்லக் கண் விழித்தாள். ''ஹ, ராய் ஹனி!'' என்று கீச்சுக் குரலில் இதழ் அசைத்துச் சொல்லிவிட்டு மீண்டும் இமைகளை மூடினாள். மயக்கமோ — உறக்கமோ?

அந்த உறக்க நிலை பதினெட்டு நாட்கள் நீடித்தது. நாள் முழுதும் நம்பிக்கையும் சோகமுமாக ராய் அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார். பார்லிமெண்ட், பொதுக் கூட்டம், மாநாடு, விழாக்கள் எல்லாவற்றையும், இப்பொழுது அவர் மறந்திருந்தார்.



சிந்தால்
வாக்குறுதி...
*மேனியெழிலுக்கு முழுப் பராமரிப்பு
*புதுமை குன்றாத நறுமணம்
*துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது.

ரஜனியின் தலையைச் சுற்றிப் பேண்டேஜ் கட்டப்பட்டிருந்தது. பச்சைப் பிளாஸ்டிக் குழாய்கள் எங்கெங்கோ சுற்றி வந்தன.

அன்று பதினெட்டாவது நாள். அவள் கண் திறந்து அறையைச் சுற்றிப் பார்வையிட்டாள். ராயைப் பார்த்தாள்.

''ரஜனி'' ராய் கேட்டார். ''டு யு நோ மீ'' அவள் தொண்டையில் டிராச்சியோட்டமி குழாய் இருந்ததால் மிகவும் கஷ்டப்பட்டுப் பேச முயன்றாள். பெரிய புன்னகையோடு, '' நீங்கள் என் ராய் ஹனி'' என்றாள்.

மறுபடியும் துயில் கொண்டாள்.

ராய்க்கு நம்பிக்கை பிறந்தது. கடவுளை வேண்டிக் கொண்டார். ''ரஜனி பிழைத்துக் கொண்டால் உனக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ எல்லாம் செய்கின்றேன் '' என்று மன்றாடினார். தேர்தல் நேரத்தில் தாம் அள்ளிவீசும் நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளைப் பற்றி ரஜனி பலமுறை கேலி செய்தது அவருக்கு நினைவு வரதும், அந்தச் சோகத்தையும் மீறி அவருக்குச் சிரிப்பு வந்தது.

சற்று நேரத்தில் ரஜனியின் இதயம் நின்று விட்டது.

பச்சையான அலை வரிசையோடு ஓர் ஆஸிலேட்டிங் இயந்திரம் அவள் இதயத்தை இயக்க ஒழுங்கு செய்ய ஆரம்பித்தது.

ராய், மனைவியின் பக்கத்தில் துடிக்கும் இதயத்தோடு நிலைகொள்ளாமல் நின்றார்.

காலை 5—30. அவள் விழிகள் திறந்தன; இமைகள் அசையவில்லை.

''அவள் இழப்பைத் தவிர்க்க முடியாது '' என்ற ஒரு டாக்டர் ராயைக் கேட்டார், ''வுட் யூ அக்ரி டு ய ஹார்ட் டிரான்ஸ் பிளாண்ட் ?''

அந்தக் கேள்வி மாலை 4-30 வரையில் அவர் மனத்தைக் குடைந்தது.

டில்லியில் அன்று அவள் மயங்கி விழுந்ததும், மயக்கம் தெளிந்து அவள் சொன்ன வார்த்தைகளும் இப்பொழுது ஒரு புதிய அர்த்தத்துடன், பெரிய உருவத்துடன் அவர் முன்னால் வந்து நின்றன.

''....என் உடம்பையும், பிறருக்கு உரிமையாக்கி வாழவே நான் விரும்புகிறேன்.....''

இன்னொரு சமயம் அவள் சொல்லியிருந்தாள், ''இந்த ஹார்ட் டிரான்ஸ்பிளான்டைப் பற்றி இப்பொழுது நான் படித்துக் கொண்டு இருக்கிறேன். ராய் ஹனி, ஐப் எனி திங் ஹேப்பன்ஸ் டு மீ, லெட் மீ ஹெல்ப் சம்படி எல்ஸ்.''

ராய் ஒரு முடிவுக்கு வந்தார்.

''சரி டாக்டர், எடுத்துக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லிவிட்டு முகத்தை மூடிக் கொண்டு குலுங்கினார்.

அங்கிருந்து இருபது மைலில் உள்ள மியாமி ஹார்ட் இன்ஸ்டிடியூட்டுக்கு ரஜனியின் உடல் ஆம்புலன்ஸில் எடுத்துச் செல்லப்பட்டது. ஆஸிலேட்டிங் மெஷின் அவள் இதயத்தை இயக்கிக் கொண்டிருந்தது.

அவளை ஒரு பெரிய அறைக்குள் எடுத்துச் சென்றார்கள். அங்கே திரையால் தடுக்கப்பட்ட சிறு அறைகள் பல இருந்தன.

அதில் ஓர் அறையில் ஐம்பத்தைந்து வயது மனிதன் பொருத்துவதற்கு மாற்று இதயம் இல்லாமல் செத்துக் கொண்டிருந்தான்.

டாக்டர்கள் ராயிடம், ''யுவர் வைப் இஸ் கிளினிகலி டெட்'' என்றார்கள்.

ராய், ஹார்ட் மெஷினின் பச்சை முகத்தைப் பார்த்தார். ஒரே ஒரு ஸ்டிரெய்ட் லைனைத் தவிர அதில் அலைக் கோடுகள் இல்லை.

அவள் இதயத்தை வேறொரு மனிதனுக்குப் பொருத்துவதற்குப் பதினாறு டாக்டர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இன்னொர் அறையில், ஒரு நோயாளி பொருத்துவதற்கு மாற்று 'கிட்னி' இல்லாமல் இறந்து கொண்டிருந்தான்.

65 வயதான ஓர் அம்மாளுக்கு ஒரு கண்ணும், 35 வயதுப் பெண்ணுக்கு ஒரு கண்ணும் தேவைப்பட்டன.

இதய நோயால் செத்துக் கொண்டிருந்த மனிதனால் அதற்குமேல் காத்துக் கொண்டிருக்க முடியவில்லை. அவன் இறந்துவிட்டான்.

வேறொரு மனிதன் ரஜனியின் இதயத்தைப் பெற்றான். கொஞ்ச நேரத்தில் அவன் நெஞ்சில் அது இயங்கியது.

இன்னொரு ஒரு நோயாளி ரஜனியிடமிருந்து ஒரு 'கிட்னி' கிடைக்கப் பெற்றான்.

அந்த இரண்டு பெண்களும் அவளது இரு கண்களையும் ஆளுக்கொன்றாக அடைந்தனர்.


மந்திரி ராய்ஸாஹப் அவருடைய ரஜனியைக் கொடுத்துவிட்டார். உப்பு நீர் வழிந்தோடும் அவர் கண்களில் ரஜனி ஒரு சரக் கிளிஞ்சலாகத் தோன்றினாள்.

இப்பொழுது அவள் —
சரக் கிளிஞ்சல்,
என்பும் உரியவள்.


★ ★

சென்னை கலைக்கல்லூரி சிற்பக்கலை ஆசிரியர் பி. வி. ஜானகிராமன் புடாபெஸ்டில் சிற்பங்களுக்காக நடைபெற்ற ஒரு சர்வதேசப் போட்டியில் 40,000 ரூபாய் பரிசுத்தொகை பெற்றார். ஆனால் அந்தப் பரிசுத்தொகை சென்னையில் இருக்கும் இந்தச் சிற்பக் கலைஞரை வந்தடையாது. அவர் அந்தக் கம்யூனிஸ நாட்டுக்குச் சென்று அந்த பரிசுத் தொகையை வாங்கி அங்கேயே செலவழித்துக் கொள்ளலாம்! இதற்காக பி. வி. ஜானகிராம் ஹங்கேரிக்குச் சென்று தமக்குக் கிடைத்த பரிசுத் தொகையைச் செலவழிக்க விருக்கிறார்! ஏதோ, அந்த நாட்டுக்குச் சென்றுவரும் வாய்ப்பாவது கிட்டியிருக்கிறதே!

படத்தில் காண்பது ஜானகிராமன் மாடர்ன் ஆர்ட் பாணியில் வடித்த வராக அவதாரச் சிற்பம்.




ரூபி டஸ்ட்டியில் மட்டுமே காணும் மூன்று சிறப்பம்சங்கள்
1. கனைத்தில் கிட்டிடும் பானம்
2. தருவதும் செறிந்த மணம்
3. பெருவதோ கோப்பைகள் அதிகம்
Superb Teas
RUBY DUST
கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தையும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஒரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபி டஸ்ட்.
லிப்டன் ரூபி டஸ்ட்
ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்
LIPTON
LRDC-10 TAM



சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

முப்பத்துமூன்றும் அத்தியாயம்

வரவேற்பு

வாத்திய கோஷத்தையும் ஆரவாரத்தையும் கேட்டு ஆயனரும் அத்தையும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

ஜனக் கூட்டம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில் கூட்டத்திலிருந்து ஒரு தனி உருவம் வெளிப்பட்டு முன்னதாக விரைந்து வந்தது. அந்த உருவத்தைப் பற்றி எவ்விதச் சந்தேகமும் ஏற்பட நியாயமில்லை. குண்டோதரனுடைய உருவந்தான் அது!

குமார சக்கவர்த்திக்கும் பலமான கோபம் உண்டாயிற்று. ஆஹா! இந்த மூடன் என்ன காரியம் செய்தான்? 'குமார சக்கரவர்த்தி வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டார்; இங்கே வந்து ஒதுங்கியிருக்கிறார்!' என்று ஊரிலே சொல்லியிருக்கிறான். இவ்விடம் தங்கும் சொற்ப நேரத்தைச் சிவகாமியுடன் பேசிக் கொண்டு கழிக்கலாம் என்று நினைத்தால், அதற்கு இடமில்லாமல் செய்துவிட்டானே? சிவகாமிக்குச் சொல்ல வேண்டியது, கேட்க வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதே? சைனியமின்றித் தாம் தனித்து வந்திருப்பது பற்றியும், ஆயனரும் சிவகாமியும் தம்முடன் இருப்பது பற்றியும் அவர்கள் என்ன நினைப்பார்கள்? ஆ! இந்த மூடன் குண்டோதரன் எவ்வளவு சந்

கடமான நிலையில் தம்மைக் கொண்டு வந்து வைத்துவிட்டான் !

ஆயினும், அவனிடம் தற்போது கோபம் கொள்வதில் பயனில்லை. நடந்த தவறு நடந்துவிட்டது. எப்படியோ அந்தச் சங்கடமான நிலைமையைச் சமாளித்தாக வேண்டும்.

இப்படிச் சிந்தனை செய்து கொண்டு சற்றுப் பின்னாலேயே மாமல்லர் ஒதுங்கி நின்றபோது, குண்டோதரன் தம்மிடம் வராமல் ஆயனரிடம் நின்று ஏதோ சொல்லுவதைப் பார்த்தார். பிறகு சிவகாமியின் காதோடு ஆயனர் ஏதோ சொன்னார். இருவரும் மாமல்லர் இருந்த திசையை நோக்கிப் புன்னகை புரிந்தார்கள்.

ஜனக் கூட்டம் இதற்குள் அருகில் வந்துவிட்டது. கூட்டத் தலைவர்களாகத் தோன்றிய இருவர், பூரண கும்பத்துடனும் புஷ்பம், தாம்பூலம் பழம் வைத்திருந்த தட்டுக்களுடனும் எல்லாருக்கும் முன்னால் வந்தார்கள். குண்டோதரன் அவர்களுக்கு ஆயனச் சிற்பியாரைச் சுட்டிக்காட்டினான்.

கிராமத் தலைவர்களில் ஒருவர் கூறினார்: ''உலகத்தில் எப்பேர்ப்பட்ட தீமையிலும் நன்மை ஒன்று உண்டு என்பார்கள். அதுபோல், திருப்பாற் கடல் ஏரி உடைப்பு எடுத்ததினால், எங்கள் கிராமம் பாக்கியம் செய்ததாயிற்று. சிற்பச் சக்கரவர்த்தி ஆயனரையும் பரத சாஸ்திர ராணி சிவகாமி தேவியையும் வரவேற்கும் பேறு எங்களுக்கு வாய்த்தது. வரவேண்டும், ஐயா ! வருக, தேவி ! உங்களுக்கும் உங்கள் சீடர்களுக்கும் எங்களால் முடிந்த சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறோம் : எத்தனை நாட்கள் முடியுமோ அத்தனை நாட்கள் எங்கள் விருந்தினர்களாய்த் தங்கி இருக்க வேண்டுகிறோம்.''

இவ்விதம் கிராமத் தலைவர் கூறி முடித்ததும், ஆயனர், ''மகாஜனங்களே! உங்களுடைய அன்புக்கு நானும் என் குமாரியும் என் சீடர்களும் மிகவும் கடமைப்பட் டிருக்கிறோம்! இந்த வெள்ளம் வடிகிற வரையில் உங்களுடைய விருந்தாளிகளாக நாங்கள் இருந்துதான் தீர வேண்டும்!'' என்றார்.

பிறகு, கிராமவாசிகளும் ஆயனர் முதலியோரும் கிராமம் இருக்



திசையை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

எல்லாருக்கும் பின்னால் தங்கியிருந்த மாமல்லரோ ஆச்சரியக் கடலில் மூழ்கியிருந்தார். அவர் எதிர்பார்த்ததற்கு முற்றும் மாறாகக் காரியங்கள் நடந்தன. சிவகாமி அவ்வப்போது கடைக்கண்ணால் பார்த்துப் புன்னகை செய்ததைத் தவிர, மற்றப்படி அவர் ஒருவர் அங்கு இருப்பதையே கவனிப்பாரைக் காணோம்.

அவருடைய வியப்பிலே மகிழ்ச்சியும் கலந்திருந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை அல்லவா? 'குண்டோதரனை மூடன் என்று கருதியது எவ்வளவு தவறு? அவனுடைய புத்திக் கூர்மையே கூர்மை!' என்று அவர் எண்ணமிட்டுக்கொண்டிருக்கும்போதே, ''பிரபு! ஏன் நிற்கிறீர்கள்? போகலாம் வாருங்கள்!'' என்று குண்டோதரன் அவர் பின்னாலிருந்து காதோடு சொன்னான்.

''என்னை அவர்கள் அழைக்கவில்லையே? அழையாத இடத்துக்கு நான் எப்படிப் போவது?'' என்றார் மாமல்ல நரசிம்மர்.

''ஏன் அழைக்கவில்லை? ஆயனரிடம், 'உங்களுடைய சீடர்களுக்கும் வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கிறோம்!' என்று சொன்னார்களே? காதில் விழவில்லையா? நீங்களும் நானும் ஆயனரின் சீடப் பிள்ளைகள்!'' என்றான் குண்டோதரன்.

''சத்ருக்னரின் ஆட்கள் எல்லாம் உன்னைப் போலவே புத்திசாலிகளாய் இருப்பார்களா, குண்டோதரா? அப்படியானால் ஆயிரம் புலிகேசி படையெடுத்து வந்தாலும் நாம் அத்தனை பேரையும் யுத்தத்தில் ஜயித்துவிடலாம்!'' என்றார் மாயல்லர்.

ஆயனரின் 'சீடர்'கள் இருவரும் ஜனக் கூட்டத்துக்குச் சற்றுப் பின்னால் தங்கிச் சென்றார்கள்.

மாமல்லர் அப்படி ரொம்பவும் பின்தங்கி விடவில்லை என்பதையும், சிவகாமியின் கடைக்கண் பார்வையைத் தெரிந்து கொள்ளக்கூடிய தூரத்திலேயே போனார் என்பதையும் உண்மையை முன்னிட்டு நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

* * *

கிராமத்துக்குக் கிட்டத்தட்ட போனபோது ஜனக் கூட்டம் மேலும் அதிகமாயிற்று. ஊரே திரண்டு வந்துவிட்டது போல் தோன்றியது. ஊருக்குள் செ



ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விதவிதமான வர்ணக் கோலம் போட்டு அலங்கரித்திருந்தார்கள்; ஊர்வலத்தை ஆங்காங்கு நிறுத்திக் கிராமத்துப் பெண்மணிகள் சிவகாமிக்கு ஆரத்தி எடுத்தார்கள். கடைசியில், கிராமத்தின் கீழ்ப்புறத்திலிருந்த சிவாலயத்துக்கு அனைவரும் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆலயம் சின்னதுதான்; ஆனால், அழகாயும் சுத்தமாயும் இருந்தது. செங்கல் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட வெளி மதிலைத் தாண்டி உள்ளே போனதும், விசாலமான பிராகாரம் ஒரு புல், பூண்டு இல்லாமல் வெகு சுத்தமாக இருந்தது.

பலிபீடம், துவஜஸ்தம்பம், நந்தி மேடை ஆகியவற்றைத் தாண்டிச் சென்றதும், அடியார்கள் நின்று தரிசனம் செய்வதற்குரிய அர்த்த



மண்டபம் இருந்தது. ஓட்டினால் கூரை வேயப்பட்ட அர்த்த மண்டபத்துக்கு அப்பால் கர்ப்பக்கிருகம். இதன் மேலே, அப்போது புதிதாகத் தமிழகத்தில் வழக்கத்துக்கு வந்து கொண்டிருந்த தூங்கானை மாடம் அழகாக விளங்கிற்று.

கோயிலுக்குள் நுழையும்போதே சாம்பிராணி, சந்தனம் இவற்றின் சுகந்தமும், பன்னீர், பாரிஜாதம், செண்பகம், தாமரை முதலிய திவ்விய மலர்களின் நறுமணமும், நெய் விளக்கின் புகை, உடைத்த தேங்காய், உரித்த வாழைப் பழம், நாரத்தம் பழச்சாறு, பிழிந்த கரும்பின் ரசம் ஆகியவற்றின் சுவாசனையும் கலந்து வந்து, ஏதோ ஒரு தூய்மையான தனி உலகத்துக்குள்ளே வந்திருப்பது போன்ற உணர்ச்சியை உண்டாக்கின.

ஆயனரும் சிவகாமியும் ஆயனரின் சீடரும் அர்த்த மண்டபத்துக்குள் வந்ததும் சுவாமிக்குத் தீபாராதனை நடந்தது. பின்னர் அர்ச்சகர் அபிஷேக தீர்த்தமும் விபூதிப் பிரசாதமும் கொடுத்தார். அதேமாதிரி அம்பிகையின் சந்நிதியிலும் தீபாராதனை நடந்து குங்கும புஷ்பப் பிரசாதங்கள் அளிக்கப்பட்டன.

எல்லாம் ஆன பிறகு அவர்களை வரவேற்ற கிராமத் தலைவர், ''ஆயனரே! தங்களுடைய குமாரியின் நடன வித்தைத் திறமையைக் குறித்து நாங்கள் ரொம்பவும் கேள்விப்பட்டிருக்கிறோம். எங்கள் பாக்கியவசத்தினால் எதிர்பாராதவிதமாக நீங்கள் இந்தக் கிராமத்துக்கு வரும்படி நேர்ந்தது. உங்களுக்கு இன்றைக்குத் தொந்தரவு கொடுக்க மனம் இல்லை. நாளைய தினம் தங்கள் குமாரி இந்தச் சந்நிதியில் நடனம் ஆடி எங்களை மகிழ்விக்க வேண்டும்!'' என்று விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

இதற்கு மறுமொழி 'என்ன சொல்வதென்று தெரியாதவராய் ஆயனர் சிவகாமியை நோக்கினார். அவளுடைய முகத்தைப் பார்த்ததும் ஆயனருக்கு மனக் கலக்கம் அதிகமாயிற்று. அவர்கள் நின்று கொண்டிருந்த அர்த்த மண்டபத்தில் மாமல்லர் எங்கே நிற்கிறார் என்பதைச் சிவகாமி ஏற்கனவே தெரிந்து கொண்டிருந்தாள். இதுவரையில் வெகு ஜாக்கிரதையாக அந்தப் பக்கமே பார்க்காமலிருந்த அவளுடைய கண்கள் பளிச்சென்று மாமல்லருடைய முகத்தை ஏறிட்டு நோக்கின. சிவகாமியின் கண்களில் தோன்றிய கேள்விக்கு மாமல்லரின் முகமலர்ச்சியும், அவருடைய கண்களில் தோன்றிய குதூகலமும் மறுமொழி தந்தன. மறுகணம் சிவகாமி ஆயனரை நோக்கி, ''ஆகட்டும், அப்பா!'' என்று மெல்லிய குரலில் கூறினாள். ''ஆயனரே! தங்கள் அருமைக் குமாரியின் மறுமொழி எங்கள் காதிலும் விழுந்தது. மிகவும் சந்தோஷம்!'' என்றார் கிராம அதிகாரி. இதற்குள்ளே, மறுநாள் நடனம் ஆடச் சிவகாமி சம்மதித்து விட்டாள் என்ற செய்தி பரவி அர்த்த மண்டபத்திலும் வெளிப் பிராகாரத்திலும் நின்று கொண்டிருந்த ஜனங்களுக்குள் கலகலப்பு ஏற்பட்டு, விரைவில் அது ஆரவாரமாக மாறியது.


இந்தக் கலகலப்புக்கும் ஆரவாரத்துக்கும் இடையே, ஆயனர் கிராமத் தலைவரைப் பார்த்து, ''ஐயா! சிவகாமியின் நடனப் பயிற்சி நின்று ஏழெட்டு மாதமாகிறது. ஆனாலும் பாதகமில்லை. நீங்கள் காட்டும் அன்பானது சிவகாமியின் மனத்தை ரொம்ப

உள்ளம் கவர் கள்வன்!

உள்ளம் கவர் கள்வன்!
இவருக்குக் கவலையில்லை...
இவருக்குக் கிடைத்துவிட்டன

விமல்

தரும் துணிகள்



விமல், உங்களுக்கு எப்போதுமே புத்தம்புதிய துணிகளை வழங்குகின்றனர். இணையற்ற புடவைகள்— மனதைக் கொள்ளை கொள்ளும் இலேசான, குளுமை தரும் மென்மையான புடவைகள்.

பாஷன் உலகில் பிரபலமான உடுப்புத் துணிகளும் உள்ளன. அற்புதமானவை! மனங் கவருபவை. கவர்ச்சியான தோற்றத்துக்கு உயிரானவை. ஜக்கார்டு மற்றும் ப்ளெயின் ஷர்ட்டிங்—டெக்ஸ்லீன் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த சூட்டிங்குகள் உங்கள் அமைதியான எடுப்பான தனித்தன்மைக்கு அழகூட்டுகின்றன. வூவன் மற்றும் நிட்டெட் ஸ்ட்ரெச் சூட்டிங்குகள் 100% டெக்ஸ்சரைஸ்டு பாலியெஸ்டர்.

எப்போதும் கவர்ச்சியான துணிகளுக்காக...

VIMAL®
A RELIANCE PRODUCT

Texlene

100% டெக்ஸ்சரைஸ்டு
பாலியெஸ்டர் சூட்டிங்குகள்
வூவன் மற்றும் நிட்டெட்
(ஸ்ட்ரெச்)

C.P.AdS-VF


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்னைப்போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வெய்ல் ஆ:ப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி. உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வெய்ல் ஆ:ப் லவ் உங்களை அலங்கரிக்கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத்திரை அது.
ஹேலோ வெய்ல் ஆ:ப் லவ் டால்க் வாசமுள்ள அன்புத்திரை... அன்னைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வெய்ல் ஆ:ப் லவ்
டால்க்
NEW
Halo

வும் கவர்ந்திருக்கிறது. ஆகையினால், நாளைக்கு உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கச் சம்மதிக்கிறாள். ஆனால், சிவகாமியின் நடனக் கலையைப் பற்றி நீங்கள் இவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருப்பது எனக்கு வியப்பாயிருக்கிறது. உங்களுக்கு எவ்விதம் தெரிந்தது? ஒருவேளை என்சிஷ்யன் குண்டோதரனுடைய வேலையோ இது?'' என்று கூறிக் குண்டோதரனை நோக்கினார்.

அப்போது கிராமத் தலைவர், ''இல்லை, ஐயா, இல்லை! தங்கள் குமாரியைப் பற்றி ஏற்கனவே எங்களுக்கு நாவுக்கரசர் பெருமான் தெரிவித்திருந்தார்'' என்றார்.

''ஆஹா! நாவுக்கரசர் இங்கே வந்திருந்தாரா? உங்களுடைய பாக்கியந்தான் என்ன?'' என்றார் ஆயனர்.

''நாங்கள் பாக்கியசாலிகள். ஆறு மாதங்களுக்கு முன்னால் நாவுக்கரசர் பெருமான் இந்தப் புண்ணியம் செய்த கிராமத்துக்கு வந்தார். அவருடைய திருக்கரத்தில் உழவாரப் படை பிடித்து இந்த ஆலயத்தின் பிராகாரத்தைச் சுத்தம் செய்தார். நாங்களும் அந்தத் திருப்பணியில் ஈடுபட்டோம். அன்றிரவு இந்தச் சந்நிதியில் நாவுக்கரசர் பெருமானின் சீடர்கள் அமுதொழுகும் தமிழ்ப் பதிகங்கள் பாடினார்கள்.

அவற்றில்,

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்

என்னும் பதிகத்தைப் பாடியபோது, நாவுக்கரசர் பெருமானின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது!''

இவ்விதம் கிராமத் தலைவர் கூறி வருகையில், ஆயனர், சிவகாமி, மாமல்லர் ஆகிய மூன்று பேருக்கும் ஏக காலத்தில் ரோமாஞ்சனம் உண்டாயிற்று. அத்தலைவர் மேலும் கூறினார்:

''பதிகம் முடிந்த பிறகு பெருமான் எங்களுக்குச் சிவகாமி தேவியின் நடனத்தைப் பற்றிக் கூறினார். தாங்கள் தங்கள் குமாரியுடன் காஞ்சியில் அப்பெருமானுடைய மடத்துக்கு வந்திருந்ததையும், அப்போது சிவகாமி இந்தப் பதிகத்துக்கு அபிநயம் பிடித்து மூர்ச்சித்ததையும் பற்றித் தெரிவித்தார். நேரில் இவ்வளவு விரைவில் உங்களையே வரவேற்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்கும் என்று அப்போது நாங்கள் கனவிலும்கருதவில்லை.''

''வாகீசப் பெருந்தகைக்கு எங்களுடைய ஞாபகம் இருந்தது, நாங்கள் செய்த புண்ணியம்!'' என்றார் ஆயனர்.

''நாவுக்கரசர் பெருமான் வந்து போன பிறகு இந்த ஊரில் அவருடைய திருப்பெயரால் ஒரு மடாலயம் கட்டியிருக்கிறோம். அந்த மடாலயத்தில் முதன் முதலாகத் தாங்களும் தங்கள் புதல்வியும்தான் தங்கப் போகிறீர்கள். இதுவும் நாங்கள் செய்த புண்ணியந்தான்!'' என்றார் கிராமத் தலைவர்.

முப்பத்துநான்காம் அத்தியாயம்

நந்திமேடை

அன்றிரவு இரண்டாம் ஜாமத்தின் மத்தியில் நாவுக்கரசர் மடாலயத்தின் வாசலில் மாமல்லரும் குண்டோதரனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சாயங்காலமே மேகங்கள் எல்லாம் கலைந்து வானம் துல்லியமாயிருந்தது. சரத்கால சந்திரன் பொழிந்த லாவண்யமான நிலவு அந்தச் சாதாரண கிராமத்தைக் கந்தர்வ லோகமாகச் செய்து கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில், கிராமக் கோயிலின் தூங்கானை மாடத்துத் தங்க ஸ்தூபி 'தகதக' வென்று பிரகாசித்தது. அதற்கப்பால் தெரிந்த தென்னை மரங்களின் உச்சியில் பச்சை மட்டைகளின் மீது நிலா மதியின் கிரணங்கள், ரசவாத வித்தை செய்து கொண்டிருந்தன. தென்னை மட்டைகள் இளங்காற்றில் இலேசாக அசையும் போது, பச்சை ஓலைகள் பளிச்சென்று வெள்ளி ஓலைகளாக மாறுவதும், மீண்டும் அவை பச்சை நிறம் பெறுவதும் ஏதோ ஓர் இந்திரஜாலக் காட்சியாகவே தோன்றின.

''பிரபு! குபேர சம்பத்து வாய்ந்த அரண்மனை உப்பரிகையில் பஞ்சணை மெத்தையில் படுத்து உறங்க வேண்டிய தாங்கள், இந்த ஆண்டி மடத்துத் திண்ணையில் அநாதைப் பரதேசியைப்போல் படுத்து உறங்குவதா? அந்த எண்ணத்தையே என்னால் சகிக்க முடியவில்லையே!'' என்றான் குண்டோதரன்.

''குண்டோதரா! இத்தனை நேரமும் ஆயனரோடு விவாதம் செய்து ஒருவாறு முடிந்தது. நீயும் அதே பாட்டைப் பாட ஆரம்பித்து விட்டாயா?'' என்றார் மாமல்லர்.

குண்டோதரன் ஏதோ சொல்ல ஆரம்பித்தான். அதற்கிடங் கொடாமல் மாமல்லர் மறுபடியும் கூறினார்:

''என் தந்தை அப்படி என்னை அரண்மனை உப்பரிகையிலேயே எப்போதும் படுக்க வைத்து வளர்க்கவில்லை. குண்டோதரா! பஞ்சணை மெத்தையில் பரப்பிய முல்லைப் புஷ்பங்களின் மீது படுத்தும் எனக்குப் பழக்கம் உண்டு; நடுக் காட்டில் மரத்தின் வேரைத் தலையணையாய்க் கொண்டு தரையில் படுத்தும் எனக்குப் பழக்கம் உண்டு. இந்த மடத்துத் திண்ணை வழுவழுவென்று தேய்ந்து எவ்வளவு மிருதுவாக இருக்கிறது!'' என்றார் மாமல்லர்.

''பிரபு! தாங்கள் பரிகாசம் செய்கிறீர்கள். எனக்கோ வேதனையாக இருக்கிறது. இந்தக் கஷ்டம் தங்களுக்கு என்னால் வந்ததுதானே என்பதை எண்ணும்போது என் மனம் பதைக்கிறது. நான் மட்டும் ஒரு வார்த்தை இந்த ஊர்வாசிகளிடம் தாங்கள் இன்னார் என்பது பற்றிச் சொல்லியிருந்தால்....?''



''குண்டோதரா! பிசகான காரியம் செய்துவிட்டுப்பிறகு வருத்தப் படுகிறவர்களை நான் கண்டதுண்டு. நல்ல காரியம் — புத்திசாலித்தனமான காரியம்— செய்ததற்காக வருத்தப் படுகிறவர்களை நான் பார்த்ததில்லை. இப்போது உன்னைத்தான் பார்க்கிறேன். நான் சக்கரவர்த்தி குமாரன் என்பது தெரியாதபடி ஜனங்களுடன் கலந்து பழகும் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று எவ்வளவோ ஆவல் கொண்டிருந்தேன். அந்த ஆவல் இப்போது உன்னால் நிறைவேறுகிறது. ஆஹா! சிவகாமியின் நடனக் கலையின் புகழ் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறதென்பதை இன்று தெரிந்து கொண்டதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?''

''பிரபு! சிவகாமி தேவியின் நடனக் கலையின் புகழ் மட்டும் இங்கே பரவியிருக்கவில்லை. புள்ளலூர்ப் போரின் கீர்த்தியும் இந்தக் கிராமம் வரையில் வந்து எட்டியிருக்கிறது!''

''மெய்யாகவா, குண்டோதரா!''

''ஆம், பிரபு! அந்தச் சண்டையிலே குமார சக்கரவர்த்தி நிகழ்த்திய மகத்தான வீர ஸாகஸச் செயல்களைப் பற்றியும் இங்கேயெல்லாம் தெரிந்திருக்கிறது. அதையெல்லாம் பற்றிச் சவிஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் என்று கிராமவாசிகள் என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு இராத்திரி சாவகாசமாகச் சொல்லுவதாக வாக்களித்திருக்கிறேன். இப்போது கோயில் பிராகாரத்திலே அவர்கள் கூடியிருப்பார்கள். நீங்களும் வருகிறீர்களா?'' என்று குண்டோதரன் கேட்டான்.

''வருகிறேன்; ஆனால், நீ ஏதாவது விஷமம் செய்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது!'' என்றார் மாமல்லர்.

* * *

கோயில் பிராகாரத்தில் நந்தி மேடையின் படிக்கட்டில் குண்டோதரனும் மாமல்லரும் உட்கார்ந்திருந்தார்கள். நந்தி மேடை பலிபீடம் இவற்றைச் சுற்றிப் பிராகாரத்தில் செங்கல் — சுண்ணாம்பினால் தள வரிசை போடப்பட்டிருந்தது. அந்தச் சுத்தமான தளத்தில் கிராமவாசிகள் பலர் உட்கார்ந்திருந்தார்கள்.

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி அவர்களிடம் குண்டோதரன் சண்டப் பிரசண்டமாக வர்ணனை செய்தான். அந்தச் சண்டையிலே முக்கியமாகக் குமார சக்கரவர்த்தி மாமல்லர் காட்டிய தீர சாகஸங்களைப் பற்றி உற்சாகமாக விவரித்தான்.

'' மாமல்லர் எப்படிப் போர் செய்தார் தெரியுமா ? இந்தக் கணம் பார்த்தால் இங்கே இருப்பார்; மறுகணம் பார்த்தால் அதோ அந்த மதில் சுவருக்கு அப்பால் இருப்பார். அந்தப் பெரிய போர்க்களத்திலே மாமல்லர் எங்கே போரிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை எந்த நேரத்திலும் கண்டு பிடித்து விடலாம். மகாவிஷ்ணுவின் சக்ராயுதத்தைப் போல் எங்கே ஒரு ஜொலிக்கும் வாள் அதிவேகமாகச் சுழன்று எதிரிகளின் தலைகளை வெட்டிக் குவித்துக் கொண்டிருக்கிறதோ, அங்கே மாமல்லர் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம். அப்படி மின்னல் வேகத்தில் வாளைச் சுழற்றிப் பகைவர்களை ஹதாஹதம் செய்யக்கூடிய வீராதி வீரர் வேறு யார் ? மாமல்லருடைய வாளிலே அன்றைக்கு எமனே வந்து உட்கார்ந்திருந்தான். அவர் சக்கராகாரமாகச் சுழன்று வாளை வீசியபோது,

ஒன்று பத்து நூறு ஆயிரம் என்று எதிரிகள் உயிரற்று விழுந்தார்கள்!''

''ஆஹா! அபிமன்யு செய்த யுத்தம் மாதிரி அல்லவா இருக்கிறது?'' என்று கூட்டத்தில் ஒருவர் கூறினார். அந்த ஊரிலும் சில காலமாக மகா பாரதம் வாசிக்கப்பட்டு வந்தது. அதனால் எல்லாரும் அருச்சுனன் — அபிமன்யு நினைவாகவே இருந்தார்கள்!

குண்டோதரன் கூறினான்: ''ஆம், மாமல்லர் அன்று அபிமன்யு மாதிரி தான் போர் புரிந்தார். ஆனால், ஒரு வித்தியாசம்: அபிமன்யு போர்க்களத்தில் மாண்டு போனான். புள்ளலூர்ச் சண்டையிலோ மாமல்லரின் வாளுக்கு முன்னால் நிற்க முடியாமல் எதிரிகள் புறமுதுகிட்டு ஓடத் தொடங்கினார்கள். எல்லாருக்கும் முன்னால் ஓட்டம் பிடித்தவன் கங்க நாட்டு அரசன் துர்விநீதன்தான்!''

''துர்விநீதன் எந்தப் பக்கம் ஓடினானோ?'' என்று ஒரு கிராமவாசி கேட்டான்.

''தெற்கு நோக்கி ஓடி வந்ததாகத் தான் கேள்வி. தென் பெண்ணை நதி வரையில் அவனைப் பின்தொடர்ந்து மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் வந்ததாகக்கூடக் கேள்வி'' என்று சொல்லி வந்த குண்டோதரன், மாமல்லர் பக்கம் திரும்பிப் பார்த்து, ''ஏன் ஐயா, என் கையைக் கிள்ளுகிறீர்?'' என்றான்.

மாமல்லரின் கண்களில் கோபக் குறி காணப்பட்டது.

இதற்குள் கூட்டத்தில் இன்னொருவர், ''ஆமாம், இந்த விவரமெல்லாம் உனக்கு எப்படி அப்பா தெரிந்தது? ஆயனரின் சீடனுக்குப் போர்க்களத்தில் என்ன வேலை?'' என்று கேட்டார்.

''நல்ல கேள்விதான்; உன்னிடம் உண்மையைச் சொல்லாமல் முடியாது போலிருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே குண்டோதரன் எழுந்து, மாமல்லரிடமிருந்து சற்று அப்பால் போய் நின்றான்.

''இதோ இருக்கிறாரே, என் பக்கத்தில், இவர்.... இவர்தான்.... ஏன் ஐயா, இப்படி என்னை உறுத்துப் பார்க்கிறீர்? இவர்தான் உண்மையில் ஆயனருடைய உத்தம சிஷ்யர். நான் பல்லவ சைனியத்தைச் சேர்ந்தவன். துர்விநீதனைத் தொடர்ந்து வந்த மாமல்லருடன் நானும் வந்தேன். வழியில் என் குதிரையின் கால் ஒடிந்துவிழுந்துவிட்டபடியால் பின்தங்கி விட்டேன். பிறகு வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு இவர்களுடைய தெப்பத்தில் ஏறி உயிர் தப்பினேன்!''

ஹாஸ்டல் ஹாஸ்யம்!



கல்லூரி ஹாஸ்டல்களில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகள் பல்வேறு நகைச்சுவைகளைத் தினசரி கேட்டும் கண்டும் ரசித்திருப்பார்கள்; அவை பற்றித் தங்களுக்குள் பேசிச் சிரித்து மகிழ்ந்திருப்பார்கள். மேற்படி ஹாஸ்யச் சம்பவங்களை மற்றவர்களும் கேட்டு மகிழ ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டாமா? அதற்காக இதோ ஒரு பரிசுத் திட்டம். நீங்கள் ரசித்து மகிழ்ந்த நகைச்சுவை நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். சிறந்த நகைச்சுவை நிகழ்ச்சிக்குப் பரிசு ரூ. 50. பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர துணுக்குகளுக்கு உசிதம் போல் சன்மானம் வழங்கப்படும். உங்கள் துணுக்குகளை 19-5-74 தேதிக்குள் ''கல்கி'' காரியாலயத்துக்கு அனுப்பவும். ''ஹாஸ்டல் ஹாஸ்யம்'' என்று உறையின்மேல் குறிப்பிட வேண்டும்.

ஆசிரியர், ''கல்கி'', சென்னை-31



உடனே, கூட்டத்திலிருந்தவர்கள் ஒருவரையொருவர் விலாவிலே விரலால் சீண்டியும் வேறுவிதமாகக் கவனத்தை இழுத்தும் காதோடு இரகசியம் பேசிக் கொண்டார்கள். 'குண்டோதரன் ஆயனரின் சிஷ்யனாக இருக்க முடியாது' என்று அவர்களில் பலர் முன்னாடியே ஊகித்ததாகச் சொல்லிக் கொண்டார்கள்.


''மாமல்லரும் ஒரு வேளை இந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கலாமோ?'' என்று ஒருவர் கூறினார்.

''அதை நினைத்தால் எனக்கு ரொம்பவும் கவலையாயிருக்கிறது!'' என்றான் குண்டோதரன்.

''ஒருவேளை இங்கேயே அவரும் வந்து ஒதுங்கினாலும் ஒதுங்கலாம்'' என்று இன்னொருவர் சொன்னார்.

''ஒதுங்கினாலும் ஒதுங்கலாம்'' என்றான் குண்டோதரன். (தொடரும்)

நாங்கள் காட்டும் அத்தாட்சி இதோ:



இதோ நீங்கள் காட்டும் அத்தாட்சி:



ஸிக்னல் ஃப்ளுரைடு ஒன்றுதான் பற்சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்துநிறுத்திக் காட்டுகிறது

ஒப்பற்ற பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே:

பற்சிதைவை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள ஃப்ளுரைடு

ஜெர்மனியிலே பல்டாக்டர்கள் கின்கல, ஸ்டோல்டே...400 குழந்தைகளிடம் கொண்டு பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தனர்: பற்சிதைவை 33 சத விகிதம் குறைத்தது ஸிக்னல் ஃப்ளுரைடு (ஆதாரம்: DAS DEUTSCHE ZAHNARZTEBLATT, 1968, 9, 445 460) எப்படி நிரூபித்தது ஸிக்னலின் ஃப்ளுரைடு? பல்எனாமலோடு அது ஒன்றுகலக்கிறது; பற்கள் அரித்துப் போகவும், முடிவில் சிதைவுபடவும் முக்கிய காரணமான அமிலத் தாக்குதலை வலுவாக எதிர்த்து நிற்கிறது. ஸிக்னல் தேய்க்கும் சிறுவர்கள் பல்வலி என்றால் இன்னதென்றே அறியார். உங்கள் குடும்பத்தின் நலமும் இதுவன்றோ? ஸிக்னல் சிகிச்சையே முற்காப்பு.


வாய்நாற்றத்தை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள எஸ்-14

அமெரிக்காவிலே டாக்டர் ஹாவர்டு E. விண்டு மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தார்: துலக்கிய 15 நிமிடங்களில் வாய்நாற்றக் கிருமிகளிலே 95 சத விகிதத்தை அழித்துக் கட்டியது ஸிக்னலின் எஸ்-14. 10 மணி நேரம் ஆனபின்னரும் வாய்நாற்றம் 75 சத விகிதம் குறைந்திருந்தது (ஆதாரம்: U.S.A., ... யூனிவர்ஸிட்டி அறிக்கை 23 அக் 1968)

ஸிக்னலுக்கே உரிய சுத்திகரிப்பு மூலப் பொருளால் பற்களுக்கு மருத்துவப் பரிசுத்தம்

ஸிக்னலின் ஒப்பிலா மூலப் பொருளான அலுமினியம் டிரைஹைட்ரேட், பல் டாக்டரே துலக்கித் தந்தது போல தூய்மை அளிக்கிறது, பல் எனாமலைப் பாதிக்காமலே (ஆதாரம்: ... 7 ... 1969, வெளியிட்டோர் U.R. ..., U.K.) ஒப்பிலா சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளுரைடு, எஸ்-14 — இவை மூன்றும் ...: ஸிக்னல் ஒன்றுதான் இன்னொரு பற்பசை இல்லாதது செய்வது.

அத்தாட்சி காட்டுவது ஸிக்னல் ஃப்ளுரைடு ஒன்றே—கேளுங்களேன் பல் டாக்டரை.



லின்டாஸ் ... SGF 63-140 TM

குமாஸ்தாவின் மகள்

காந்தன்

நாட்டைக்கொல்லும் வறுமையின் காரணமாக ஒரு கிழவனுக்கு மூன்றாந்தாரமாக வாழ்க்கைப்பட்ட ஒரு பெண்ணின் கண்ணீர்க் கதை இது. மிக மிகப் பழைய கதைதான் என்றாலும் எந்தச் சந்தர்ப்பத்துக்கும் பொருந்தக் கூடியது. பல ஆண்டுகளுக்கு முன்பு டி.கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழு வெற்றிகரமாக நடத்தி வந்து பல்லோராலும் பாராட்டப்பட்ட நல்லதொரு நாடகம் இது.

தமிழ் நாட்டில் மிகச் சிறந்த சினிமா டைரக்டர்களுள் ஒருவரான ஏ. பி. நாகராஜன் திரைக்கதை, வசனம், டைரக்‌ஷன் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் ஏற்று மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார்.

சிவகுமார் நல்லவன் ராமுவாக வருகிறார். மனம் உடைந்து கண்ணீரில் கரைந்து போகும் கட்டங்களில் அருமையாக நடித்திருக்கிறார்.

ஒரு பாத்திரம்கூடச் 'சோடை' போகாதது திரைக்கதையின் சிறப்பு அம்சம். சீதா, அவளது பெற்றோர், அவளது ஒரே தங்கை; ராமு, அவனது தாயார், மிராசுதார் மிட்டாதார் மணி — இத்தனை பேர்களும் முழுப் பங்கு பற்றிப் படத்தைச் சிறப்பாக முடித்து வைக்கின்றனர்.

சீதாவின் பாத்திரத்தை ஏற்க எந்தப் பழைய நடிகையையும் தேர்ந்தெடுக்காமல், தமிழ்ப் படத்துக்குப் புது நடிகையான குமாரி ஆர்த்தியைத் தேர்ந்தெடுத்தது மிகவும் துணிச்சலான காரியம்தான்! அருமையாக நடித்திருக்கிறார். தன் உள்ளம் கவர்ந்த ராமு தான் தன் கரம் பற்றப் போகிறான் என்று அவனது தாயின் மூலமாகவே கேட்டபோது சீதா அடைந்த ஆனந்த பரவச நிலையை, இன்னதென்று வார்த்தைகளால் விவரிக்க முடியாத இன்பப் பெருக்கை, ஆர்த்தி அதியற்புதமாக வெளிப்படுத்துகிறார். அந்த ஒரு சில விநாடிகளிலேயே பரிபூரணமாக வாழ்ந்து முடித்துவிட்ட சீதாவின் இனந்தெரியாத இன்ப நிலையை அவர் முகபாவங்களில் காணும்போது நாமும் பரவசம் அடைகிறோம்.

சீதாவின் தங்கை சரளா குழந்தைத்தனமாகப் பேசி நம்மையெல்லாம் குதூகலப்படுத்துகிறார். உஷா அந்தப் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்துவிட்டார்!

கமலஹாஸன் வில்லனாக வந்து நன்றாய் நடிக்கிறார். இந்த வயசிலேயே இத்தகைய நடிப்பில் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பது பாராட்டுக்குரியதுதான். சிரிப்புக்கு நாகேஷ் இருக்கிறார். சோதிடராகவும், கல்யாணத் தரகராகவும் வருகிற இடங்களில் தியேட்டரில் ஒரே ஆரவாரம். ஏழைக் குமாஸ்தாவை அப்படியே எடுத்துக் காட்டும் விதத்தில், வி. எஸ். ராகவன் அற்புதமாக நடித்து ரசிகர்களைக் கண் கலங்கச் செய்து விட்டார்.

சூலமங்கலம் ராஜலக்ஷ்மியின் குரலில் ஒலிக்கும், ''எழுதி எழுதிப் பழகி வந்தேன்'' என்ற பூவை செங்குட்டுவனின் பாட்டு இனிமையாயிருக்கிறது.

நல்ல கதை அம்சமும், சிறப்பான நடிப்பும் கொண்ட இப்படம் ரசிகப் பெருமக்களின் பேராதரவையும் பெருமளவில் பாராட்டுக்குரியதுதான்!





வெட்டுண்ட கை!

நாடோடி



நியூஜிலாந்தில் என்ஜின் டிரைவராக வேலை பார்த்துக் கொண்டிருந்த ஆர்தர் ஹவார்டுக்குக் கடலில் நீந்துவது மிகவும் பிடிக்கும். வேலை முடிய வேண்டியதுதான் தாமதம். உடனே நீந்துவதற்குச் சென்று விடுவான், பக்கத்திலுள்ள கடற்கரையை நோக்கி. அத்தனைக்கும், அவன் நீந்தும் பிரதேசத்தில் சுறா மீன்கள் அதிகம் என்பது அவனுக்குத் தெரியும்.

ஒரு நாள் வழக்கம்போல் மாலையில் வேலை முடிந்ததும் ஹவார்ட் நீந்துவதற்குச் சென்றான். ஆனால் நீந்தப் போனவன் வீடு திரும்பவில்லை. அடுத்த நாள் கடற்கரைக்குச் சென்று பார்த்தால் அவன் உடுத்திக்கொண்டிருந்த உடைகளும், அவன் அணிந்திருந்த கைக் கடிகாரமும் கரையில் காணப்பட்டன. பாவம், நீந்திக் கொண்டிருந்தவன் கடலில் மூழ்கி இறந்து விட்டானா அல்லது அவனைச் சுறா மீன்கள் இழுத்துச் சென்றுவிட்டனவா என்று தெரியவில்லை.

பாவம், ஹவார்டின் மனைவி சாரா அடைந்த துக்கம் சொல்லி முடியாது.

சில நாட்கள் சென்றன. ஹவார்ட் தன்னை 2500 பவுனுக்கு இன்ஷ்யூர் செய்து கொண்டிருந்தான். அந்தத் தொகையைத் தனக்குத் தரவேண்டும் என்று சாரா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குக் கடிதம் எழுதினாள்.

ஆனால் அவர்கள் தர மறுத்தார்கள். ஹவார்டின் சடலமோ அல்லது சடலத்தைச் சுறாமீன் கடித்திருந்தால், அதன் ஏதாவது ஒரு பாகமோ அகப்படாத வரையில் அவன் இறந்துவிட்டான் என்று தாங்கள் இறுதியாக நம்ப முடியாதென்றும், ஓர் ஆள் காணாமல் போனால் ஏழு வருடங்கள் கழித்துத்தான் அவன் இறந்து விட்டதாகக் கொள்வார்கள் என்றும் கூறினார்கள்.

பாவம், சாராவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆகவே, அவள் பத்திரிகையில் ஒரு விளம்பரம் கொடுத்தாள். "கடலில் மூழ்கி இறந்துபோன ஹவார்டின் சடலத்தையோ அல்லது அதன் ஒரு பாகத்தையோ கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு ஐம்பது பவுன் இனாம் கொடுக்கப்படும்" என்று அறிவித்தாள்.

இரண்டு மாதங்கள் ஒரு தகவலும் இல்லை. ஒரு நாள் காட்பரே என்னும் பெயர்கொண்ட இரண்டு சகோதரர்கள் அந்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து, காகிதத்தில் சுற்றியிருந்த ஒரு பொட்டலத்தை போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னால் வைத்தார்கள்.

பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தால் அதில் ஒரு வெட்டுண்ட கை இருந்தது! அது ரத்தமற்றுச் சுருங்கிக் கிடந்தது. அதன் மோதிர விரலில் ஒரு தங்க மோதிரம் காணப்பட்டது. அந்த மோதிரத்தின் உள்பக்கம் ஆர்தர் ஹவார்ட் என்னும் வார்த்தைகளின் முதல் எழுத்துக்களான, "ஏ. எச்." காணப்பட்டன.

தாங்கள் அன்று மாலை கடற்கரைக்குச் சென்றிருந்ததாகவும் அங்கு அந்த வெட்டுண்ட கையைக் கண்டதாகவும் அவர்கள் சொன்னார்கள். சுறா மீனால் அந்தக் கை துண்டிக்கப்பட்டு கடைசியில் அது கரையில் கொண்டு சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் கருதினார்.

அந்தச் சகோதரர்கள் தாங்கள் ஹவார்டின் சடலத்தின் ஒரு பகுதியைக் கண்டு பிடித்து விட்டதாகவும், ஆகவே ஐம்பது பவுன் வெகுமதி தங்களுக்குச் சேர வேண்டும் என்றும் சொன்னார்கள்.

அதற்கு இன்ஸ்பெக்டர், அத்தனை சீக்கிரம் அவர்களுக்கு வெகுமதி' கிடைத்து விடாதென்றும், அது ஹவார்டின் கைதான் என்று முதலில் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லி அவர்கள் விலாசத்தை வாங்கிக் கொண்டார்.

அவர்கள் சென்றதும், இன்ஸ்பெக்டர் அந்த வெட்டுண்ட கையை ஒரு காகிதத்தில் சுருட்டி எடுத்துக் கொண்டு, சாராவைப் பார்க்கச் சென்றார்.

கையைக் கண்டதும் சாரா துக்கத்தினால் அலறினாள். பிறகு சமாளித்துக் கொண்டு அது தன்னுடைய கணவனின் கைதான் என்றும், விரலில் உள்ளது தன் கணவனின் மோதிரம்தான் என்றும் சொன்னாள்.

பிறகு பத்து டாக்டர்கள் கையைப் பரிசோதனை செய்து பார்த்தார்கள். பல விஷயங்களில் அவர்கள் மாறுபட்டிருந்தாலும், மூன்று விஷயங்களில் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்கள்.



மலைக்க வைத்த மர்மங்கள். 5

ஒன்று அந்தக் கை இரண்டு மாத காலம் கடல் நீரில் ஊறியிருக்க முடியாது என்பது; இரண்டு அது சுறா மீனினால் கடிக்கப்பட்ட கை அல்லவென்றும், ரம்பத்தினால் வெட்டப் பட்ட கை என்றும் அவர்கள் கூறினார்கள்.

மூன்றாவதாக அவர்கள் கூறிய விஷயம் தான் போலீஸாரை ஆச்சர்யத்தில் ஆழ்த் தியது. அதாவது, அது ஓர் ஆணினுடைய கை அல்லவென்றும், பெண்ணினுடைய கை என்றும் அவர்கள் கூறினார்கள்.

கடைசியில் போலீஸாரின் சந்தேகத்தைக் கிளப்ப இன்னொரு விஷயம் கிடைத்தது. மோதிரத்தில் காணப்பட்ட 'ஏ. எச்.' என்ற எழுத்துக்கள் சரியாகச் செதுக்கப்பட்டவை யல்ல; யாராலோ கீறப்பட்டவை என்று தெரிய வந்தது.

ஆகவே போலீஸார் க்கை கிடைத்த விவ ரத்தைப் பற்றி அந்தக் காட்பரே சகோதரர் களைக் குடைய ஆரம்பித்தார்கள். கடைசி யில் காட்பரே சகோதரர்கள் ஒரு புது விஷயம் சொன்னார்கள்.

''நாங்கள் உங்களுக்குக் கையைக் கொண்டு வந்து கொடுத்த அன்று கடற்கரையில் உட் கார்ந்திருந்தோம். அப்பொழுது கோமாளி போலத் தோற்றமளித்த ஓர் ஆள் கறுப்புக் கண்ணாடி அணிந்து தலையில் செம்பட்டைப் போய முடி வைத்திருந்தான். அவன் எங் களிடம் வந்து தான் கடற்கரையில் ஒரு கையைப் பார்த்ததாகவும், அது இறந்து போன ஆர்தர் ஹவார்டின் கையாக இருக்க லாம் என்றும் சொன்னான். நாங்கள் அவனைப் பின்தொடர்ந்து கை இருந்த இடத்துக்குச் சென்றோம். அங்கு எங்களை அழைத்துச் சென்றவன் திடீரென்று எங்கேயோ மறைந்து விட்டான். இனும் கிடைக்குமே என்று நாங்கள் கையை உங்களிடம் கொண்டு வந் தோம்'' என்று சொன்னார்கள்.

ஆனால் போலீஸார் அவர்கள் சொன்னதை நம்பவில்லை. ஆனால் நாளாக, ஆக, தாங் களும் அப்படிக் கோமாளி போலத் தோற்றம் அளித்த ஒரு கறுப்புக் கண்ணாடிக்காரனைப் பார்த்ததாகப் பலர் சொல்லவே, அவர்கள் காட்பரே சகோதரர்களைக் கூப்பிட்டு அனுப் பினார்கள்.

''நீங்கள் முதல் தடவையாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தபோதே ஏன் அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரனைப் பார்த்ததாகச் சொல்லவில்லை?'' என்று கேட்டார்கள்.

''தன்னைப் பார்த்ததாகச் சொல்ல வேண் டாம் என்று அந்த ஆள் கேட்டுக் கொண் டான். அதோடு பரிசுத் தொகையில் ஒரு பங்கு அவனுக்கும் போய்விடுமோ என்று பயந்தோம்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரனைப் பற் றிப் போலீஸார் வெகு தீவிரமாகப் புலன் விசாரணை செய்யத் தொடங்கினார்கள். ஆர் தர் ஹவார்ட் கடலில் மூழ்கின அன்று அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரன் கடலில் ஒரு படகில் சென்று கொண்டிருந்ததாகத் தகவல் கிடைத்தது. கடைசியில் அவன் ஒரு சவக் குழியைத் தோண்டிக் கொண்டிருந்ததாகவும் தகவல் கிடைத்தது.

ஒருவேளை அவன்தான் குழியில் இருந்த சடலத்தின் கையை வெட்டிக் கடற்கரையில்

போட்டவனோ, இருட்டில், சவம் ஆணா, பெண்ணா என்று கவனிக்காமல், தவறுதலாகப் பெண் சடலத்தின் கையை வெட்டி விட்டானோ?

கறுப்புக் கண்ணாடிக்காரன் யாராக இருந்தாலும் சரி, அந்தக் காட்டப்ரே சகோதரர்களும், சாராவும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை மோசடி செய்ய ஏதோ சதி செய்திருக்கிறார்கள் என்பது மட்டும் நிச்சயம் என்று போலீஸார் தீர்மானித்தார்கள்.

கடைசியில் போலீஸார் இன்னும் தீவிரமாகப் புலன் விசாரித்துக் கொண்டு போகவே கறுப்புக் கண்ணாடிக்காரன் அடிக்கடி சாராவைப் பார்க்க வருகிறான் என்றும், இரண்டு பேரும் சேர்ந்து எங்கோ போகிறார்கள் என்றும் தெரிய வந்தன. ஒரு நாள் சாராவும் அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரனும் சேர்ந்து போவதைப் போலீஸார் பார்த்துவிடவே, அவர்களைப் பின்தொடர்ந்து அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரனைக் கைது செய்தார்கள்.

அவனுடைய கறுப்புக் கண்ணாடியையும் பொய்ச் செம்பட்டை முடியையும் நீக்கிப் பார்த்தால் அவன் வேறு யாருமல்ல, கடலில் மூழ்கி இறந்து போனதாகச் சொல்லப்பட்ட ஹவார்ட்தான் என்று தெரிய வந்தது!

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை ஏமாற்றுவதற்காகக் கணவனும் மனைவியும் அப்படி நாடகம் நடத்தி யிருக்கிறார்கள்!

ஆர்தர் ஹவார்ட் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறை சென்றான். ஆனால் அவன் கடைசிவரையில் அந்தக் கையை எங்கிருந்து எடுத்தான் என்று சொல்ல மறுத்து விட்டான்.

YYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYYY

டாக்டரம்மா

காந்தன்

கதை கொஞ்சம் புதுமையானதுதான். கவர்ச்சிப் பாவையாக வந்து வெள்ளித் திரையில் துள்ளிக் குதிக்கும் மஞ்சுளாவைக் கண்ணீர் வடிக்கும் காரிகையாக மாற்றியிருப்பதே புதுமையானதுதானே! வயிற்றுப் பிழைப்புக்காக வயிற்றிலேயே தட்டித் தாளம் போட்டுப் பிச்சையெடுக்கும் பெண்ணாக வரும் மஞ்சுளாதான் இடைவேளைக்குப் பிறகு டாக்டரம்மா! பிச்சைக்காரிக்கு வாழ்வு வந்த வேகத்திலேயே பறிக்கப்பட்டும் விடுகிறது.

மஞ்சுளாவின் நடிப்பு பாராட்டும் விதத்தில் அமைந்திருக்கிறது. தான் பெற்ற மகனுக்கு முதலில் வாழ்வளிப்பதா, தன் கணவனின் இரண்டாவது மனைவியின் மகளுக்குக் கண் பார்வையளிப்பதா என்ற போராட்டத்தில் தவிக்கிறாள் டாக்டரம்மா. தாயின் ரத்தம் செலுத்தினாலன்றிச் சேய் பிழைக்கமாட்டான் என்ற நிலையிலும் மனம் கலங்காமல், அலறும் டெலிபோன் மணியையும் பொருட்படுத்தாமல் கல்லாயிருந்துவிடுகிறாள்; மகன் இறக்கிறான்; கணவனின் இரண்டாவது மனைவியின் மகள் — இறந்த சிறுவனின் கண்களைப் பெற்றுப் பார்வையைப் பெற்றுவிடுகிறாள். டாக்டரம்மாவின் தியாகம் சற்றும் நம்ப முடியாததுதான்! மஞ்சுளாவின் நடிப்பு கதைக்குப் பெரிதும் கைகொடுத்து உதவியிருக்கிறது. மன வேதனையையும், மனப் போராட்டத்தையும் மஞ்சுளா நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார்!

(இந்தக் கட்டத்தில் பரபரப்புண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தானோ என்னவோ, ரொம்ப ரொம்ப நிதானத்தைக் கடைப்பிடித்துப் பழி வாங்கிவிட்டார்கள்!)

பிச்சைக்காரப் பெண்ணுக்கு வாழ்வளிக்க வலிய முன் வந்த ஏவி. எம். ராஜனே அவள் மீது சந்தேகப்பட்டு அவள் வாழ்வையே தட்டிப் பறித்துவிடுகிறார். டாக்டரம்மாவைப் போல் நடிப்புக்கு அதிக சான்ஸ் இல்லாவிட்டாலும், கிடைத்த சான்ஸை அவர் விட்டுவிடவில்லை. நன்றாக நடித்திருக்கிறார்.

வில்லனாக வந்து, கதாநாயகியின் மீது களங்கத்தைச் சுமத்தி அவளைப் படாதபாடுபடுத்தி வீட்டைவிட்டே வெளியேற்றிய தேங்காய் சீனிவாசன் படத்தில் நிறையப் பங்குபற்றியிருக்கிறார். வில்லனாகவும் இடைவேளைக்குப் பிறகு நல்லவனாகவும் நன்றாகவே நடித்திருக்கிறார்.

ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரியாக வந்து கதாநாயகிக்குச் சமயத்தில் கைகொடுத்துக் காப்பாற்றி அவளை டாக்டராக்கிய பெருந்தகையாக நடிப்பவர் அசோகன். நன்றாய் நடித்திருக்கிறார். மிகையான நடிப்பைத் தவிர்த்திருக்கலாம்.

கதை, வசனம் எழுதி டைரக்ஷனையும் ஏற்றுச் சிறப்பாகச் செய்திருக்கும் சொர்ணம் பாராட்டுக்குரியவர்.

மீனாக்ஷி ஆர்ட்ஸ் புரொடக்ஷன்ஸாரின் "டாக்டரம்மா" திரைக் கதையில் பல பலவீனங்கள் இருந்தும் சமாளித்துக் கொண்டு நடிப் பாற்றலினால் நிமிர்ந்து நிற்கிறது.



அருமையான காபி ப்ரூ, அறிவில் சிறந்தவள் என் மனைவி



சுமார் நான்கு ரூபாய்க்கு 30 கப்புகளுக்கு மேல், ஸ்ட்ராங் காபி தயாரிக்கலாம் என்கிறாள் என் மனைவி பத்மா. ப்ரூ மிகச் சிறந்தது. ஒவ்வொரு கப்பும் நல்ல ருசியுள்ளது.

ஒவ்வொரு கப் ப்ரூவுக்கும் வறுத்து அரைத்த சிறந்த காபியின் விலையைவிட அதிகமில்லை

எனக்கு நினைவு தெரிந்த நாளாக நான் காபித் தூளையே உபயோகித்து வருகிறேன்.

இப்பொழுது இன்ஸ்டண்ட காபிகளில் ப்ரூ ஒன்றையே விரும்பி சாப்பிடுகிறேன். ஏனென்றால் ப்ரூவின் ருசி சிறந்த காபியின் ருசியேதான்.

ப்ரூ ஸ்ட்ராங்கானது. திடமானது. சிறந்த மணம் கொண்டது. அவசரத் தேவையின் போதோ எதிர்பாரா விருந்தினர் வரும் போதோ ப்ரூ ரொம்ப சௌகரியமாய் இருக்கிறது.


ப்ரூ-ஓர் அபாரமான கண்டுபிடிப்பு.

ப்ரூ ருசி சிறந்த காபியின் ருசி



VOLTAS

முந்திய படைப்பு மீண்டும் முன்னிற்கிறது.



(அதனை வைத்திருப்பவர்களும் இல்லாதவர்களும் ஒருங்கே பாராட்டும் உன்னத படைப்பு)

சமீபத்தில் தனித்தனியே நடத்திய கருத்தாராய்ச்சி,
இதனை உறுதியாகப் புலப்படுத்துகிறது.

காரணங்களா? விரைவில் வழங்கும் சிறந்த குளுமை:
எளிதில் இயக்க வல்ல கண்ட்ரோல்கள். ஒருவருடைய
சௌகரியத்திற்கேற்ப மாற்றியமைக்கத் தக்க
காற்றோட்ட அமைப்பு...கண்ணைப் பறிக்கும் கட்டழகு.

உங்கள் நண்பர்கள் யாரிடமேனும் கிரிஸ்டல் டீலக்ஸ்
இருந்தால், நீங்களே பரிசோதித்துப் பாருங்கள்.
உங்களுக்கே புரிந்துவிடும்.


வோல்டாஸ்
கிரிஸ்டல்
ரூம் ஏர்கண்டிஷனர்

வழங்குவோர் வோல்டாஸ்: குளுமை தருவதையே குறிக்கோளாய்க் கொண்டவர்கள்


வோல்டாஸ் லிமிடெட், பம்பாய் · கல்கத்தா · சென்னை · புது தில்லி · பெங்களூர்
லக்னௌ · பாட்னா · அஹமதாபாத் · சிக்கந்தராபாத் · கொச்சின் · கான்பூர் · ஜம்ஷெட்பூர்.

உங்கள் பகுதியில், எங்கள் அதிகாரம் பெற்ற விற்பனையாளர் யாரென அறிய
அருகாமையிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

CMVAC-54-182 tam



விண்ணும் மண்ணும்





33. துயருற்ற தேவதை

கி.ராஜேந்திரன்

ஒரு கூரிய கல்லை எடுத்துக் குகைச் சுவரில் தான் கண்ட ஒரு மிருகத்தின் படத்தைச் செதுக்க ஆரம்பித்த கணத்தில் ஆதி மனிதனின் உள்ளத்தில் வித்தாக இருந்த நாகரிக உணர்ச்சி முளைவிட்டது. அன்று தொடங்கி ஓவியக் கலை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளில் பல்கிப் பெருகிப் படர்ந்து வளர்ந்தது. உலகமனைத்தையும் ஆட்கொண்டு வளம் பெற்றது; மனித சமூகத்தின் வாழ்க்கையை வளப்படுத்தியது. என்றாலும் ஐரோப்பாவைப் பொறுத்தவரை ஓவியக் கலைக்குப் பாரிஸ்தான் தாயகம். அந்த அழகான அம்மா பாலூட்டி, சீராட்டி, போஷித்து, ரட்சித்து, ஊக்கமளித்து, கடிந்து கொண்டு ஓவியத்தை வளர்த்தது போல் உலகில் வேறு எந்த நகர அன்னையும் தனது கலைக் குழந்தையிடம் கவனம் செலுத்தியதில்லை. ருஷ்யாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், ஸ்பெயினிலிருந்தும் இன்னும் வையத்தின் மூலை முடுக்குகளிலிருந்தும் கற்றுக் குட்டிகள் பாரிஸுக்கு வந்துதான் ஓவியம் பயில ஏங்கினார்கள். ஏற்கனவே தங்கள் தங்கள் நாட்டில் ஓரளவு பிரபலமடைந்து விட்ட சைத்திரிகர்களோ, பாரிஸ் தங்கள் ஓவியத்தை ஏற்றுக்கொண்டு விட்டால் பின்னர் உலகமே அதற்கு அடிமைப்பட்டு விடும் என்ற உண்மையை உணர்ந்திருந்ததால் பாரிஸில் குடியேறி வாழவே விரும்பினார்கள்.

எனவே பாரிஸ் சிறந்த ஓவிய விற்பனைக் கேந்திரமாக விளங்குவதிலும் வியப்பில்லை. வரிச் சலுகைகள் காரணமாக லண்டனும், செல்வச் செழிப்பு காரணமாக நியூயார்க்கும் ஓவிய வர்த்தகத்தில் பாரிஸுடன் போட்டி போட்டாலும் பாரிஸின் அருமை பெருமைகளுக்கு அவற்றால் இந்தத் துறையில் இன்றளவும் ஈடு கொடுக்க முடியவில்லை.

இந்தப் போட்டா போட்டி வர்த்தகத்தினால் தீமைகளும் இல்லாது போகவில்லை. ஓவியக் கலையின் போஷகர்களாகத் தங்களைக் கருதிக் கொள்ளும் செல்வந்தர்களும் சில கலை நிறுவனங்களும் பாரிஸுக்கு வந்து ஏராளமான பொருளைக் கொட்டி வாங்கிச் சென்ற சில ஓவியங்களைத் தீட்டியவர்கள் அப்போதைக்குப் பணம் பண்ணியதோடு சரி. காலத்தைக் கடந்து நிற்பது என்கிற கடுமை

யான பரீட்சையில் தோல்வியுற்று அவர்கள் பெயர் மங்கிப் போனார்கள். கலைப் போஷகர்களால் அலட்சியப் படுத்தப்பட்ட பலப் பலர் பிற்காலத்தில்—மரணத்துக்குப் பின் — மிகப் பிரபலம் அடைந்தார்கள் !

மற்றொரு சோகக் கதையை ஓவிய உலகில் வழங்கும் ஒரு நகைச்சுவைத் துணுக்கு படம் பிடித்துக் காட்டுகிறது : .''பிரபல சைத்திரிகர் காராட் இரண்டாயிரம் ஓவியங்களைத் தீட்டினார்; அவற்றில் பத்தாயிரம் நியூயார்க்கில் உள்ளன !''

போலி ஓவியங்கள் அந்த அளவுக்கு மலிந்து விட்டன. அசலையும் நகலையும் பிரித்தறிய முடியாத அப்பாவி ரசிகர்களும் உலகில் அந்த அளவுக்கு இருக்கிறார்கள்.

ஓவியக் கலை பற்றி மிகச் சிறிதளவே அறிந்தவர்கள்கூட இரண்டு பெயர்களை மறக்க முடியாது. ஒன்று: மோனலிஸா. மற்றொன்று பிக்காஸோ.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த லேனார்டோ டாவின்சி என்ற சகல கலா வல்லவர் தீட்டிய மோனலிஸாவின் எழிலுருவம் இன்றளவும் விடுபடாத மர்மப் புன்னகையுடன் பாரிஸின் லூவ்ர் தொல்பொருள்காட்சி சாலையில்தான் உள்ளது. ஸ்பெயின் தேசத்தில் பிறந்தவரானாலும் புதுமை ஓவியக் கலையின் தந்தையாகக் கருதப்படும் பிக்காஸோ பிரான்ஸ் நாட்டில் குடியேறித்தான் தமது புரட்சிகளை ஓவிய உலகில் புகுத்தத் தொடங்கினார். சித்திரக் கலையில் பழமையைப் போற்றி, புதுமைக்கு ஆக்கமளித்து வரும் பாரிஸ் இதனை ஒரு நூதனமான விதத்தில் நிறைவேற்றுகிறது. அண்மைக் கால ஓவியங்களில் மிகச் சிறந்த படைப்புக்கள் எழில் கொஞ்சும் பூங்காவுடன் கூடிய லக்ஸம்பர்க் அரண்மனையில் வைக்கப் பட்டிருக்கின்றன. அந்த ஓவியர் மறைந்து பத்தாண்டுகளுக்குப் பிறகு அங்குள்ள அவரது ஓவியங்கள் லூவ்ர் அரண்மனைக்கு இடம் பெயர்கின்றன. இவ்வாறாக, ஸேன் நதியின் வடகரையில் ஓர் அரண்மனையிலும் கலையரசி கொலுவிருந்து செங்கோலோச்சுகிறாள் பாரிஸில். ஒரு காலத்தில் மன்னாதி மன்னர்கள் வாழ்ந்த அரண்மனைகளில் இன்று உலகையே ஓவியக் குடையின் கீழ் ஆளும் கலைத் தேவி வாசம் புரிவது பொருத்தமே அல்லவா?

லூவ்ர் அரண்மனையில் இடம் பெற்றுள்ள தொல்பொருள் காட்சி சாலையைச் சுற்றிப் பார்த்ததில் சீக்கிரமே களைத்துப் போனாள் அனுபமா. நடக்க நடக்க முடிவற்றதான நாழ்வாரங்கள். புகுந்து வெளிவரப் புதிது புதிதாய் முளைப்பது போன்ற கூடங்கள், அளந்து அளந்து மாளாத கலைப் பொக்கிஷங்கள், பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத ஓவியங்கள் இவற்றை இனி மேல் தாங்கமுடியாது என்ற நிலையில், 'பார்த்தது போதும்' என்று தீர்மானித்து அரண்மனையை விட்டு வெளியே வந்தார்கள் தனஞ்செயனும் அனுபமாவும். விசாலமான பசும் புல் தரையில் நவீன பாணிச் சிற்பம் ஒன்றுக்குப் பக்கத்தில் குளிர் சூழலுக்கு இதமளிக்கும் கதகதப்பான சூரியக்கிரணங்களை அனுபவித்துக் கொண்டு அமர்ந்தார்கள்.

'' மைக்கேல் நம்முடன் வந்திருக்கலாம்'' என்றாள் அனுபமா. ''அவர் இதை யெல்லாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறார் என்றாலும் வெகுவாக ரசிப்பார். நமக்கு விஷயங்களை விளக்கிச் சொல்வதிலும் மகிழ்வார். சுவாரசியமாக இருந்திருக்கும்.''

''ஏன் வரவில்லை?'' என்றான் தனஞ்செயன். ''நேற்று அபரிமிதமாகக் குடித்ததன் ஹாங் ஓவரா?''

''ஆமாம்; தலையில் ஐஸ் பையை வைத்துக் கொண்டு வலியைச் சமாளிக்கப் பார்க்கிறார். 'துணைக்கு நானும் உங்களுடன் இருந்துவிடுகிறேன். தனஞ்செயன் போய் வரட்டும்' என்றேன். ஆனால் அவர் கேட்கவில்லை. என்னைப் பார்த்துக் கொண்டிருந்தால் அவருக்கு இரவில் நடந்த சம்பவங்கள் நினைவு வந்து மனத்தை உறுத்துமாம்! 'சற்று நேரம் தனிமையில் இருந்து இரவில் முட்டாள்தனமாக நடந்துகொண்டதை மறக்க முயல்கிறேன்' என்றார். எத்தனை நல்ல மனசு பார்த்தீர்களா?''

தனஞ்செயன் சிரித்தான்: ''நல்ல மனசு! காமாதுரனாக உன் அறைக்குப் படையெடுத்து வந்தானே, அப்போது



அந்தத் [illegible]மான உள்ளத்தைக் கழற்றிக் 'கோட் ஸ்டாண்'டில் மாட்டிவிட்டு வந்தானா?''

''அப்படி அவர் நடந்து கொண்டது அவர் தவறல்ல. மது என்ற ஒன்றைக் கண்டுபிடித்தவனின் குற்றம். எல்லாரிடமுமே உள்ள அரக்க குணங்களை நாகரிகப் பண்பாடுதானே அடக்கி ஆண்டு வருகிறது? மதுவாகிய விஷம் நாகரிகப் பண்பாடுகளைக் கொன்று விடுகிறது. அரக்கக் குணங்களை அது பாதிப்பதில்லை. அவை தலைதூக்குகின்றன. விஷம் இறங்கியதும் நிலைமை மீண்டும் சீர்ப்பட்டு விடுகிறது.''

''எனக்குப் புரியவில்லை. எவ்வளவு மட்டமாக, அசிங்கமாக அவன் நடந்து கொண்டான்! ஆனாலும் அவனுக்குத்தான் நீ பரிந்து பேசுகிறாய்!'' என்று தனஞ்செயன் நினைவுத் திரையில் அந்தக் காட்சி விரியக் கண்டான்.

படபடவென்று கதவைப் பலமாகத் தட்டியும் பயனில்லாது, தோளினால் முட்டி மோதிப் பூட்டை உடைத்தெறியத்தான் வேண்டும் என்று தனஞ்செயன் தீர்மானித்த கட்டத்தில் மைக்கேல் கதவைத் திறந்தான். தனஞ்செயன் எழுப்பிய சத்தத்தினால் தாக்குண்டு ஓரளவு சுயநினைவு திரும்பியவனாக இயங்கிய அவன் வெட்கித் தலை குனிந்தபடி மௌனமாகத் தன் அறைக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தான்.

இப்பால் அனுபமா மெல்லிய நைட் கௌனுக்கு மேலாகப் படுக்கை விரிப்பை இழுத்துச் சுருட்டிப் பிடித்துக்



கொண்டு பீதியால் விரிந்த இமைகளும், துயரத்தால் வடிந்த கண்ணீரும், போராட்டத்தால் கலைந்த கேசமும், அவமானத்தால் குன்றிய உடலுமாக நின்ற கோலம் தனஞ்செயனின் உள்ளத்தை உலுக்கியது.

''அனு'' என்று அவன் அவளை நாத் தழுதழுக்க அனுதாபத்துடன் அழைத்து நெருங்க ஓரடி எடுத்து வைத்தபோது அவள் சரேலென்று ஓரடி பின்வாங்கினாள். ஆண் வர்க்கத்தின் ஸ்பரிசத்தை, நெருக்கத்தை, வாடையை ஏன் தொலைதூரத் தோற்றத்தைக் கூட அவள் இன்னும் சிறிது நேரத்துக்கு விரும்ப மாட்டாள். அவ்வளவு அவலம் அவளைச் சூழ்ந்துள்ளது என்பதைத் தனஞ்செயன் புரிந்து கொண்டான். இருந்தாலும் ஒரே ஒரு விரலை மட்டுமே நீட்டிக் கன்னத்தில் முத்தாக நின்ற கண்ணீர்த் துளியை அகற்றாமல் அவனால் இருக்க முடியவில்லை. அவள் மேனி அப்போது வெடவெடவென்று நடுங்கியது. கட்டிலில் சக்தியற்றுச் சரிந்து தலையணைகளில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

சிறகுகள் துண்டிக்கப்பட்டுத் துயருற்றுச் சாய்ந்த ஒரு தேவதை போல் காட்சி தந்த அவளைக் காணக் கோபம் பொங்கியது, தனஞ்செயன் உள்ளத்தில். ''அனு! நீ தைரியமாக இரு. இப்போதே போய் அவனுக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டு வருகிறேன்'' என்று கூறித் திரும்பினான் வேகமாக.

சரேலென்று அவள் எழுந்து பாய்ந்தாள். இடக் கரம் இன்னமும் படுக்கை விரிப்பை நெஞ்சோடு சேர்த்துப் பற்றியிருக்க, வலக் கரத்தால் அவன் தோளைத் தொட்டு நிறுத்தினாள். ''வேண்டாம்! ப்ளீஸ்! அனாவசியமாக இதைப் பெரிதுபடுத்தாதீர்கள்! எனக்கு ஒரு தீங்கும் நேர்ந்து விடவில்லை. அவரை எந்த விதத்திலும் கோபிக்கவோ துன்புறுத்தவோ மாட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து கொடுங்கள்!''

அவளுடைய கோரிக்கை நியாயமற்றதாகத் தோன்றினாலும் அவள் முகத்தின் கெஞ்சுகிற பாவத்தை அவனால் நிராகரிக்க முடியவில்லை. இதற்குள் வேறு அறைகளிலிருந்து சந்தடி கேட்டு எழுந்து வந்தவர்களை ஒரு விபரீதமும் நடக்கவில்லை என்று கூறி மீண்டும் படுக்கப் போகச் சொல்ல வேண்டிய பொறுப்பு அவனுக்கு வந்து சேர்ந்தது. அப்படியே தன் அறைக்கு அவன் திரும்பி விட்டான்.

34. விகாரமான தொழில்

இரவின் பயங்கர நினைவுகளை ஒதுக்கித் தள்ள முடியாமல் கஷ்டப்பட்ட தனஞ்செயன் லூவர் தொல்பொருள் காட்சிச்சாலையின் தோட்டத்தில் உலாவியபடி அனுபமாவைக் கேட்டான்: ''எப்படி உன்னால் அவனை இவ்வளவு சுலபமாக மன்னித்துவிட முடிகிறது?''

''நான் அவருடன் பழகியுள்ள அளவுக்கு நீங்களும் பழகியிருந்தால் உங்களுக்கும் அவரை மன்னிப்பது சிரமமாகவே இராது'' என்றாள் அனுபமா. ''உங்களுக்கு நன்றாகத் தெரியும். இளம் தலைமுறை அமெரிக்கர்களில் பெரும்பாலோர் பாலுணர்வைத் திருமணத்துடன் இணைந்த புனித விஷயமாகக் கருதுவதே இல்லை என்று.''

''உண்மைதான். குழாயைத் திறந்து தண்ணீர் பிடித்து அருந்துவது மாதிரி அவர்கள் சரீர தாகத்தையும் தயக்கமின்றித் தணித்துக் கொள்ளுகிறார்கள்.''

''இத்தகைய ஒரு வெட்கக் கேடான சூழ்நிலையில் என் பிறப்பு, என் உடலில் ஓடும் ரத்தம், என் இதயத்தின் உணர்ச்சிகள் இவற்றுக்கு மதிப்பு அளித்து மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டு வந்திருக்கிறார் மைக்கேல். அவரை, 'அமெரிக்க ராமர்' என்று கூட நானே கூறிக் கேலி செய்தது உண்டு. அப்படிப்பட்டவர் இவ்வாறு மாறுவானேன் என்று யோசிக்கிறீர்களா?''

''நான்தான் அதற்குக் காரணம் என்கிறாயா என்ன?''

''ஆமாம்! ஈஃபெல் டவரில் நீங்கள் நடந்து கொண்ட விதத்தால் அவர் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார். என்னை உங்களிடம் இழந்து விட நேரலாம் என்ற கவலை அவரை ஆட்கொண்டிருக்கிறது. அதைத் தம் மனத்துக்குள்ளேயே வைத்து மறுகியிருக்கிறார். மது மயக்கத்தில் அவர் அடக்கியாண்ட உணர்ச்சிகள் கட்டுமீறிவிட்டன. நாம் ஒருவரை யொருவர் நேசிப்பதாக அவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் விளைவாக, ராமனாயிருந்தவர் அர்ஜுனனாய் மாற முற்பட்டார்.''

தனஞ்செயன் ஏளனமாகச் சிரித்தான். ''அவனது இந்த நடத்தை அவனுக்கு உன்னிடம் உள்ள ஆழ்ந்த காதலுக்கு அத்தாட்சி என்று கூட



இன்பமயமான கனவுக் காட்சி...
மபத்லால் துணிமணிகளின் ஆட்சி!

இன்பமயமான ஒரு கனவு...
அழகு ஆட்சி நடத்தும் உங்கள்
துணிமணிகளைப் பார்க்கும்
விழிகளெல்லாம் உங்களை விட்டு
அகல மறுக்கின்றன. திடுமென
விழிப்பு...கனவல்ல நனவே என்பதை
உணர்கிறீர்கள். பாலியெஸ்டர்
இழைகலந்த கவின்மிகு ஷர்ட்டிங்,
ஸூட்டிங் அல்லது ரெடிமேட்
ஆடைகள் அணிந்த நீங்கள்
உண்மையிலேயே கவர்ச்சியின்
கருநாயகமாக விளங்குகிறீர்கள்!

மபத்லால் க்ரூப்
அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்

டெரோஸெல்
பாலியெஸ்டர் இழைகலந்த
ஷர்ட்டிங்குகள்

டெரோஃபில்
பாலியெஸ்டர் ஃபிலமெண்ட்
யார்ன் துணிகள்

எஸ்டர்காட்
பாலியெஸ்டர்
இழைகலந்த
ஸூட்டிங்குகள்

மபத்லால் அப்பேரல்
அளிக்கும்
கவர்ச்சிமிக்க
ரெடிமேட்
ஆடைகள்

AIYARS-M. 339 TM

அடுத்தாற்போல் சொல்லுவாய்!'' என்றான்.

'' நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தை'' என்றாள் அனுபமா. ''நள்ளிரவுக்கு மேல் அவர் நடந்து கொண்ட விதத்தால் எனக்கு அவரிடம் சிறிது ஏமாற்றம் ஏற்பட்டிருப்பது என்னவோ நிஜம்தான். ஆனால், அவருக்கு நான் அளித்துள்ள, அளித்து வருகிற, இனி அளிக்கப் போகிற ஏமாற்றங்களுடன் ஒப்பிடும்போது எனக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றம் ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.''

''அவன் காதலை ஏற்காமல் ஏமாற்ற மளித்து வருவது ஒரு பக்கம்; அவனை ஏமாற்றி இந்தியாவுக்கு அழைத்துப் போவது மறு பக்கம் என இரண்டு வித ஏமாற்றங்களைக் குறிப்பிடுகிறாயா அனு?''

''ஆமாம். என் இதயம் அதை நினைக்கும்போது நெகிழ்ந்து போகிறது.''

'' அனுதாபத்தால்தானே? காதலால் இல்லையே?'' என்றான் தனஞ்செயன் சிறிது கலக்கத்துடன் — அதனைப் புன்னகையால் மறைத்துக் கொண்டு பேசினான்.

'' இப்போதைக்கு அனுதாபம்தான் மேலோங்கி நிற்கிறது. ஆனால் அது காதலாகவும் பரிணமித்தால் நான் சந்தோஷப்படுவேன்'' என்றாள் அனுபமா. ''ஆனால் இந்தப் பாழும் மனம் அவ்வளவு சுலபமாய் அசைந்து கொடுப்பதாய்க் காணோம்!'' சுய வெறுப்பு மிக அவள் கூறுவதைக் கேட்டு அவன் அவளை வியப்போடு பார்த்தான். அனுதாபம் காரணமாக ஒருவனின் காதலை ஏற்க வேண்டும் என நினைத்து, ஆனால் ஏற்க முடியாமல் தவிக்கும் பெண் மனம் எவ்வளவு விசித்திரமானது!

ஆச்சரியத்தையும் மீறி அவனுக்குக் கோபமும் பொங்கியது. அதை வெளிக் காட்டிக் கொள்ளக் கூடாது, தாங்கள் இருவரும் தர்க்கத்தில் ஈடுபடுவது வெளியே தெரியக் கூடாது என்றும் தனஞ்செயன் அறிந்திருந்தான். மீசைக்காரனை இன்று காணோம். ஆனால் அவனுக்குப் பதில் வேறு ஒருவன் கடமை ஏற்றுத் தங்களைக் கண்காணித்து வருவான் என்பது நிச்சயம். அவனுக்கு அநாவசியமாகச் சந்தேகங்களை ஏற்படுத்தாமல் இருக்க இவர்கள் முக பாவங்களிலும் உடல் அசைவுகளிலும் கோப தாபங்களை வெளிப்படுத்தாமல் இருப்பது நல்லது. தமிழில் பேச முடிவதும் ஒரு வசதிதான். அமைதியுடனேயே அவன் வினவினான்: ''இருநூறு உயிர்களைக் குடிக்கக் காத்திருந்த அரக்கனை வென்ற என்னைப் பற்றி நீ இழிவாகப் பேசுகிறாய். உன்னைக் கற்பழிக்க முற்பட்ட மைக்கேலைக் குறித்து உயர்வாகக் கூறுகிறாய்! இந்த முரண்பாட்டில் உள்ள முட்டாள்தனம் உனக்குப் புரியவில்லையா?''

''இதை முரண்பாடு என்று நீங்கள் கருதுவதுதான் பரிதாபம்'' என்றாள் அனுபமா. ''மைக்கேல் அநாகரிக எண்ணங்களை அடக்கி ஆளத் தெரிந்தவர். மதுதான் கட்டுப்பாடுகளைக் கரைத்து விட்டது. ஆனால் நீங்கள் சுய நினைவோடு இருக்கையிலேயே நாகரிக உணர்வுகளை ஒதுக்கிவிட்டுக் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டீர்கள். இரண்டுக்கும் வித்தியாசம் இல்லையா?''

''இருநூறு விமானப் பயணிகளின் உயிர்களைக் காத்தது காட்டுமிராண்டித்தனமா?''

''இல்லை. இரண்டு உயிர்களைப் பறித்ததுதான் அக்கிரமம்.''

'' அனு! அவர்கள் ராட்சதர்கள். விமானத்திலிருந்த அனைவரையும் கூண்டோடு கைலாசத்துக்கு அனுப்பத் தயாராயிருந்தவர்கள்!''

''ஆனாலும் என்ன? இருவருமே உங்களிடம் தோற்றுப் போனார்கள். அவர்களை நிராயுதபாணிகளாக்கி விடக்கூடிய திறமை உங்களிடம் இருந்தது. அதன் பின் அவர்களைச் சுலபமாகக் கட்டிப் போட்டு வைத்துப் போலீஸாரிடம் ஒப்படைத்திருக்கலாம். ஆனால் நீங்கள் உங்களிடமிருந்த ஜிம்கார்ட்டரின் துப்பாக்கியைத் தாழ்த்தி, பால் ஸ்மித்துக்குத் தன் ஆயுதத்தை உயர்த்து மாறு ஆசை காட்டினீர்கள். அந்த வலையில் அவன் விழுந்தபோது அவனைச் சுட்டுத் தள்ளினீர்கள். பிறகு வாய் திறக்கவும் துணிவின்றி மௌனமாகக் கண்களாலேயே உயிர்ப் பிச்சை கேட்ட ஜிம்கார்ட்டரையும் ஏதோ கொசு அடிப்பது போன்ற அலட்சியத்துடன் தோட்டாக்களைப் பாய்ச்சிக் கொன்றீர்கள்!''

''அவர்களுக்கு மரண தண்டனை அளிப்பதில் தவறில்லை'' என்றான் தனஞ்செயன்.

''போலீஸார் உட்பட எல்லோருமே உங்கள் முடிவுக்குத்தான் வருவார்கள். அந்தத் தைரியத்தில்தான் நீங்களும் இயங்கினீர்கள். ஆனால் நான் அப்படிக் கருதமாட்டேன். மனித உயிர்கள் உங்களுக்கு அவ்வளவு கேவலமாகப் போய் விட்டதா? சட்டத்தை, ஒழுங்கை நிலை நாட்டப் போலீஸும் நீதிமன்றங்களும் இருக்கும்போது அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் பொறுப்பை நீங்கள் ஏன் ஏற்க வேண்டும்? இதை

வீரம் என்று உயிர் பிழைத்த சந்தோஷத்தில் மற்றவர்கள் பாராட்டலாம். ஆனால் நான் வடிகட்டின கோழைத்தனமாக எண்ணுகிறேன். அத்துடன் உங்கள் உள்ளத்தின் ஒரு கொடூரமான பகுதியையும் உணர்கிறேன்,''

''கொடுமைதான் அனு! இதற்குச் சமாதானமாக நான் எஃப். பி. ஐ. ஆசாமி மைக்கேலிடம் கூறியதைத் தான் திருப்பிச் சொல்ல முடியும். மைக்கேல் நமக்கு அந்தச் சம்பவத்தை வர்ணித்தான் அல்லவா? என்ன சொன்னான்? 'உங்கள் மனங்களே விகாரமானவை' என்று எஃப். பி. ஐ. பேர் வழிகளை இவன் நிந்தித்தான். அதற்கு அவர்களுடைய பதில்: '' இந்தத் தொழில் விகாரமானது என்று சொல்லு. எங்கள் மனங்களைப் பழிக்காதே!''

பளிச்சென்று அனுபமாவுக்கு ஓர் எண்ணம் உதித்தது. 'அடடா இது ஏன் நமக்கு முன்னமே தோன்றாமல் போய்விட்டது' என்று எண்ணினாள். ''ஹைஜாக்கர்களைப் போலீஸாரிடம் ஒப்படைத்திருந்தால் அவர்கள் விசாரணைக்கு உள்ளாகி யிருப்பார்கள்!''

''ஆமாம் அனு! சித்திரவதை தாங்க முடியாமல் அவர்கள் உண்மையைக் கக்கி யிருப்பார்கள். அதாவது அனுபமாவையும் மைக்கேலையும் இந்தியாவுக்குக் கடத்திக் கொண்டு போக முயலும் ஒற்றன் நான் என்று கூறியிருப்பார்கள். பாகிஸ்தானிய கைக்கூலிகளான அவர்கள் அதைத் தடுத்து நிறுத்தவும், அதே சமயம் அந்த விஞ்ஞானிகளைப் பாகிஸ்தானுக்கு அழைத்துச் செல்லவும் கருதி, விமானத்தை ராவல் பிண்டிக்கு ஹைஜாக் செய்து கொண்டு போக முற்பட்டதாகச் சொல்லியிருப்பார்கள். வாக்குமூலமாக எழுதித் தந்து கையெழுத்தும் போட்டிருப்பார்கள்.''

''எஃப். பி. ஐ. தேடிக் கொண்டிருக்கும் வலுவான சாட்சியம் கிடைத்து விடும். பிறகு மைக்கேலைத் தடுத்து நிறுத்த அவர்கள் தயங்கமாட்டார்கள்.''

''என்னுடைய அமெரிக்கப் பயணம் படுதோல்வியில் முடிந்திருக்கும்!''

''நீங்கள் யார், உங்கள் உள்நோக்கம் என்ன என்பது பற்றிய வலுவான சாட்சியம் ஏதும் இன்னும் எஃப்..பி. ஐ.க்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் மைக்கேல் இந்தப் பயணத்தைப் பாதியில் கைவிட்டுவிட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தாமல் இருக்கமாட்டார்கள். அதில் அவர்கள் வெற்றி பெற்றால், அவர் தாமாகவே இஷ்டப்பட்டு அமெரிக்கா திரும்பியது போல் தோன்றும். இப்போதுகூட எஃப். பி. ஐ. அந்த முயற்சியில்தான் ஈடுபட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்'' என்றாள் அனுபமா.

''அனு! நீ என்ன சொல்கிறாய்?''

''மைக்கேல் நம்முடன் இங்கு கிளம்பி வராததற்குத் தலைவலி மட்டும் காரணமில்லை. தம்மைச் சந்திக்க வருவதாக ஒரு நண்பர் ஃபோன் செய்திருப்பதாகவும் சொன்னார்.''

''அவன் வாஷிங்டனிலிருந்து பாரிஸுக்குப் பறந்து வந்துள்ள .எஃப். பி. ஐ. ஆசாமியாகத்தான் இருப்பான்'' என்றான் தனஞ்செயன். ''அனு! நாம் உடனே ஹோட்டலுக்குத் திரும்ப வேண்டும். ஆனால் பதற்றமடைந்தது போல் காட்டிக் கொள்ளாதே!'' இவ்வாறு கூறினானே யொழியப் பரபரப்பை மறைத்துக் கொண்டு இயல்பாக நடக்கத் தனஞ்செயனே அரும் பாடு பட்டான்! (தொடரும்)

<u>வட்டமேஜை</u>

வெட்கக் கேட்டிலும் வெட்கக் கேடு!

சென்னையில் திரு பால்கிவாலா அவர்கள் பேசியதிலிருந்து சில பகுதிகளைக் கல்கி 28–4–74 இதழில் வெளியிட்டிருக்கிறீர்கள்.

அதில் சிமெண்ட் உற்பத்தியாளருக்கு மூட்டைக்கு ஒன்றோ இரண்டோ லாபம் கிடைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பால்கிவாலா சொன்னது டன் ஒன்றுக்கு (அதாவது இருபது மூட்டைக்கு) ரூபாய் ஒன்றோ இரண்டோ உற்பத்தியாளருக்கு லாபம் கிடைக்கிறது என்பதுதான். அதே சமயம் சிமெண்டைக் கள்ள மார்க்கெட்டில் விற்கும் இடைத் தரகர் மூட்டை ஒன்றுக்கு ரூபாய் இருபத்து மூன்று வீதம் லாபம் பெறுகிறார் என்பதாக அவர் குறிப்பிட்டார்.

சென்னை எஸ். பி. பிரபாகர ராவ்
27–4–74 பொதுஜனத் தொடர்பு அதிகாரி
இந்தியா சிமெண்ட்


(கல்கியில் வெளியாகியுள்ள செய்தியே இந்திரா ஆட்சியில் நிலவும் ஒரு வெட்கக்கேடான பொருளாதாரச் சூழலைச் சுட்டுகிறது என்றால், இந்தியா சிமெண்ட்ஸ் பொதுஜனத் தொடர்பு அதிகாரி அனுப்பியுள்ள திருத்தம் அந்த வெட்கக்கேட்டை இருபது மடங்கு ஆக்குகிறது! -ஆசிரியர்.)

மைக்ரோஃபைன்ட்
ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனால்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது—

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோ:.பைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • :.ப்ளூ • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோ:.பைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் (N) தயாரிப்பு

A G 57 TM

“இன்பமே வடிவாகிடப் பெற்றாள்”

நாம் உலகில் அநுபவிக்கிற இன்பங்கள் நிலையாக இருக்கவில்லை. துன்பங்களுக்கு நடுநடுவே இன்பம் கொஞ்சம் தலைதூக்கிக் காட்டுகிறது. இப்படி இன்றி, எப்போதும் இன்பமயமாகவே இருக்க வழி என்ன? இந்த உலகத்தின் இன்ப துன்பங்கள் அனைத்துக்கும் மூலாதாரமான பொருளை உணர்ந்துவிட்டால் அப்புறம் சாசுவத ஆனந்தம்தான். இவ்வாறு மாறுகிற உலகத்தையும் மாறாத மூலப் பொருளின் லீலையாகவே கண்டு அந்த மூலப்பொருளோடு ஒன்றியிருக்கும் நிரந்தர ஆனந்த நிலையின் உருவாகி யிருப்பவர்தான் மா ஆனந்தமயி. அநுபவ மயமாகிவிட்ட அவருக்கு ஒரு சரீரம் இருப்பதாகவோ சரிதை இருப்பதாகவோ அவர் லவலேசமும் எண்ணவில்லை. ''நான் என்றும் நானாக இருந்தேன், இருக்கிறேன், இருக்கப் போகிறேன்'' என்று காரியமற்ற சமாதி நிலையிலிருந்து அவர் கூறுகிறார். ஆனால் நம்முடைய கோணத்திலிருந்து நோக்கினால், பக்தி புரிந்து நம் அன்பை அவரிடம் கொட்டி அதிலேயே நமது பாபச் சுமைகளைக் குறைத்துக் கொண்டு, தாற்காலிகமாகவாவது நாமும் ஆனந்தமயர்களாவதற்கு அவரது திரு உருவம் வேண்டியிருக்கிறது. அதனை மையமாகக் கொண்டு அவரது ஆன்மாவுக்கு 'வெளி'யே நடந்த திருவிளையாடல்களும், திவ்விய சரிதையும் நம் மேம்பாட்டுக்கு அமுத சஞ்சீவினியாக உள்ளன. தமக்கெனச் சங்கற்பம் அற்ற ஆனந்தமயியின் மூலம் அருவப் பொருளின் அருள் வழிகிறது என்பதைவிட, நம் முன் உருவம் கொண்டுள்ள ஆனந்த மயியே இந்த அருட் செயல்களைப் புரிகிறார் என்று பாவிப்பதே பக்த இதயத்தைக் குளிர்விக்கிறது. இவ்வாறு நம் நெஞ்சத்தை நனைக்கிற * ஒரு நூலை ஆக்கித் தந்துள்ள ஸ்ரீ ஸியாமாநந்த பானர்ஜிக்கு ஆஸ்திகருலகம் மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளது. பல சமய உண்மைகளையும் ஆசாரிய புருஷர்களின் அநுபவச் சிறப்புக்களையும் அறிந்துள்ள அறிஞரான பானர்ஜி, அந்த அறிவைப் பக்தியில் முழுக்கி அளித்துள்ள அரிய நூல் இது. அறிவு எல்லா அம்சங்களிலும் பக்திக்குக் கட்டுப்படாது. சில இடங்களில் முரண்டு பிடித்துக் கொண்டு தன் வன்மையைக் காட்டத்தான் முயலும். இந்த நிலையில் விளங்கவொண்ணாத அன்னையின் ஆற்றல் பலவற்றை அறிவால் கிரகிக்கப் பார்த்துத் தோற்றுப் போவதையும், முரண்பாடுகளில் முட்டிக் கொள்வதையும்கூட இந்நூலில் ஆங்காங்கு காணத்தான் செய்கிறோம். ஆனாலும் உளமார்ந்த பக்தி என்பது இந்தக் குறைபாடுகளுக்கு மேலாக நூலைத் தூக்கிவிட்டு நம்மையும் தூக்கிவிட்டு ஆனந்த மயியின் அன்பு என்கிற நிர்மல வானில் நம்மை நிறுத்துகிறது. இம்மாதம் ஒன்பதாம் தேதி அன்னைக்கு 79வது ஜயந்தி கொண்டாடப்பெறும்போது நிர்மலவானமான அந்த நித்திய தத்துவத்தை வணங்குகிறோம்.

* A Mystic Sage Ma Anandamayi, By Shyamananda Banerjee, Pub: Author, P 469. C. I. T. Keyatala, Calcutta-29. Price: Rs. 30.

[அன்னையின் ஜயந்தியை முன்னிட்டு மே 10-ந் தேதியிலிருந்து ஜூலை 10ந் தேதி வரை பிரதியொன்று ரூ. 20க்குக் கிடைக்கும்.]





பலவீனம்

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

பஸ்ஸில் கணவனுடன் உட்கார்ந்து கொண்டிருந்த ஜயந்தி, வெளியே பார்த்துக் கொண்டிருந்த பார்வையை ஒரு கணம் அவன்புறமாகத் திருப்பினாள். சங்கர் அவளைக் கவனிக்கவில்லை. அவனுடைய ஓரக் கண் பார்வை, மேலே குழல் கம்பியைப் பற்றியபடி கட்டு நோட்டுப் புத்தகமும், மார்போடு அணைத்த டிபன் டப்பாவுமாக நின்று கொண்டிருந்த கல்லூரிப் பெண்ணின் மீது பதிந்திருந்தது.

கீழே விழப் போன டப்பாவைச் சங்கர் சாதுரியமாகத் தாங்கிக் கொண்டான். ஆழமான நீரில் நலுங்கும் ஒளி போல் அந்தப் பெண்ணின் முக அசைவில் அழகு சிந்திற்று. புன்னகையுடன் அவன்புறமாகக் குனிந்தாள்.

“தாங்க் யூ.”

“நோ மென்ஷன். நீங்கள் உட்காருங்கள்” என்று சங்கர் எழுந்து தன் இடத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டான். ஜயந்தி மீண்டும் அவனைப் பார்த்தாள். வீணைத் தந்தி மேல் விரலைப் போல், அவன் பார்வை அவர்கள் இருவர் மீதும் மாறி மாறி ஆடிக் கொண்டிருந்தது. கொஞ்சம் எரிச்சலுடன் உதட்டைத் திருகிக் கொண்டாள்.

இப்போதெல்லாம் சங்கருக்கு அது வழக்கமாகிவிட்டது. ஒரு வாரத்துக்கு முன்னால் ஒரு நாள். குழந்தைகளை மாமா வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவர்கள் மட்டும் கடற்கரைக்குப் போயிருந்தார்கள். அதைப் போல் அவர்கள் தனியாகப் போய் வெகுநாட்களாயிற்று.

அவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகே இரண்டு அழகான குழந்தைகள் மணலில் விளையாடிக் கொண்டிருந்தன. அந்த அலை அழகுக்கு இணையாக மணலில் படர்ந்த வெய்யிலுக்கே ஒரு மனோகரமான மங்கல்; ஜாதி நாயனத்துடன் ஒட்டி இழையும் ஒத்துப் போல.

அந்தக் குழந்தைகளின் அக்காவாக இருக்க வேண்டும் — ஒரு பெண். பெல்பாட்டமும், முழுக் கைச் சட்டையுமாக அங்கே ஓடி வந்து நின்றாள். அவள் கண்களில் புன்னகையின் அரும்பொளி நிழல் தட்டிற்று. சங்கரிடம் வந்து கேட்டாள்.

“குழந்தைகள் அலையில் நிற்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார்கள். என்னால் சமாளிக்க முடியாது. நீங்கள் உதவ முடியுமா?”

சங்கர் சிரித்துக் கொண்டே மணலை உதறிக் கொண்டு எழுந்தான், “இட்ஸ் எ பிளெஷர்!” என்று சொல்லியபடி. ஜயந்தியின் புறம் திரும்பக்கூட இல்லை. அலைகளின் ஒதுங்களில் ஆளுக்கொரு குழந்தையாகப் பிடித்துக் கொண்டு, அவர்கள் அவள் கண்ணெதிரே நின்ற போது, ஜயந்திக்கு என்னவோ போல் இருந்தது.

சங்கர் திரும்பி நடந்து வந்து அவளை அழைக்கும்போது இருட்டிவிட்டது. வழி முழுவதும் அவள் அவனுடன் பேசவேயில்லை.

இரவு சங்கரும் குழந்தைகளும் சீக்கிரம் தூங்கிவிடுவார்கள். வேலைகளை முடித்த பிறகு ஏதாவது பத்திரிகைகளைப் புரட்ட அவளுக்கு அப்போதுதான் நேரம் கிடைக்கும். படுக்கை விளக்கைப் போட்டுக் கொண்டு, தலையணையில் சாய்ந்தபடி தூக்கத்தில் கண்கள் செருகும் வரை படித்துக் கொண்டிருப்பாள்.

அன்று அவள் கையில் அந்த ‘ஆல்பம்’ தட்டுப்பட்டது. அவர்களுக்கு மணமான புதிதில் சங்கர் தொகுத்த புகைப்படங்கள். வெய்யிலில் பட்டு நீர்த் துளி வெவ்வேறு வர்ணம் எழுப்புவதைப் போல், காமிராவின் முன் அவன் தூண்டுதலில் அவளுடைய அழகின் வெவ்வேறு தோற்றங்கள் வெளிப்பட்ட நிலை. சங்கர் அவற்றை, அவளை மடிமீது

இழுத்து வைத்துக் கொண்டு ஆவலாகப் புரட்டிய நாட்கள் உண்டு.

இப்போது 'ஆல்பத்'தைப் புரட்டியபோது அந்த நினைவுகளையே புரட்டுவதைப் போல் இருந்தது.

சங்கர் அப்போது ஒரு கம்பெனியில் வேலையாக இருந்தான். மாடியில் ஓர் அறையில் தனியாக இருந்தான். அவன் ஸ்கூட்டரைக் கிளப்பும் சத்தம் கேட்டால் ஜயந்தி ஜன்னல் ஓரமாக வந்து நிற்பாள். அவன் புன்னகையில் அவள் முகம் முழு ஒளிவிடும்.

தோட்டத்தில் பூத்த ரோஜாவில் பெரிதாக ஒன்றை அவன் மேஜை மேல் கொண்டு போய் வைக்கும் பழக்கம் தொடங்கிற்று.

''ஓ, தாங்க்யூ. தாங்க்யூ. எவ்வளவு அழகு?'' என்று அவளைப் பார்த்தபடி சொல்வான். அவள் கன்னங்கள் சிவப்புப் பூக்கும்.

வெகுநாட்களுக்கு இந்தப் பார்வையும், பேச்சும் இப்படியே தயங்கித் தயங்கி நிற்கவில்லை. அவன் தேடிக் கொண்டிருந்தது வாழ்க்கைத் துணையாக ஓர் அழகான பெண்ணைத்தான். அவள் தந்தைக்கு ஜயந்தி அதிக சிரமம் கொடுக்கவில்லை.

கல்யாணத்துக்கு முன்பே அவளுக்கு அவனிடமிருந்து வாழ்த்துக் கடிதம் வந்திருந்தது. உள்ளே அழகான ரோஜாவின் படம் ஒன்றில், குறுக்கே அவன் எழுதியிருந்தான் — ''என்னுடைய ரோஜாவுக்கு.....''

அவனிடம் அவன் மணமான புதிதில் காட்டிய அன்பில் ஒரு வேகம் இருந்தது. சிறிது நேரம் அவளைப் பிரிந்திருந்தாலும் தவித்துப் போய்விடுவான்.

அவளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பக்கூட அவனுக்கு மனம் வராது. ''கொஞ்சம் என்னைப் பிரிந்துதான் பாருங்களேன். உங்கள் ஆசைக்கு அது 'பாலிஷ்' போட்ட மாதிரி இருக்கும்'' என்று அவனைச் சீண்டுவாள். அவன் முகம் பரிதாபமாய்ச் சுருங்கும். ஒரு வெற்றிப் புன்னகையில் அவள் கன்னங்கள் குழியும்.

அவர்கள் பிரியத்தான் வேண்டியிருந்தது : சாந்தாவின் பிரசவத்துக்கு. குழந்தையும் கையுமாக அவள் திரும்பி வந்தபோது அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயம் தொடங்கிற்று. இளம் வயதில் நேர்ந்த அவளது தாய்மை, அந்த அழகுக்கு ஒரு மெருகாய் அமைந்திருந்தது. இருவராய் இருந்த இடத்தில், இப்படி அவர்களுடைய குழந்தையுடன் சேர்ந்திருந்த பொழுதுகள்— அவர்கள் பேசிக் கொள்வதும்கூட அதிகம் இல்லை — பெருமைப் பார்வையுடன் சரி. இதயம் நிறைந்திருந்ததால் பேச்சின் பரிமாறலை அதுவே அமைத்துக் கொள்கிறது....

அப்புறம்தான் ராஜு பிறந்தான். ஆண் குழந்தை வேண்டும் என்று சங்கருக்கு ரொம்ப ஆசை. சாந்தா பிறந்தபோது அவனுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான். இரண்டு குழந்தைகளால் வீட்டில் ஒரு கலகலப்பு நிறைவாய்ப் புகுந்து கொண்டது. குழந்தைகளுக்குச் சரியாக அவனும் விளையாடுவான். ஸ்கூட்டரில் இரண்டு குழந்தைகளையும் ஏற்றிக் கொண்டு போவான். கடையில் அவர்கள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு திரும்புவான்.

ஜயந்திக்கு வீட்டில் இப்போது பின் தங்கிய இடம்தான். அவன் குறுக்கிட்டுப் பேசுவதும்கூடச் சில சமயம் அவளைப்





"புக்ககத்தை விட்டு விட்டும் பிறந்த வீட்டுக்குத் தான் வந்து சேர்ந்துட்டியே! இன்னும் எதுக்கு முகத்தைத் தூக்கிண்டு நிக்கறே?"

"மாமியார் நாத்தனார் ஓரகத்திகளுடனெல்லாம் சண்டை போட முடியலியே....!"

பொறுமை இழக்கச் செய்யும். வீட்டைப் பூட்டிக் கொண்டு போக முடியாது என்று நேரும்போது அவனுடைய பொழுதுபோக்குகளுக்குச் சாந்தாவின் துணைதான். ராஜுவும் ஒட்டிக் கொண்டுவிடுவான். தனக்கே தெரியாமல் அவன் எட்ட எட்டப் போவது போல், அவள் மனத்தில் ஓர் ஊமை உறுத்தல் இருந்தது.

கொஞ்ச நாட்களாகச் சங்கரிடம் இந்தப் பழக்கம் தோன்றியிருந்தது. நினைக்கும்போது எண்ணத் துணுக்குகளாக மின்னி மறையும் அந்த நிகழ்ச்சிகள்.

இந்தி சினிமாவுக்குப் போனபோது அவனுக்கு மறுபுறம் உட்கார்ந்து கொண்டு, அவனிடம் அர்த்தம் கேட்டுச் சிரித்துக் கொண்டேயிருந்த பெண் —

இருவரும் கல்யாண வரவேற்புக்குப் போன போது சந்தனப் பேலாவும் கையுமாக நின்றபடி அவனிடம், மிரளும் கருவிழிகளுடன் பேசிக் கொண்டிருந்த மங்கை —

ரேடியோ விற்பனை செய்யும் கடையில் இருவருமாக நுழைந்தபோது குழல் போன்ற குரலில் அவனை அடையாளம் கண்டு கொண்டு பேசிய சில இரட்டைப் பின்னல் சிந்தி அழகி —

நினைவில் ஒன்றன்பின் ஒன்றாய் அலை அலையாக எழுந்தது. அவள் கண்கள் அவனைவிட்டு அகலாத நாட்கள் உண்டு. இப்போது அவை நீரில் மீனாய்க் கணத்துக்குக் கணம் இடம் மாறி நழுவுகின்றன. அவள் அருகே இருந்தாலும் சரி; இல்லாமற் போனாலும்தான்.

அது முதலில் சங்கடமாகவும் வேதனையாகவும் இருந்தது. இப்போது நினைத்தால் மனத்தில் ஒரு கரிப்பு. அவளுக்குப் புரிகிறது. ஜயந்தி இன்னும் அந்த நாளைய ரோஜா மணி அல்ல. இரு குழந்தைகளுக்குத் தாய். அவளுடைய அழகிலும் இளமையிலும் அந்த நிலைக்குச் சரிந்துவிட்ட தேய்வும், மங்கலும் முத்திரை இடம் இல்லாமல் இல்லை.

ஆனால் அவள் அவனுடைய மனைவி. அவனுடைய கவனமும் தனிப் பிரியமும் அவளுக்குத்தான் சொந்தம். அது அவளுடைய உரிமை. அதை அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது? இது சங்கரின் வாழ்க்கையில் இரண்டாவது இளமையா? ஏன் இந்தப் பலவீனம்? கைதூக்கி விடுவாரின்றி அவள் மனம் தவித்தது.

"ஜயந்தி! இன்று ராத்திரி என்னுடைய ஆபீசில் புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் நண்பர் ஒருவரைச் சாப்பிட அழைத்திருக்கிறேன். மனைவியோடு வருவார். அவருக்கு வீடு தெரியாது. அதனால் அவர்களை நானே அழைத்துக் கொண்டு திரும்பி வருவேன்" என்று முன்ஜாக்கிரதையாகக் காலையில் சாப்பிடும் போதே சங்கர் சொல்லிவிட்டான்.

மாலையிலிருந்தே அவள் தயாராகிவிட்டாள். அன்று அவனுக்குப் பிடித்த மாதிரி உடை. அவனுக்குப் பிடித்த சமையல். அவனுக்கு அவள் பேச்சும் பழக்கமும் பழைய நினைவுகளை ஞாபகப்படுத்த வேண்டும். ஜயந்தி உள்ளத்தின் அடியில் நினைவு மலரும் குளிர்ச்சியை எதிர்பார்த்து நின்றாள்.

வாசலில் டாக்ஸி வந்துவிட்டது. சங்கர் வந்துவிட்டான். பின்னாலேயே அவர்கள் வந்தார்கள். அவளுக்குச் சங்கர் அவர்களை அறிமுகம் செய்து வைத்தான். மானேஜர் பட். அவருடைய மனைவி கல்பனா. வெள்ளி மணிகளின் கிண்கிணிப்பாய் ஒரு சிரிப்பு. சந்தனக் குழம்பு நிறம். அதன் பளபளப்பும் இளமையின் செழுமையுமாக நின்றாள் கல்பனா. அந்தப் புடவை வேறு யாருக்கும் அத்தனை அழகாக இருந்திருக்க முடியாது. ஜயந்தி வரவேற்புச் சொல்லக்கூட மறந்து நின்றாள்.

மூவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் சமமாக அரசியல், கலை என்று ஒன்று விடாமல் பேசினாள் கல்பனா. சாப்பிட உட்கார்ந்த போதும் அப்படித்தான். சங்கர் அவளோடு பேசிய போதும், பழகிய போதும் அவன் கவனத்தில் ஒரு தனி நயம் தெரிவது போலத் தோன்றியது.

ஜயந்தி சரியாகப் பேசவேயில்லை. நயந்து பழகவும் இல்லை. ஏதோ ஓர் இம்சை மனத்தை அலைத்துக் கொண்டேயிருந்தது. அவர்கள் புறப்பட்டுப் போய்விட்டார்கள். சங்கர் வாசல் வரை போய் வழி அனுப்பிவிட்டு வந்தான். அவள் எழுந்து போகக்கூட இல்லை. எல்லாம் போட்டது போட்டபடி, வீடு 'ஹோ'வென்று இருந்தது. மனத்துள் அது வரை தெரியாமலும் மறைந்தும் அமுங்கிப் போயிருந்த மனக் கசப்புக்களும் ஆத்திரங்களும் பொங்கி எழுந்தன.

சங்கர் அவளிடம் வந்து ஏதோ பேசினான். அவன் பேச்சிலேயே சொல் மணம் கமழ்ந்தது. இன்னும் அந்தக் குதூகல ஞாபகமா? அவள் பதில் ஏதும் சொல்லவில்லை.

குழந்தைகள் தூங்கிவிட்டார்கள். அவள் உடையை மாற்றிக் கொண்டு வேலையை முடிக்க நேரம் ஆகிவிட்டது. ஏதோ ஒரு மனச் சோர்வில் கை தயங்கித் தயங்கி வேலை செய்ய மறுத்தது. அவள் வந்தபோது அறை விளக்கு அணைந்திருந்தது. நிலவின் மௌன

வெளிச்சம் தரையில் சிந்திய பாலைப் போல் கட்டிலில் படர்ந்து நின்றது.

அவள் சிறிது நேரம் எதை எதையோ நினைத்துக் கொண்டு படுத்திருந்தாள். விரலை அசைக்கக்கூட மனமில்லை.

"என்ன கோபம் மேம் சாப்? ஏன் 'மூட்' சரியாக இல்லை ?" அவன் கைகள் அவளைச் செல்லமாகத் தேடி எடுத்து அணைத்தன. அவன் தோள் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மினாள் ஜயந்தி.

"எதற்கு? என்ன ஆயிற்று ஜயந்தி?"

அவன் குரல் கலங்கிற்று.

"எல்லாம்தான்.... வரவர உங்களுக்கு என்னைப் பிடிப்பதே இல்லை..... நான் உங்களோடு இருக்கும்போதுகூட உங்களுக்கு என்னை அலட்சியம் செய்யத்தான் தோன்றுகிறது."

"எப்படிக் கண்டுபிடித்தாயாம்?"

"பின்னே என்ன? உங்களைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்..... உங்கள் கண் பார்வை தேட, சிறிது அழகாக ஒரு பெண் வந்தால் போதும்..... உங்கள் கவனம் விலக அப்படி ஒரு நிழல் பட்டால் போதும்.... ப்ஸ... எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா? என் உரிமையை எல்லாம் விட்டுக் கொடுத்து விட்டதைப் போல்.... கேட்கிறேன். உங்களுக்கு ஏன் இந்தப் பலவீனம்?"

"பலவீனமா?" என்று அவன் குரல் திடுக்கிட்டு இழுத்தது.

"விளையாட்டாக நான் ஏதோ பழகுகிறேன் ஜயந்தி! அதை நீ 'ஸீரியஸா'க எடுத்துக் கொள்வாய் என்று நினைக்கவே யில்லை. நீ என்னைப் புரிந்து கொண்டவள் என்று ஒரு தைரியம் அவ்வளவுதான்.... ஹும்....ஒன்று சொல்லட்டுமா ?"

"சொல்லுங்கள் —"


"பலவீனம் உனக்குத்தான் ஜயந்தி !"

"எனக்கா ? ஏன்?" என்று திகைத்தாள் ஜயந்தி. குரலில் அலுப்புத் தட்ட, ஒரு சிறு அழுகை நடுங்க, "இதெல்லாம் என்ன சாக்குப் போக்கு?" என்று கேட்டாள்.

"ஆமாம். பலவீனம் உனக்குத்தான், ஜயந்தி! உன்னிடமே உனக்கு நம்பிக்கை இல்லை. பார்வை இருக்கட்டும். மனத்தில் எவ்வளவு தூரம் நீ உன்னை உரிமைப்படுத்திக் கொண்டிருக்கிறாய் என்று உனக்கே தன்னம்பிக்கை இல்லை. என் அன்பை வென்று வசப்படுத்திக் கொண்டுவிட்டோம் என்ற தைரியமும் இல்லை. இன்று வரையில் இதற்கு நீ உன் அழகையும் கவர்ச்சியையும் நாடியது இல்லையே ? இப்போது மட்டும் ஏன் இந்தப் பலவீனம்? சொல்லு ஜயந்தி!"

ஜயந்தி திகைத்துப் போனாள். கண்கள் அவன் முகத்தைத் தேடி அலைந்தன. அந்த மெல்லொளியிலும் அவனிடம் கள்ளமில்லாத சிரிப்பு தெரிந்தது. அவனிடம் ஒரு பலவீனம் இருப்பதாக அல்லவா எண்ணிக் கொண்டிருந்தாள்? இப்போது பலவீனம் யாரிடம் ? உண்மையில் பலமும் உரமும் தேவைப்படுவது அவள் நெஞ்சுக்குத்தானே ?

"என்ன கப்சிப்? கதை அவ்வளவுதானா?" அவளை இழுத்துக் கொண்டான் சங்கர்..... இருளில் அவன் மார்பின் மேல் இரு இதழ்கள் உதிர்ந்தன.



மைவிழி மகளிர்

காசியாத்திரையா? சுற்றுலாவா?

சீதா

"சாரு! சமீபத்தில் சென்னைக்கு 'காமெக்ஸ் ஸிக்ஸ்' வந்திருந்தது. பார்த்தாயோ?'' என்றாள்.

''அதென்னடீ! இங்கிலீஷ் சினிமாவா?'' என்று கேட்டாள், அத்தை அன்னபூர்ணம்மாள்.

''காமன்வெல்த் நாட்டு மாணவ மாணவிகளின் யாத்திரை ஸ்பெஷல் பஸ்!'' என்று கருக்கமாகச் சாரு விளக்கினாள்.

அத்தைக்குத் தலை சுற்றியது. ''யாத்திரைன்னு — மாணவ மாணவிகள் காசிக்குப் போறாளா, ராமேசுவரத்துக்குப் போறாளோ!'' என்று கேட்டாள்.

''ஆமாம், ஜானும் ஜில்லும் காசி யாத்திரைக்குப் போறா!... யாத்திரைன்னு இங்கே எக்ஸ்கர்ஷன்னு அர்த்தம்; இந்தக் காலத்துத் தமிழிலே சொல்லறதானா சுற்றுலா. கனடா, இங்கிலாந்து முதலிய காமன்வெல்த் நாடுகளிலிருந்து மாணவர்கள் மாணவிகள் சில பெரியவர்கள் — இப்படியாகச் சுமார் இருநூறு பேர் வந்திருந்தா — மூணு பஸ்லே!'' என்றாள் சாரு!

''கனடா, இங்கிலாந்திலிருந்து மாணவ மாணவிகள் பஸ்களில் புறப்பட்டு ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், பாகிஸ்தான் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு நம்ம நாட்டுக்கு வந்திருந்தார்கள்!'' என்றாள் ஹேமா!

''இங்கேயே தங்கிவிடவில்லை. நம்மை நாட்டையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் தங்கள் சொந்த நாடுகளுக்குப் பஸ்ஸிலேயே திரும்பிப் போனார்கள்'' என்றாள் சாரு.

''அவர்களில் லீனு என்று ஒரு பெண் வந்திருந்தாளே, அவள் எவ்வளவு பதவிசா அழகாக இருந்தாள்!'' என்றாள் ஹேமா.

''அவர்களை நீங்க எங்கே பார்த்தீர்கள்?'' என்று கேட்டாள் அகிலாண்டம்மாள்.

''அவர்கள்தான் சென்னைக்கே வந்திருந்தார்களே!''

''அவர்களை நம்ம நாட்டைப் பற்றி உங்கள் அனுபவம் என்ன? என்று கேட்டாள் சாரு. அதற்கு அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் தெரியுமா?

''அவர்களுக்கு நம்ம மக்களை ரொம்பப் பிடிச்சிருக்காம். ஆனால் தீபாவளி கொண்டாட்டம் என்று சொல்லி எங்கள்





பஸ்கள் மீது கற்களை விட்டெறிந்து எங்கள் பஸ்களின் கண்ணாடிகளை உடைத்ததைத் தான் எங்களால் அவ்வளவாக ரஸிக்க முடியவில்லை!'' என்றான்.

இப்படி ஹேமா சொன்னதும், ''என்ன இருந்தாலும் நம்ம நாட்டிலே வரவரக் காலித்தனம், கலாட்டா அதிகமாகிக் கொண்டுதான் வருகிறது !'' என்றாள் அகிலாண்டம்மாள்.

'' ஆனாலும் அந்தப் பெண் எவ்வளவு நாசூக்காக 'ரஸிக்க முடியவில்லை' என்று சொல்லியிருக்கிறாள். இதுதான் பல தேச மக்களைப் பார்ப்பதாலும் பழகுவதாலும் ஏற்படுகிற பண்பாடு !'' என்றார் சங்கரய்யர்.

''அது மட்டுமில்லை, அப்பா! அவர்கள் யார் வீட்டுக்கு வந்தாலும் அந்த வீட்டு மனுஷ்யாளோடு ஒன்றிவிடுவதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கும் அப்பா!'' என்றாள்.

''யார் வீட்டுக்காகிலும் விருந்தாளிகளாகப் போனால் அந்த வீட்டில் புஸ்தகம் கோணல் மாணலாக இறைஞ்சு கிடந்தால், 'உங்களுக்கு ஆட்சேபணையில்லை என்றால் நாங்கள் இந்தப் புஸ்தகங்களை அடுக்கி வைக்கிறோமே!' என்று சொல்லிவிட்டு, மடமடவென்று தூசியைத் தட்டிவிட்டு அடுக்கி வைப்பார்கள். தோட்டத்துக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டுமென்றால் அவர்கள் சகஜமாகச் செய்வார்கள்....'' என்றாள் ஹேமா.

''அவர்களுக்கு வேலையில் உயர்வு தாழ்வு இடையாது!'' என்றார் சங்கரய்யர்.

''சென்னையிலே மட்டும் சுமார் ஐந்நூறு வெளிநாட்டு மாணவ மாணவிகள் இருக்கிறார்கள், அப்பா!'' என்றாள் ஹேமா.

''அவர்களுக்கு ஒரு பெரும் குறை என்ன தெரியுமா, மாமா !''

''என்ன ?'' என்றாள் அத்தை.

''நம்ம பண்டிகைகள் விசேஷங்கள் கல்யாணங்கள் இவைகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று ஆசை. நம்ம மக்கள் யாரும் கூப்பிடுவதில்லை என்று ரொம்பக் குறைப்படுகிறார்கள்!'' என்றாள் ஹேமா.

''சென்னைக்கு வந்திருந்த காமெக்ஸ் விக்ஸைச் சேர்ந்தவர்களுக்கு நுங்கம்பாக்கத்தில் ஒரு தமிழ் நாட்டுக் கல்யாண வைபவம் பார்க்கும் வாய்ப்பும் கல்யாணச் சாப்பாடு சாப்பிடும் வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுத்தார், ஒரு பிரமுகர்'' என்றான் சாரு.

'' நாம் ரொம்ப நாட்களாக வெள்ளைக்காரர்களிடம் அடிமையாக வாழ்ந்துவிட்டதால், இப்பொழுதுகூட வெள்ளைக்காரர்களைக் கண்டால் மனம் விட்டுப் பழக முடிவதில்லை'' என்றார் சங்கரய்யர்.

''நம்ம ஆசார அனுஷ்டானங்கள் வேறு குறுக்கே வந்து தொல்லைப்படுத்துகின்றன'' என்றாள் ஹேமா.

''அந்த ஆசாரங்கள்தாம் இத்தனை நாட்களும் நம் இந்து மதத்தைக் காத்து வந்துள்ளன. எந்த விஷயத்திலும் நல்லதும் உண்டு, தீயதும் உண்டு '' என்று வேதாந்தம் பேசினாள் அன்னபூர்ணம்மாள்.

இந்தச் சமயத்தில் அகிலாண்டம்மாள் எல்லாருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

''நாம் பல விஷயங்களுக்கு வெளிநாட்டு உதவியை எதிர்பார்க்கிறோம். ஆனால் தேநீர் விஷயத்தில் ரொம்ப தாராளம். ஆஸ்திரேலியாவில் நதிகள் உடைப்பெடுத்து வெள்ளக் காடாகி மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். இந்திய அரசாங்கம் அவர்களுக்குத் தேயிலைப் பொட்டலங்கள் உதவியிருக்கிறது!''

'' நம் நாட்டிலும் அடிக்கடி ஆறுகளில் வெள்ளம் பெருகி உடைப்பெடுத்து மக்கள் அவதிக்கு உள்ளாவது சர்வ சகஜம். அதனால் தான் ஆஸ்திரேலிய மக்களின் கஷ்டத்தை உணர்ந்து உதவியிருக்கிறது!'' என்றான் சாரு!

''ஒரு தரம் ஒரு கஷ்டத்தை அனுபவித்தவர்களுக்குத்தான் அந்தக் கஷ்டத்தின் கொடுமை தெரியும். மனம் தானாக இளகுகிறது !'' என்றாள் அன்னபூர்ணம்மாள்.

'' கஷ்டம் ஒருபுறம் இருக்கட்டும். காப்பியை ஒரு நாளைக்கு இரண்டு தடவை, மூன்று தடவைக்கு மேல் சாப்பிடப் பிடிப்பதில்லை. ஆனால் தேநீர் அப்படியில்லை. எத்தனை தடவை சாப்பிட்டாலும் அலுப்பதில்லை '' என்றான் சாரு.

'' வடநாட்டிலே எல்லாரும் தேநீர்தான் சாப்பிடுகிறார்கள். அதுவும் ஒரு நாளைக்கு எட்டு கப் பத்து கப் தேநீர் சாப்பிடுகிறார்கள்!'' என்றாள் ஹேமா.

ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆதீன ஆலயத் திருப்பணி



சென்னை வேலப்பஞ்சாவடி அருகிலுள்ள பெருமாளகரம் கிராமத்தில் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக எட்டி மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேவி கருமாரி அம்பாளின் வாக்குப்படி சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் ஆலயம், மண்டபம், ராஜ கோபுரம் முதலியவை கட்ட ஏற்பாடாகியிருக்கிறது.

பக்தர்கள் யாவரும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து ஸ்ரீ தேவி கருமாரி அம்மனின் அருளுக்குப் பாத்திரராகும்படி கேட்டுக் கொள்கிறோம். பணம் அனுப்ப வேண்டிய முகவரி: 'செயலாளர், ஆதீன கருமாரி அம்மன் ஆலயம், பெருமாளகரம்' நூம்பல் அஞ்சல், சென்னை-600077.



Links the several worlds of women

Every fortnight, Femina reaches out to over two million readers across Asia. It brings to them a discerning, balanced and urbane interpretation of the Indian woman today—and through her, of the country she has helped to change.

Policy-maker, home-keeper or ego-preserver, the Indian woman is, like her counterparts in Asia, destroying old myths and carefully defined roles. She is emerging as the force that motivates much of the change in the sub-continent.

Femina records her life, her changing values, her experiences…every fortnight in colour and black and white.



femina

A FORTNIGHTLY FOR EVERY WOMAN

.A TIMES OF INDIA PUBLICATION

பழைமையான கார்கள் பசுமையான நினைவுகள்!

சென்னையில் பழங் கார்களுக்கான போட்டிப் பந்தயம் சாந்தோம் கடற்கரையிலிருந்து காங்கிரஸ் மைதானம் வரை ஏப்ரல் 28ம் தேதி நடைபெற்றது. இந்தச் சமயத்தில் பிரசித்தி பெற்ற சில பழங் கார்களைப் பற்றிய ருசிகரமான துணுக்குகளைப் பார்க்கலாம்!


☐ கார்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஏழு வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள். பென்ஸ் தம் அறையில் அமர்ந்து அன்றையக் கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். ஜெர்மன் சர்க்கார் உள்நாட்டு மந்திரியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்தில் பொதுப் பாதைகளில் மோட்டார் வண்டிகள் அநுசரிக்க வேண்டிய விதிமுறைகளைக் கூறியிருந்தனர். ஹைவே பாதையில் மோட்டார் கார்கள் மணிக்கு 7.5 மைல்களுக்கு மேல் செல்லக் கூடாது ! நகரங்களின் திருப்பங்களிலும், வளைவுகளிலும் கார்கள் 3.25 மைல் வேகத்திலேயே செல்ல வேண்டும் ! வழியில் மோட்டார் கார்கள் வண்டிகளையோ மிருகங்களையோ சந்திக்க நேர்ந்தால் வேகத்தைக் குறைத்துவிட வேண்டும் !

பென்ஸ் இந்த வேகக் கட்டுப்பாட்டை எதிர்த்து உள்நாட்டு மந்திரிக்குக் காரசாரமான கடிதம் எழுதினார் !

☐ மொராக்கோ சுல்தானே முதன் முதலில் ராஜ வம்சத்தினர் கார் வாங்கிப் பயன்படுத்திய பெருமையைப் பெறுகிறார்! அவர் வாங்கிய காரின் வேகம் மணிக்கு 11 மைல் !

☐ முதல் ரோல்ஸ்ராய்ஸ் காரை இன்றைக்கு அறுபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கிய பிரமுகர் மிகப் பெரும் பணக்காரரான பாரிஸ் ஈ. சிங்கர்! சிங்கர் தையல் மிஷினைத் தோற்றுவித்துப் பெரும் பணம் ஈட்டியவர்!

☐ லெனின் இரண்டு ரோல்ஸ்ராய்ஸ் கார்களைப் பயன்படுத்தி யிருக்கிறார். கிரெம்ளினை



பரிசு பெற்ற கார்

அவை அலங்கரித்திருக்கின்றன. இவை இரண்டும் இப்போது லெனின் சென்ட்ரல் மியூசியத்தில் உள்ளன. கார்ப் பிரயாணத்தில் லெனினுக்கு ரொம்ப ஆசை. கார் டிரைவரே அவருக்குப் பாதுகாப்பாளராகவும் விளங்கி யிருக்கிறார்.


☐ இந்திய மகாராஜா ஒருவருக்கு பிரிட்டனில் ஒரு மாளிகை இருந்தது! ஒரு நாள் லண்டனிலிருந்து மகாராஜா 1938ம் வருஷத்திய பென்ட்லி காரில் தம் இல்லத்தை நோக்கி விரைந்தார். அவரது காரை இரு இளம் மாணவிகள் தங்கள் மோட்டார் சைக்கிளில் முந்தி விட்டார்கள்! இதைக் கண்டு ரோஷமடைந்த மகாராஜா ஆக்ஸிலேட்டரை அழுத்தி அவ்விரு இளைஞர்களின் மோட்டார் சைக்கிளை முந்த முயன்றார்! இளம் மாணவிகள் விடுவார்களா? இந்திய மகாராஜாவின் முயற்சி பலனளிக்கவில்லை. ராஜாவோடு பயணம் செய்து கொண்டிருந்த அவரது பிரதம மந்திரி இந்தப் 'போட்டி'யை ராஜதந்திர முறையில் சமாளிக்க முற்பட்டார்.

''எதற்காக இப்படி அசுர வேகத்தைக் கையாள்கிறீர்கள்? அவர்கள் பொடியர்கள் தானே! அவர்களோடு போட்டியிடுவதில் என்ன பலன்?''

இந்திய ராஜா வேகத்தை மட்டுப்படுத்தினார். தம் மாளிகையை அடைந்த பிறகு அந்தக் காரைப் புறக்கணித்து விட்டார். அதன் பிறகு அந்தக் காரை அவர் சீண்டவேயில்லை.

பதினெட்டு ரோல்ஸ்ராய்ஸ் கார்களும், இதர வகையில் நூற்றைம்பது கார்களும் வாங்கி ஓட்டிய கார்ப் பிரியர் இந்த மகாராஜா. ஆயினும் ஒரு சிறு தோல்வியை அவரால் பொறுக்க முடியவில்லை!

☐ இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அமெரிக்காவில் மிஸ்ஸௌரியிலுள்ள 'பல்டன்' நகருக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனுடன்








நட்சத்திரக் காருக்குப் பரிசு!

☐ பழைய கார்களுக்கான பவனி பத்தொன்பது கார்களுடன் தொடங்கியது. ஒரே ஒரு கார் மட்டும் டயர் கோளாறினால் பின்தங்கி விட்டது! முதல் பரிசு பெற்ற கார் 1913ம் ஆண்டில் தயாரான பியட் கார்! இந்தக் கார் நட்சத்திரக் கார்! சென்னையிலிருந்து ஹாலிவுட்டுக்குப் போய் ''சிட்டி சிட்டி பாங் பாங்!'' என்ற குழந்தைகளுக்கான படத்தில் நடித்திருக்கிறது. இந்தப் பழைமையான காரின் உரிமையாளர் திரு எம். ஏ. சிதம்பரம். அறுபத்தியொரு வருஷங்களானாலும் 'ரிடையர்' ஆகாத இந்த நட்சத்திரக் கார் வந்திருந்த கார்ப் பிரியர்களின் கண்களைக் கவர்ந்தது. இந்தப் பழங் கார் பவனியில் ஸ்ரீமதி உஷா என்ற பெண்மணியும் கலந்து கொண்டார். ஆஸ்டின், பியூக், ரோல்ஸ்ராய்ஸ், செவர்லே, ஸ்டுடிபேக்கர், மெர்ஸிடஸ்பென்ஸ், போர்டு, பியட் ஆகியவற்றின் பழங் கார்கள் பவனியில் சிலர் விநோதமான உடைகளையும் அணிந்து ஓட்டியது மக்களைப் பரவசப் படுத்தியது! ☐





பிரயாணம் செய்தார். இந்த நகரில்தான் சர்ச்சில் 'இரும்புத் திரை' வார்த்தையை முதன் முதலில் உருவாக்கிப் பயன்படுத்தினார்.


ஜனாதிபதி ட்ருமனும் சர்ச்சிலும் 'ஸ்போர்டு லிங்கன்' காரில் பிரயாணம் செய்தனர். இந்தக் காருக்கு 'ஸன்ஷைன்' ஸ்பெஷல் என்ற விசேஷப் பெயரும் உண்டு. ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்காக இந்தக் கார் தயாரிக்கப்பட்டுப் பதினொரு வருஷங்கள் உபயோகத்தில் இருந்தது. இந்தப் பதினொரு வருஷங்களில் இந்தக் கார் 5[illegible],000 மைல்கள் சுற்றி இருந்தது. இந்தக் கார் ஜனாதிபதியை முன்னிட்டு அவர் விஜயம் செய்த உலகின் பல நாடுகளுக்கும் போய் வந்தது. வேறு எந்தக் காரையும்விட இந்த லிங்கன் கார் அதிகமான உலகப் பிரமுகர்களை ஏற்றிச் சென்று புகழ் பெற்றுள்ளது. 1950ம் வருஷம் லிங்கன் கார் ஓய்வு பெற்றது. 'வருஷங்கள் பல கடந்து விட்டன' என்ற ஒரே காரணத்துக்காக ரிடையர் ஆக்கப்பட்டதே ஒழிய ஒரு கோளாறும் இல்லை.

ஆதாரம்: "Motoring and the Mighty" book

தகவல்: குண்டுமணி









ஸ்ரீ H. S. மணி (உதவி கமர்சியல் மானேஜர் இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர்போர்ட், சென்னை) அவர்கள் மூத்த சகோதரரும் ஓய்வுபெற்ற சென்ட்ரல் எக்ஸைஸ் டிப்டி சூபரின்டென்டும், தற்சமயம் சென்னை சுதர்ஸன் டிரேடிங் கம்பெனியில் ஒர்க்ஸ் சூபரின்டென்டு மான **ஸ்ரீ H. மகாதேவ அய்யர்** அவர்களுக்கு சஷ்டி அப்த பூர்த்தி விழா சமீபத்தில் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவுக்கு உறவினர்களும் நண்பர்களும், நகரப் பிரமுகர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.



■ கிராமத்தில் ஒரு குழந்தையை டாக்டர் பரிசோதித்துப் பார்க்கிறார்.

ஆயுள் இன்ஷியூரன்ஸ்போல் நமது மக்களுக்கு ஆரோக்கிய இன்ஷியூரன்ஸ் தேவை என்ற நோக்கில் தொடங்கப்பட்டது சென்னை அடையாற்றில் உள்ள வாலண்டரி ஹெல்த் சர்வீஸஸ். 'வி. எச். எஸ்.' என அழைக்கப்படும் இந்த ஆரோக்கிய இன்ஷியூரன்ஸ் ஸ்தாபனம் ஒரு தனி மனிதனை அடிப்படையாகக் கொண்டு இயங்காமல் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது விசேஷம். நோய்ச் சிகிச்சையைக் காட்டிலும் நோய்த் தடுப்புக்கு முக்கியத்வம் அளிப்பது அதனினும் சிறப்பு.

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றிப் பெயரும் புகழும் பெற்ற வைத்தியர்கள் பலர் இலவசமாகவே இங்கு தொண்டாற்றுகிறார்கள். சில டாக்டர்கள் மோட்டார் போக்குவரத்துக்கு வேண்டிய தொகை மட்டும் பெற்றுக்கொண்டு சேவை புரிகிறார்கள். இப்படித் தன்னலமற்ற வைத்தியப் பணி நடைபெறும் இந்த ஆஸ்பத்திரியில் சென்ற பத்தாண்டுகளில் பல வைத்தியப் பிரிவுகளும் ஏற்பட்டு விட்டன. டாக்டர் வி. எஸ். சுப்பிரமணியம் மேற்பார்வையில் காது, மூக்கு, தொண்டை பிரிவு இயங்கி வருகிறது. கண் வைத்தியத்தில் அதுவும் கண்ணுக்குள் இருக்கும் திரை சம்பந்தப்பட்ட சிகிச்சையில் விசேஷப் பயிற்சியும் புகழும் பெற்றுள்ள டாக்டர் பத்ரிநாத்தின் தலைமையில் கண் வைத்தியத்துக்கான பிரிவு இரண்டரை லட்ச ரூபாய் செலவில் உருவாகி வருகிறது.

பட்டணத்து வைத்தியர் பட்டிக்காட்டுக்குப் போகிறார்!

மூத்திர கோசம் பழுதடைந்தால், செயற்கை மூத்திர கோசத்தின் உதவியுடன் வைத்தியம் செய்யும் வசதியும் இங்கு உண்டு.

மாதம் ஐந்நூறு ரூபாய்க்குள் வருமான முள்ளவர்கள் மாதம் இரண்டரை ரூபாய் செலுத்தி அங்கத்தினரானால், அவர் குடும்பம் முழுதுக்கும் பல வைத்திய வசதிகள் பெறலாம்.

அங்கத்தினர்களாக இல்லாதவர்களும் இங்கு சிகிச்சை பெறலாம். ஆனால் அவர்கள் வருவாய்க்கும், சிகிச்சையின் தன்மைக்கும் ஏற்பக் கட்டணம் வசூலிப்பார்கள்.

வி. எச். எஸ். ஆஸ்பத்திரியில் மற்றொரு முக்கியமான பணியும் செய்து வருகிறார்கள். ''மருத்துவ டெக்னாலஜி காலேஜ்'' ஒன்று நடத்தி வருகிறார்கள். விஞ்ஞானத் துறையில் பி. எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு மருத்துவ ரசாயனப் பரிசோதனை சாலையில் பயிற்சி, சத்துணவுப் பயிற்சி, ஆஸ்பத்திரி நிர்வாகத் துறையில் பயிற்சி இவற்றை அளித்து அதற்கும் டிப்ளோமா வழங்குகிறார்கள்.

இப்பொழுது புதியதோர் அரும் பணியும் மேற்கொண்டுள்ளது வி. எச். எஸ். பதினாயிரம் பேர் ஜனத்தொகை கொண்ட ஒரு கிராமத்துக்கு ஒரு சிறு சுகாதார விடுதி வீதம் ஏற்பாடு செய்வது என்ற அடிப்படையில் முதலில் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள பரங்கிமலைப் பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். சுமார் பதினாறு மருத்துவ விடுதிகள் உள்ளன. அவ்விடுதிகளில் வி. எச். எஸ்.ஸில் மேற்குறிப்பிட்ட டிப்ளமோ பட்டம் பெற்றவர்கள் இருப்பார்கள். இவர்கள் கிராமங்களில் வீடுதோறும் சென்று விவரங்களைச் சேகரித்து வைப்பார்கள். வாரம் ஒரு முறை பட்டணத்திலிருந்து வரும் வைத்தியருக்கு இவ்விவரங்கள் உதவியாக இருக்கின்றன. அவற்றின் உதவியுடன் நோயாளியைப் பரிசோதித்து வைத்தியம் செய்கிறார். நோயாளிக்கு ஆஸ்பத்திரி சிகிச்சை தேவைப்பட்டால் ஆஸ்பத்திரிக்குச் சிபாரிசு செய்கிறார். கிராமத்தில் ஒரு குடும்பத்தில் குழந்தை பிறந்தால் அக் குழந்தைக்கு இரண்டாவது மாதம் தொடங்கி அளிக்க வேண்டிய அம்மைத் தடுப்பு ஊசி, ஆண்டிஜன்

■ ஆரோக்கியம் வளர்க்கும் ஊழியர் ஒரு குடும்பத்துக்குத் தேவையான மாத்திரைகளை வீட்டுக்குச் சென்று தருகிறார்.



ஊசி, இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து இவற்றை மேலே குறிப்பிட்ட பயிற்சி பெற்றவர்களே அளித்து விடுகிறார்கள். அதற்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு பெரிய பஞ்சாயத்து நகரிலிருக்கும் அரசாங்க டாக்டர், அந்தச் சிறு சுகாதார விடுதியில் பணியாற்றும் ஊழியர்களின் உதவி கொண்டு சுமார் பதினேழு கிராமங்களில் உள்ள மக்களின் சுகாதாரத்தைப் பேண முடிகிறது. டாக்டர்கள் கிராமங்களில் போய்ப் பணியாற்றுவதில்லை என்ற அபக்யாதி இதன் மூலம் நீங்குகிறது.

இதற்குக் கிராம மக்கள் தங்கள் வருவாயில் அரை சதவிகிதம் வழங்கி அங்கத்தினர்களாகச் சேர வேண்டும்.

'குடும்பத்தில் யாருக்கும் ஒரு நோயும் வராதபோதும் சுகாதார விடுதிக்குச் சந்தா செலுத்துவது நல்லது. அது ஆரோக்கிய இன்ஷியூரன்ஸ் என்று மக்கள் உணர வேண்டும்' என்கிறார் டாக்டர் சஞ்சீவி.

வி. எச். எஸ். ஸின் அரிய பணியை உணர்ந்து, அடையாறு ஆஸ்பத்திரியைப் போல் பவானியில் ஒரு கேந்திர ஆஸ்பத்திரி நிறுவவும், விக்கிரவாண்டியில் நிறுவவும், தஞ்சாவூரில் நிறுவவும் முறையே திரு பொள்ளாச்சி என். மகாலிங்கம் அவர்களும், திரு ஏ. எல். ஏ. அண்ணாமலை செட்டியார் அவர்களும், திரு கே. திருவேங்கட முதலியார் அவர்களும் முன்வந்திருக்கிறார்கள்

மக்களே கிராமப்புறங்களில் ஆஸ்பத்திரி நிறுவ முன்வந்தார்களானால், மத்திய அரசும் மாநில அரசும் மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை ஏற்றுக் கொள்ளும்.

எனவே ஈகை உள்ளம் படைத்த தனி நபர்களின் உதவி கொண்டு இந்தக் கிராமப் புறச் சுகாதாரத் திட்டத்தை மும்முரமாக அமல்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். கிராம மக்களுக்கு வைத்திய உதவி நல்க இதைவிட நல்ல திட்டம் இருக்க முடியாது.

—எஸ். வி. எஸ்.



மன்சலீ

எடுப்பான தொடக்கம்!

'மணமகன் தேவை' விளம்பரத்துக்கு வந்த சில கடிதங்களைக் கதாநாயகிக்கும் படித்துக் காட்டும் இடத்தில் அவள் தோழியாக வரும் நாஜிமா திரையுலக நடிக - நடிகையர் சிலரை நினைவுபடுத்துகிறாற் போல் படித்துக் கரகோஷம் பெற்று விடுகிறார். அநாயாசமான நடிப்பு!

பலன், படம் பல குறைகளையும் மறைத்துக்கொண்டு களை கட்டி விடுகிறது.

லீனா (லீனா சந்தாவர்கர்) ஒரு பணக்காரப் பெண். படத்தின் தலைப்புக்கு நியாயம் வழங்க மனம் போன போக்கில் நடந்து கொள்கிறவள். தன் இஷ்டத்துக்குத் திருமணத்தை ஒத்திப் போட்டு வருகிறாள். அவள் சித்தப்பாவுக்கோ அவள் திருமணத்தை விரைவில் முடித்து விட வேண்டும் என்ற ஆர்வம்.

அவர் ஆர்வம் காட்டி என்ன பயன்? திரைப் படம் முடியும்பொழுதுதானே திருமணமும் முடிகிறது!

அவள் திருமணம் செய்துகொண்டால்தான், அவளுக்குச் சொத்தைத் தர முடியும் என்கிறார். அதற்காக அவள் ஓர் இளைஞனைப் பிடிக்கிறாள். தன் கைக்குச் சொத்து வரும் வரை வாடகைக் கணவனாக நடிக்க வேண்டும் என்கிறாள். அப்படி வந்தவன் அவளைப் பல சிக்கல்களில் மாட்டி வைத்து அவள் கழுத்தில் முடி போட்ட பின்னரே விடுகிறான்.

சுருக்கமாகக் கதை இவ்வளவுதான். திரைக் கதையை வளர்க்கவென்று படிந்துவிட்ட சில கோட்பாடுகள் பலமாக உதவுகின்றன. பார்த்துப் பார்த்துப் பழகிவிட்ட காட்சிகள்!

லீனா சந்தாவர்கரின் நடிப்பு மனத்துக்கு நிறைவு தருகிறது. சஞ்ஜீவ் குமார் பல இடங்களில் ஷம்மி கபூரை நகல் செய்கிறார். 'நக்கல்' செய்கிறார் என்றால் நடிப்புச் சிறப்பு என்று கொள்ளலாம். ஆனால் இவர் 'நகல்' தான் செய்கிறார். இசையும், பாடலும், கிருஷ்ண சந்தரின் வசனமும் ஓரளவு கை கொடுத்து உதவுகின்றன. எடுப்பான தொடக்கம், படுப்பான முடிவு.

- அக்ஷயம்


கோடையில்
உலாவுங்கள்
குளுமையான பாதங்களுடன்
கோடையில் சுகமாக உலா
வுங்கள். வெப்பத்தை
விரட்டுங்கள்.
(பாதங்களை அல்ல!)
—பலவகையிலும்
மேன்மையான பாட்டா
ஸாண்டல்களும் சப்பல்
களும் உங்களுக்கு
சேவை செய்யக்
காத்திருக்கின்றன.
Bata
Bata
Bata
Bata
அளவுகள் 9-1, 2-5
வுகள் 2-7
புகள் 5-10
அஞ்சன்
அளவுகள் 5-10


மில்லர் விளக்குக்கு

ஒருமுறை பணம் செலவழித்தால் போதும்

மில்லர் சைக்கிள் டைனமோ விளக்கு ஆயுட்கால முதலீடு. எனவே கவலையில்லை, செலவும் இல்லை.


ஏனெனில், திருடமுடியாத அமைப்பு கொண்ட மில்லர், 25-மீட்டர் நீளமுள்ள பிரகாசமான ஒளிக் கற்றையை வீசி பாதுகாப்பு அளிக்கிறது. அதற்கு எண்ணெயோ, பாட்டரியோ தேவையில்லை. பராமரிப்பதும் எளிது. துடைத்தால் போதும். எனவே, அது செலவு குறைவானது.

பாதுகாப்பானதும், செலவு குறைவானதுமான மில்லர் கண்ணைக் கவரும் வண்ண விளக்கும் கூட. பளபளப்பான குரோம், மெரூன், நீலம் ஆகிய வண்ணக் கலவை கொண்டது அது. 18 மாத உத்தரவாதத்துடன் கிடைக்கிறது.



டி ஐ மில்லர் லிமிடெட்

மில்லர்
எந்த சைக்கிளுக்கும்
எழில்
சேர்க்கிறது.



அழகு மிகுந்த ஆடல்

பரதக் கலை மிக வேகமாக வளர்ந்து வரும் இக்காலத்திலும் சில நிகழ்ச்சிகள் மட்டுமே நீண்ட காலத்துக்குப் பசுமையாக நிலைத்து நிற்கின்றன. இதற்கு ஒரு முக்கிய காரணம் இக்கலையை இளம் வயதில் பயிலும் சிறுமிகள், அரங்கேற்றம் ஆனதும் தங்களுடைய பள்ளிப் படிப்புப் போலவே பரதக் கலைப் பயிற்சியும் முடிந்து விட்டதெனக் கருதி இதைச் சிறுகச் சிறுகக் கைவிடுவதும், போதிய சிரத்தை காட்டாததும் ஆகும். வாழ்க்கையில் நுழைந்த பின்னரும் பிரயாசையுடன் பயின்ற கலைச் செல்வத்தைத் தொடர்ந்து போஷிக்கவும் எல்லோராலும் முடிவதில்லை. மிகச் சிலரே, இக் கலையில் அவர்களுக்குள்ள விசேஷ ஆர்வத்தாலும் உயர்ந்த ரசனை உணர்ச்சியினாலும் பலரும் பாராட்டத்தக்க அளவுக்குப் பிரகாசிக்கின்றனர். இத்தகைய சிறுபான்மை நடனமணிகளின் கோஷ்டியில் குமாரி எஸ். கனகா ஒருவர் என்பது அவர் அண்மையில் சென்னை வித்வத் சபை மேடையில் நிகழ்த்திய நடன நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

சிறு வயதில் வழுவூர் திரு ராமையா பிள்ளையிடம் பரதம் பயின்று 1960ம் ஆண்டில் அரங்கம் ஏறியதும் தமது அபிலாஷை பூர்த்தியடைந்து விட்டதாகக் குமாரி கனகா கருதவில்லை. சுவாமிமலை ராஜரத்தினத்திடம் குரு பரம்பரைத் தொடர்பு அற்றுப் போகாமல், இக்கலையை விசேஷ ஆர்வத்துடன் இன்றுவரையில் பயின்று வருகிறார். அப்யாச முதிர்ச்சியினால் அவருடைய கலையும் நன்றாக மெருகு ஏறியுள்ளது. சென்ற பதினைந்து ஆண்டுகளில் பல நகரங்களில் பல மேடைகளில் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தி, அந்தந்த நகரப் பெரு மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார் குமாரி கனகா.

தமிழ்நாட்டின் கலாசாரத் தூதுவராக இரு முறை குமாரி கனகாவை வட மாநிலங்களுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது. மாநிலங்களுக்கிடையே கலாசாரக் கோஷ்டியினரை அனுப்பிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் குமாரி கனகா, மத்திய பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், ஜம்மு, காஷ்மீர் முதலிய மாநிலங்களில் பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவை தவிர, பாதுகாப்பு இலாகாவின் அழைப்புப் பெற்று மேற்கு ராணுவப் பகுதிகளுக்கும் சென்று, போர் வீரர்களுக்காகச் சில நடன நிகழ்ச்சிகளையும் குமாரி கனகா நிகழ்த்தியிருக்கிறார்.

உஜ்ஜயினியில் நடைபெறும் காளிதாஸ மகோத்சவத்தில் மாளவிகாக்னிமித்ரம் நடன நாடகத்தைத் தயாரித்து, தானே மாளவிகா பாகத்தை ஏற்று ஆடி அபிநயித்து, அதற்காக 1970ம் ஆண்டில் பொற்கலசப் பரிசையும் இவர் பெற்றிருக்கிறார். 1972ம் ஆண்டிலும் இதே விழாவில் காளிதாசனின் குமார சம்பவ நாட்டியநாடகத்துக்காக இரண்டாவது முறையாகப் பொற்கலச விருதையும் பெற்றுள்ளார்.

பலப் பல அரங்கங்களிலும் பலதரப்பட்ட ரசிகர்களிடையேயும் பல்லாண்டுகள் பரத நாட்டிய, நாடக நிகழ்ச்சிகள் நடத்தியதால் இவருடைய கலையில் அனுபவ முதிர்ச்சி பளிச்சிடுகிறது. அடவுகளும், முத்திரைகளும் மிக லாகவமாகவும், சுத்தமாகவும் ஆரம்ப முதல் கடைசி வரையில் எந்தக் கட்டத்திலும் பிரகாசிக்கின்றன. நிருத்தியங்களில் அழகு நிரம்பி யிருக்கின்றது. காலப் பிரமாணம் சவுக்க கால நடையானாலும் துரித கால நடையானாலும் தவறுவதில்லை. அபிநயங்களும், உணர்ச்சி வேகத்துடன் விரிவாகவும், பாவப் பொலிவுடனும் அமைந்திருக்கின்றன. ''பாவயாமி'', ''காவாவா'' போன்ற கீர்த்தனைகளை சம்பிரதாய சுத்தமாக இதர பதங்களுடன் சேர்த்துக் கொண்டு தமது நடனங்களுக்கு விசேஷப் பொலிவை அளிக்கிறார். உணர்ச்சியை அநாயாசமாக வெளிக் காட்டும் திறன் குமாரி கனகாவின் நடனங்களுக்குத் தனிச் சிறப்பை யூட்டுகின்றன.

பரத நாட்டியத்துடன் கதக் நடனமும் குமாரி கனகா பயின்றிருப்பது அவருடைய கலையார்வத்துக்குச் சான்றாகும்.

அவருடைய பரதக் கலை மேன் மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் என்று நம்பலாம். குமாரி எஸ். கனகாவின் வண்ணப் படத்தை இவ்வார அட்டையில் மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.




அதிர்ச்சியை ஏற்படுத்திய துப்பாக்கி ஒலிக்குப் பிறகு எல்லா விளக்குகளும் ஏற்றப்பட்டன. பிரமிப்பு நீங்காத நிலையில் அத்தனை பேரும் பரபரப்புடன் காணப்பட்டனர்.
அடுத்த வினாடி எல்லோரது கவனமும் கீழே கிடந்த நந்தகோபாலின் மீது பதிந்தது. குண்டு துளைத்த அவன் பொட்டிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.
உங்கள் கணவரின் அறைக்குள் நீங்கள் நுழைந்த போது அங்கிருந்தவர் நந்தகோபால் தான் இல்லையா? சொல்லுங்கள் மேனகா. இனி எதையும் மூடி மறைப்பதில் பயனில்லை.
ஆமாம்... என் கணவருடைய மேஜை டிராயரிலிருந்து ஏதோ காகிதங்களை எடுத்துக் கிழித்துக் கொண்டிருந்தார். அப்போது நான்... நான்.
மதுவின் மயக்கத்திலிருந்தீர்கள், அப்படித் தானே?
ஆமாம்...
...அவர் தான் சொன்னார். என் கணவரைக் கொன்றது மல்லிகா தான் என்று. 'உன் மீது சந்தேகப் படுவார்கள். ஆனால் நான் சொல்கிற படி கேட்டால் நீ எவ்விதத்திலும் பாதிக்கப் படாதவாறு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்றார்.


இனி நீங்கள் போகலாம் மேனகா. காலங் கடந்தாவது உண்மைகளை உள்ளபடி கூறினீர்களே.
இன்ஸ்பெக்டர், நந்தகோபாலின் இடது கையிலே ஒரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்த காயம் இருக்கும் பாருங்கள். அதுவும் என்னால் ஏற்பட்டது தான்...
மேனகாவை அவள் வீட்டில் சந்தித்து இதே உண்மையை வெளிக் கொண்டு வர முயன்று கொண்டிருந்த போது வெளியிலிருந்து ஒருவர் என்னைச் சுட்டார் என்றேனே, அது நந்தகோபால் தான்.
முனிசாமியை நீங்கள் விசாரித்துக் கொண்டிருக்கும் போது, நந்தகோபாலின் கையிலிருந்து வழிந்த ரத்தம் என் கவனத்தைக் கவர்ந்தது.
... இதெல்லாமிருக்கட்டும். நீங்கள் உடனே கவர்னரோடு தொடர்பு கொண்டு மல்லிகாவின் மரண தண்டனையை நிறுத்தச் செய்யுங்கள். அதோ அவர்... கலியபெருமாளைக் கைது செய் யுங்கள்... நான்.. நான்.. எல்லாம் விவரமாக...
நந்தகோபாலின் துப்பாக்கி குண்டு சதீஷின் தோளில் பாய்ந்திருந்தது. அதை அவன் வெளிக் காட்டிக் கொள்ளா விட்டாலும், ரத்தப் பெருக்கு அவனைப் பலஹீனமாக்கி நினைவிழக்கச் செய்து விட்டது.
என்னாத்தைப் பார்க்கிறே, ஓடிப்போய் டாக்டரை அழைத்து வா. ஏய், கோபால்! ராஜ்பவனுக்குப் போன் போடச் சொல்லு. சீக்கிரம்...
தொடரும்

ஆரோக்கியம் அழைக்கிறது

உடல் என்னும் நிறுவனத்தின் பூரண நிர்வாகி, மூளை. உடலுக்கு மட்டுமின்றி, மனத்துக்கும் தலைமையகமான மூளை, கபாலம் என்னும் உறுதியான பேழையில் பத்திரமாகப் பொருத்தப்பட்டுள்ளது. உடலின் பெரிய உறுப்புக்களுள் ஒன்று இது. எடை ஒன்றேகால் கிலோவுக்குச் சற்று அதிகம். பெண்களுக்குச் சற்றே குறைவு!

மூளையும் முதுகுத் தண்டும் நரம்புகளும் இணைந்த தொடர்புடையன. உடலின் உறுப்பு ஒவ்வொன்றுக்கும், ஏன் அவற்றின் ஒவ்வொரு செயலுக்கும் மூளையில் பிரதிநிதி உண்டு. இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கும் போது நேரும் எல்லா இயக்கமும் உங்கள் மூளையின் கட்டளையினால் நேர்வனவே. கை, பத்திரிகையைப் பிடிக்க அதுவே காரணம்; கண் பார்ப்பதோ, எழுத்தைப் புரிந்து கொள்வதோ, உதடு அசைவதோ, படித்துப் பொருள் உணர்வதோ, படித்ததைப் பற்றி அபிப்பிராயம் கொள்வதோ — எல்லாம் மூளையின் ஏவலே.

தலைமையகத்திலே

மூளையின் முக்கிய பகுதிகள் மூன்று: சிறு மூளை, நடு மூளை, பெரு மூளை. கபாலத்துக்கும் மூளைப் பகுதிகளுக்கும் இடையே மூன்று காப்பு — உறைகள் உள்ளன. இந்த உறைகளுக்கு இடையே அகழிப் பாதுகாப்பது போல் சவ்வு நீர் உண்டு. இவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய உறுப்புத்தான் மூளை. ஒவ்வொரு நரம்பு அணுவும், ஒரு வட்டமும், ஒரு வாலும் கொண்ட அமைப்பு. இந்த வடிவ அமைப்பால், ஒவ்வொன்றும் இன்னும் பத்து அணுக்களுடன் எப்படியேனும் இணையக்கூடியது. இப்படி எத்தனை அணுக்கள்! இந்தியாவில் இன்று இருக்கும் மக்கள் தொகையைப் போல் இரண்டு மடங்கு எண்ணிக்கை நரம்பு அணுக்கள் ஒவ்வொருவர் மூளையிலும் இருக்கிறது!


மூளையின் ஒவ்வொரு நரம்பு அணுவுக்கும் ஒரு குறிப்பிட்ட பணி உண்டு. ஆனால் எதுவுமே மற்ற அணு எதற்கும் தடையில்லாமல் பணியாற்றும். இந்த அனுசரணை வியக்கத்தக்க ஒன்று. நமது மூளை நரம்பு அணுக்களைப் போன்ற அனுசரணையோடு நாட்டு மக்கள் வாழ்ந்தால் போதுமே. உடல் உறுப்புக்களின் பிரதிநிதியாக நரம்புஅணுக்கள் இயங்கும் அத்தனை பொறுப்போடு நாட்டு மக்களின் பிரதிநிதிகளும் இயங்கி வந்தால் வேறு என்ன வேண்டும்?

உடலுறுப்புக்களின் தேவையை உணர்வது மூளை. அத்தேவைகளைத் தீர்க்கும் வாய்ப்புக்களை அறிவதும் அதுவே. அறிந்து, பூர்த்தி செய்வதும் அதுவே. புலன்களின் மூலஸ்தானம் அது.

பிறக்கும்போது சிறிதாக இருக்கும் மூளை, குழந்தையின் மூன்று நான்கு வயதுக்குள் தேவையான அளவு வளர்ந்து விடுகிறது. அதன் பிறகு பயிற்சியாலும் பழக்கத்தாலும் அது திறமையடைந்தபடி இருக்கிறது.

பிற உடல் உறுப்பு அணுக்களுக்கும் மூளை உயிர் அணுக்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் சில உண்டு. மூளை அணுக்கள் எவ்வளவு உழைத்த போதும் அயராதன. ஓய்வறியாமல் உழைக்கவல்லன. சொல்லப் போனால் நாம் உறங்கும்போதும் வேறு வேலை பார்க்கும் போதும் மூளை அணுக்கள் தொழிலாற்றியபடி இருக்கின்றன. பிற உடல் உறுப்புக்கள் சேதமடைந்தாலோ நோயுற்றாலோ செப்பனிட முடியும். மீண்டும் அந்த உறுப்பு அணுக்கள் புதுப்பிக்கப்படும், வளரும். ஆனால் மூளை நரம்பணுக்கள் சேதமடைந்தால், அவ்வளவுதான். புதுப்பிக்க முடியாது; ஒட்ட வைக்க முடியாது.

இந்த அபூர்வத் தன்மைக்கு ஏற்பத்தான் இயற்கை இதற்குப் பலத்த பாதுகாப்பு அமைத்திருக்கிறது. வெளிக் கவசமும் போர்வை உறைகளும் ஒரு வகை பாது



ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் 'ஹெல்மட்' அணிய வேண்டியது அவசியம், தலைக்கு வந்தாலும் தலைப் பாகையோடு போகும் அல்லவா?

காப்பு; இரத்தத்திலோ உணவிலோ உடலுக்குக் கேடு விளைவிக்கும் விஷப் பொருள்கள் சேர்ந்தாலும் அவை மூளையை எட்டு முன்பே தடுக்கும் பாதுகாப்பும் உண்டு.

பெரு மூளையும் நடு மூளையும் பெரும்பாலும் நரம்பணுக்களாலேயே ஆனவையாதலால் பழுப்பாக இருக்கும்; சிறு மூளையோ நரம்பு நார் — இழைகளின் மிகையால் வெளுத்துக் காணும். தசை இயக்கங்களையும் உடல் தடுமாறாமல் இருப்பதற்கான இயக்கங்களையும் இதுவே கவனித்துக் கொள்கிறது. உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று இணைந்து பணியாற்றுவது சிறு மூளையால்தான். இல்லாவிட்டால் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது!' ஆமாம். கை எடுக்கும் பொருள் குறி தவறாது வாய்க்குச் செல்வது போன்ற இணக்க இயக்கங்கள் இந்தச் சிறு மூளையின் சாதனைகளே.

நடு மூளை என்னும் பகுதியை மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பொதுவான குணமுள்ள உறுப்பு. சாதாரண விலங்குகளின் அடிப்படைத் தேவைகளையும் உயிர் வாழ்வதற்கு அவசியமான உணர்ச்சிகளையும் பிரதிபலிப்பது இது. பசிக்கச் செய்வதும், புசிக்கச் செய்வதும் இதுவே; உடலின் உஷ்ணத்தைத் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஏற்றி இறக்குவது இதுவே; கோபமும் ஆசையும் அன்பும் போன்ற அடிப்படை உணர்ச்சிகள் பிறப்பது இங்கேதான். பல லட்சம் ஆண்டுகள் பரிணாமத்தில் உருவான உறுப்பு இது.

பெருமூளை என்னும் பகுதி, மனித வளர்ச்சியின் சின்னம். மனிதன், 'மனிதத்வம்' பெறுவது இதனால்தான். அறிவும் புத்தி சாலித்தனமும் நினைவும் புத்தி நிதானமும் அடக்கமும் முன் யோசனையும் போன்றவை இதன் பொறுப்பு. இந்த இயல்புகளின் வளர்ச்சி தீவிரப் பயிற்சியே.

உருவத்தில், பெருமூளை பிளவுபட்டு, இரண்டு தனித் தனிப் பகுதிகளாக அமைந்து தோன்றும். ஆனால் ஒன்றாய் இணைந்ததே. ஒவ்வொரு பகுதியிலும் நான்கு கொத்துக்களை ஒன்று சேர்த்து வைத்தது போலக் காணப்படும். வலது பகுதி மூளை உடலின் வலதுபுற உறுப்புக்களையும் நிர்வகிக்கின்றன. பார்ப்பது, கேட்பது, பேசுவது, ருசிப்பது போன்ற ஒவ்வொரு செயலுக்கும் மூளையின் குறிப்பிட்ட ஒரு பகுதி பொறுப்பேற்று நடத்துகிறது. உடல் உணர்ச்சிகளை அறிந்து, உடல் இயக்கங்களுக்கு ஏற்ற கட்டளை இடும், அந்தந்தப் பகுதி மூளை. நீடித்த ஆராய்ச்சிகளின் பலனாக எந்த எந்தப் பகுதி, எந்த எந்த இயக்கங்களுக்குப் பொறுப்பு என்பதை உணர்ந்து வருகிறார்கள்.

மூளையில் உள்ள இண்டு இடுக்கில் பரவி, முதுகுத் தண்டு நரம்பையும் ஒட்டிப் பாயும் 'செரிப்ரோ — ஸ்பைனல்' திரவம் நரம்புகளின் ஆரோக்கியத்தைப் பார்த்துக் கொள்ளும் ஜீவரசம். ரத்தத்திலிருந்து சுரக்கப்படுவது இது; நரம்புகளின் இயல்பை அறிய இந்தத் திரவத்தை உறிஞ்சி எடுத்துச் சோதனை செய்கிறார்கள். சிறுநீர்ப் பரிசோதனையும்; ரத்தப் பரிசோதனையும் சாதாரணமாகிவிட்டது போல, அடி முதுகிலிருந்து எடுக்கப்படும்



மூளை, இருதயம், மூத்திரக்காய் போன்ற முக்கியமான உறுப்புக்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை எளிதில் புலப்படுத்தும் 'எக்ஸ்ரே'.

இந்த லம்பார் பங்க்ச்சர் சோதனையும் மூளை நரம்புச் சிகிச்சையில் சாதாரணம். (அபூர்வமாக, கபாலப் பகுதியிலேயே ஊசி போட்டு இந்தத் திரவத்தை உறிஞ்சி எடுப்பதும் உண்டு.) இந்த நீர்ச் சோதனையால் நிபுணர்கள் பல முக்கியமான விவரங்களை நுட்பமாக அறிந்து ஏற்ற சிகிச்சை அளிக்க முடிகிறது.

மூளை சுறுசுறுப்பாக இயங்க முக்கிய தேவை என்ன? ரத்தத்திலிருந்து ஏராளமான பிராண வாயுவையும் குளுகோஸையும் ஏற்று வளம் பெறுகிறது மூளை. இவை குறைந்தால் மூளையின் செயல் திறன் பாதிக்கப்படும். விஷக்காற்றுச் சூழ்நிலையில் மயக்கம் வருவது இதனால்தான்; பசியால் உடல் வாட, குளுகோஸ் இல்லாமல் மூளை வாட, மயக்கம் வருகிறது. ரத்தத்தின் சில பெரும் இடர்கள் மூளையைப் பாதிக்கின்றன.

கால் கை வலிப்பு என்னும் காக்காய் வலிப்பு நேர்வது, மூளைப் பகுதி நரம்பணுவின் நோய் அடையாளமே. நரம்பு அணுத் துடிப்பின் காரணமாகத்தான் உடலின் ஒரு பக்கத்தில் மட்டும் இழுப்பு வரும் பாரிச வாயு நேர்கிறது. ரத்த அழுத்த மிகையாலோ மூளைப் பகுதியில் ரத்தம் கட்டிக் கொண்டதாலோகூட பாரிச வாயு நேர வாய்ப்புண்டு. காரணம் அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.

ஒரு நகரமெங்கும் மின் சக்தி அளிக்கும் மின்சக்தி நிலையம் போல, உடலின் உள்ளும் புறமும் இயக்கங்களை நடத்தும் மின்சக்தி நிலையம் மூளை. மூளை நரம்பு இயக்கத்தை மின்சக்தியை அளக்கும் கருவிகளால், நுட்பமாக அளக்கிறார்கள். E E G என்ற இந்தச் சாதனமும் எக்ஸ்ரே சாதனமும், முதுகுத்தண்டு நீர்ச் சோதனை போன்ற இன்னும் சில சோதனைகளும் இன்று பழக்கத்தில் இருப்பதால், மூளை நோய்களும் இடர்களும் சிகிச்சைகளுக்குக் கட்டுப்படுகின்றன. ஸ்டீரியோடாக்ஸி என்ற சிகிச்சை மூலம் மூளையின் குறிப்பிட்ட ஒரு சிறு பகுதியைக் குறிபார்த்துக் கபாலத்தின் வழியே ஊசி செலுத்தி, நிபுணர்கள் ரண சிகிச்சை செய்து விடுகிறார்கள். வலிப்பு, கோப மிகை போன்ற நரம்பு இடர்

சளை இந்தச் சிகிச்சை கட்டுப்படுத்தி, நீக்குகிறது. ஆசியாவிலேயே (ஜப்பான் நீங்கலாக) பெரிய அளவில் இந்தச் சிகிச்சை சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிப் பிரிவான நியூராலஜி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறுகிறது. சென்ற பத்து பன்னிரண்டு ஆண்டுகளில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு இந்தச் சிகிச்சை கொடுக்கப்பட்டிருக்கிறது.

மூளையைப் பற்றும் நோய்கள் சில:

கபாலம் மற்றும் முதுகுத் தண்டை அடுத்த மெனின்ஜஸ் என்னும் உள் உறைகளின் ஊடே புண் வருவதும், நீர்கோத்து வீங்கிக் கொள்வதுமே 'மெனின்ஜைட்டிஸ்' என்னும் விஷகரம். வைரஸ் விஷக்கிருமிகளால் நேர்வது இது. சற்றும் தாமதியாமல் தகுந்த சிகிச்சை பெற்றாக வேண்டிய நோய் இது.


குழந்தைகள் சிலவற்றுக்கு மண்டை பெரிதாகிக் கொண்டே யிருக்கும். காரணம், மூளை பெரிதாவதால் அல்ல. மண்டை யோட்டின் உள்ளே நீர்ச் சொரிவு மிகுந்தபடி இருப்பதுதான். செரிப்ரோஸ்பைனல் நீர் மிகுதியின் அடையாளம். சிகிச்சை செய்து நீர்ச் சொரிவைக் கட்டுப்படுத்திக் குணப்படுத்தலாம். ஆனால் பெரிதாகிய மண்டை யோட்டைச் சுருங்க வைப்பதுதான் முடியாது.

மூடாத கபாலத்துடன் குழந்தை பிறந்தால், விபத்திலோ வேறு காரணத்தாலோ கபாலத்தில் ரத்தம் கட்டிக் கொண்டால் விபத்துக்களில் மூளைக்குள் கபால எலும்புத் துண்டுகள் நொறுங்கிப் போயிருந்தால்— இத்தகை நிலைகளில் மூளைக்கு ரண சிகிச்சை தேவை.

இயற்கை மூளைக்கு வழங்கிய கபாலம் என்னும் கவசம் ஒரு காப்பாகத்தான் இத்தனை காலமாகப் பயன்பட்டது. ஆனால் இன்றைய' மனிதனின் நவீன வேகங்களுக்கு ஈடுகொடுக்க இயற்கையின் கவசம் போதவில்லை. எனவேதான் ஸ்கூட்டர் ஓட்டிமுதல் விண்வெளிப் பயணி வரையில் 'ஹெல்மட்' அணிய வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர் அனுபவ வைத்தியர்கள். விபத்து நேர்ந்தாலும் . தலைக்கு வந்தது ஹெல் மட்டோடு போகும் அல்லவா?

ஆலோசனை: டாக்டர் பி. ராமமூர்த்தி

கட்டுரை: தம்பி சீனிவாசன்



வெகு காலத்துக்கு முன்னர், குன்சாக் என்னும் கிராமத்தில் சங்கிரே என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு பணக்காரர். எல்லாரும் அவரை மதித்தனர். அவருக்கு ஒரே மகன்; எனவே அவன் உதவாக்கரையாக இருந்தான். அந்தக் கிராமத்தில் உள்ள எல்லோரையும் போல் அவன் உழைக்க வேண்டும் என்றும், நல்லவனாக வளர வேண்டும் என்றும் சங்கிரே விரும்பினார். ஆனால் அவன் சோம்பேறியாக இருந்தான். அவனது சொந்தக்காரர்களும் தந்தையின் நண்பர்களும் அவனை உதவாக்கரையாக்கினர்.

ஒருநாள் சங்கிரேக்குக் கடும் நோய் கண்டது. மருந்துகள் பயனளிக்கவில்லை. அவரது உறவினர்களும், நண்பர்களும் அவரிடம் கேட்டனர்:

"நீங்கள் குணமடைய நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"நேர்மையான உழைப்பால் என் மகன் ஐந்து ரூபிள் சம்பாதிக்க வேண்டும்; 'அப்பா! எடுத்துக் கொள்ளுங்கள்' என்று என்னிடம் அந்தப் பணத்தை அவன் கொடுக்க வேண்டும். அப்போது என் நோய் குணமாகி விடும்."

இரண்டு நாட்கள் கழிந்து, மகன் தந்தையைப் பார்க்க வந்தான்; அவரிடம் ஐந்து ரூபிள் நோட்டைக் கொடுத்தான்.

"அப்பா, எடுத்துக் கொள்ளுங்கள், மரம் அறுத்து இதைச் சம்பாதித்தேன்."

அந்தப் பணத்தையும், மகனையும் மாறி மாறி அவர் பார்த்தார். பிறகு அந்தப் பணத்தை நெருப்பில் வீசினார். மகனிடம் எந்த உணர்ச்சியும் காணோம். பேய் அறைந்தாற்போல அவன் முகம் வெளுத்தது.

உண்மையில் அவன் மாமா கொடுத்த பணம் அது.

சில நாட்களுக்குப் பிறகு மகன் மீண்டும் தந்தையிடம் வந்தான். அவரிடம் ஐந்து ரூபிள் நோட்டைக் கொடுத்தான்.

"ரோடு போடும் கூலியாக வேலை செய்து இந்தப் பணத்தைச் சம்பாதித்தேன்."

அந்தப் பணத்தையும், மகனையும் மாறி மாறிப் பார்த்தார் தந்தை. பிறகு, அந்த நோட்டைக் கசக்கி ஜன்னல் வழியாக வெளியே எறிந்தார்.

மகனிடம் எவ்வித உணர்ச்சியும் இல்லை. அந்தப் பணத்தைக் கொடுத்தவர், அவன் தந்தையின் நண்பர்.

மூன்றும் தடவையாக மகன் தந்தையிடம் வந்தான்; அவரிடம் ஐந்து ரூபிள் நோட்டைக் கொடுத்தான். அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் அவர் அந்த நோட்டை வாங்கினார். துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தார். மகன் ஓடிப் போய் அந்தத் துண்டுகளை ஒட்டி வைத்துக் கொண்டு தந்தையைப் பார்த்துக் கத்தினான்.


"கையெல்லாம் காய்த்துப் போக, ஸாயங்களைச் சுத்தம் செய்து நான் சம்பாதித்த பணம் அது. சாதாரணத் தாளைப் போல் அதைக் கிழித்துப் போடுகிறீர்களே!"

"மகனே! புரிகிறது. உண்மையிலேயே நீ சம்பாதித்த பணம் தான் இது" என்று மகிழ்ச்சி அடைந்தார், தந்தை. மகன் முதுகில் தட்டிக் கொடுத்தார். படிப்படியாக அவர் உடம்பு குணமடைய ஆரம்பித்தது. வெகு விரைவில் அவர் பரிபூரண ஆரோக்கியம் பெற்றார். - ரகுல்கம்சதோவ்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

சிறுதரத் தொழிலதிபர்களுக்கு

பெருமளவு உதவி!



நீங்கள் ஒரு சிறுதரத் தொழிலதிபராயிருந்தால் அல்லது அவ்விதம் ஆவதற்கு விரும்பினால், விரைந்து வந்து உங்கள் திட்டங்கள் பற்றி யூகோ பாங்க்கின் எந்த ஒரு கிளையுடனாவது கலந்தாலோசியுங்கள்.

ரூ. 10,000 வரையிலான கடன்களுக்கு 7½% வருட வட்டியும், ரூ. 10,000 லிருந்து ரூ. 25,000 வரை 8½% வருட வட்டியும், ரூ. 25,000 முதல் 1,00,000 வரை 9½% வருட வட்டியுமே நீங்கள் கொடுக்க வேண்டி வரும். ரூ. 1,00,000க்கு மேலான கடன்கள் பற்றிய விவரங்களுக்கு அருகிலுள்ள எங்களது கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

UCOC-21 TAM

தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு
லாபகரமாக உதவுகிறது

யூனைடெட் கமர்ஷியல் பாங்க்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)



mcm/dcm/912